கல்கி

KALKI 8.10.89 ரு. 2.50



தாழ்ந்து வரும் கல்வித்தரம்!

சேஸாரி கலெக்ஷனின் சூட்டிங்ஸ்



பாலியெஸ்டர் வுல், ஓர்ஸ்டெட் மற்றும் பாலியெஸ்டர் ப்ளெண்டெட் சூட்டிங்குகள்

கருணையின் உறைவிடம்...



சமீபத்தில் ஸித்தியடைந்த சிருங்கேரி மகா சன்னிதானம் ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த ஸ்வாமிகள் பற்றி நமக்கு இங்கு சொல்பவர் வி. வைத்தியநாதன். வைத்தியநாதனின் அப்பா வைத்தி சுப்பிரமணிய அய்யர். பல்லாண்டுகளாகச் சிருங்கேரி ஸ்ரீ மடத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள குடும்பம்.

மகா சன்னிதானம் சமயத் தலைவர் என்பதோடு, கருணையின் உறைவிடம். அவரது கருணைக்கு ஓர் எடுத்துக்காட்டு, தாம் மகா சன்னிதானமாக இருந்தாலும் மற்றவர்களுடைய கருத்துக்கு மதிப்பளித்ததாகும். ஒரு சமயம் பம்பாயில் வித்வத் சதஸ் நடந்து கொண்டிருந்தது. ஒரு பண்டிதர் பேசும் போது எழுப்பிய சில கருத்துக்கள் விவாதத்துக்குரியவையாகி விட்டன. மற்ற பண்டிதர்கள், ''மகா சன்னிதானம் இருக்கும் போது இதுபோன்ற கருத்துக்களைத் தெரிவிக்கலாமா? அபசாரமல்லவா?'' என்றனர். எல்லோரையும் சைகையால் அடக்கிய ஸ்வாமிகள், அவரைப் பேசி முடிக்க அனுமதித்தார். பிறகு, தாம் பேச ஆரம்பித்தார். ஆதிசங்கரரை மேற்கோள் காட்டி அவர் ஆற்றிய அமைதியான உரை, அந்தப் பண்டிதருக்குப் பதில் சொல்வது போல அமைந்தது. அவர் உருகிப் போய் விட்டார்!

OO மகா சன்னிதானத்திடம் ஒருவர், ''காலம் மாறிக் கொண்டிருக்கிறது. நவீன வாழ்க்கைக்கு ஏற்ப நாம், நம்முடைய கலாசாரத்தை மாற்றிக் கொண்டு வாழ வேண்டும்'' என்று சொன்னார்.

அதற்குச் சன்னிதானம் ஒரு குட்டிக் கதை சொன்னார்:

ரொம்பக் கஷ்டப்படுகிற ஒருவன் திருட்டுக் குற்றத்தில் மாட்டிக் கொண்டான். அவனுடைய வக்கீல் நீதிபதியிடம், ''வறுமை காரணமாகத் திருடினான், வசதியுள்ளோரிடம்தான் திருடினான்'' என்று வாதிட்டார். அதைக் கேட்ட நீதிபதி, ''நீங்கள் சொல்லும் லாஜிக் (Logic) சரியாக இருந்தாலும் சட்டப்படி அவன் செய்தது தப்பு. எனவே, திருடனுக்குத் தண்டனை வழங்குகிறேன்'' என்றார். அது போல, வேதங்கள்தான் நமக்குச் சட்டங்கள்; அதன்படிதான் நாம் நடக்க வேண்டும். நாம் இஷ்டப்பட்டபடியெல்லாம் வாழ்ந்து விட்டு, பிறகு அதை நியாயப்படுத்த முயன்று வாதம் புரியக் கூடாது.

OO மகா சன்னிதானம் 1958ல் மதுரைக்கு வந்திருந்தார். என் அப்பா அவருடைய நண்பர் ஒருவரை அழைத்துக் கொண்டு சன்னிதானத்தைத் தரிசிக்க வந்தார். நண்பர் பிராமணரல்லாதவர். அப்போது அங்கு நிலவிய சூழலில் அந்த நண்பருடன் அப்பா சன்னிதானத்தை நெருங்க முடியவில்லை. நண்பர் வெளியிலேயே உட்கார்ந்து விட்டார். பூஜை முடிந்தது. சன்னிதானம் பிரசாதத்தை எடுத்துக் கொண்டு கூட்டத்தைப் பிளந்து கொண்டு வந்தார். யாரிடம் பிரசாதத்தைக் கொடுக்கப் போகிறாரோ என்று கூட்டமே ஏங்கியது. அவரோ என் அப்பாவின் நண்பரை அணுகி, பிரசாதத்தைக் கொடுத்து விட்டு மாடியேறிப் போய் விட்டார். கூட்டத்தில் ஒரே சலசலப்பு. மாடிக்குப் போனவர் மீண்டும் இறங்கி வந்தார். ''இங்கே என்ன சலசலப்பு? நான் குறிப்பிட்ட வகுப்பினருக்குக் குருவா? அல்லது ஜகத்குருவா...?'' என்று கேட்டார். கூட்டம் வாயடைத்துப் போயிற்று.

OO விவசாயத்திலும் தோட்டக் கலையிலும் சன்னிதானத்திற்கு ஆர்வம் அதிகம். சென்னைக்கு வந்தால் ஜே. பண்ணைக்குப் போவார். நவீன விவசாய முறைகளை அறிந்து கொள்வார். சொட்டு நீர்ப்பாசன முறையைச் சிருங்கேரிக்குச் சொந்தமான தோட்டங்களில் வெற்றிகரமாக அமல்படுத்தினார். சன்னிதானம் ஸித்தி அடைந்த போது சிருங்கேரிக்குச் சென்றிருந்தேன். மடத்துச் சிப்பந்தி ஒருவர் ''இந்த மரம் செடி கொடிகளைச் சன்னிதானம் பராமரித்தது மட்டுமில்லை; நேசித்தார்'' என்றார். ஜகத்குருவின் அன்பு அப்படிப்பட்டது!

சந்திப்பு : **ப்ரியன்**

நல்லதைச் சொல்ல நடக்கிறார்கள்!



* சத்திய யாத்திரை.....



* நெல்லை ஜெபமணி.

எழுபத்தொரு வயதான நெல்லை ஜெபமணியை நாம் சந்தித்தபோது, எழுநூறு கி. மீக்கு மேல் நடந்து வந்திருந்தார்.

"எல்லோரும் கேட்கிறாங்க... எனக்குக் கால் கொப்புளிச்சுப் போச்சான்னு... 'நாமெல்லாம் மெய்யாலுமே சாமான்யனுங்க, எப்படிக் கொப்புளிக்கும்'னு திருப்பிக்கேட்டாலும்நம்பாமஎன்னோட காலைக் குனிஞ்சு குனிஞ்சு பார்க்கிறாங்க. பொறவு, ஆச்சரியமா இந்த வயசுல எப்படி இவ்வளவு தூரம் நடக்க முடியுதுன்னு கேட்கிறாங்க..." என்றார் பொக்கை வாய்ச் சிரிப்போடு!

ஒல்லியான தேகம். கதர் உடை. கையில் ஏர் உழவன் கொடி. தலையில் காவியும் பச்சையும் கலந்த (ஜனதா) குல்லா. காலில் நடந்து நடந்து தேய்ந்து போன மிகச் சாதாரண ரப்பர் செருப்பு. அவருடைய நடையின் சுறுசுறுப்பு நமக்கும் ஆச்சரியமளிக்கத்தான் செய்தது.

"எல்லாம் ஆன்ம பலம்தாங்க... காமராஜர் பிறந்த தினமான ஜூலை 15—ஆம் தேதி சென்னையிலுள்ள காமராஜர் இல்லத்திலிருந்து புறப்பட்டது முதல் இன்று (செப்டம்பர் 15) வரை தவறாமல் தினமும் மகாத்மா வழியில் பிரார்த்தனை செய்துவிட்டுத்தான் இந்தச் சத்திய யாத்திரையையே துவங்குகிறோம். அந்தப் பிரார்த்தனை தரும் ஆன்ம பலம்தான். வேறென்ன...?" என்றார்.

"அன்று நடந்தது உப்பு யாத்திரை. இன்று நடப்பது சத்திய யாத்திரை! காந்திய வழியில் சத்தியம் மலர்ந்திட... காமராஜ் வழியில் அரசியல் நடந்திட தியாகத் தலைவன் ஜெபமணி தலைமையில் நல்லதைச் சொல்ல நடந்து வருகிறோம்...!" என்று ஒலிபெருக்கியில் ஒருவர் சொல்ல, யாத்திரை ஆலங்குளத்திலிருந்து புறப்பட்டது. நாமும் அவர்களோடு நடந்து கொண்டே பேசினோம்.

"இப்படியொரு பாத யாத்திரைக்கான அவசியம் என்ன?"

"தியாகம், சேவை, ஒழுக்கம், நேர்மை, நாணயம் போன்ற நல்ல குணங்களே இன்றைய அரசியலில் இல்லாமல் போய் விட்டது. பதவி ஆசையும் பணத்தாசையும்

மிக்க சுயநலமே மேலோங்கி விட்டது. இவற்றையெல்லாம் மக்களுக்கு எடுத்துச் சொல்வதோடு மதுவின் தீமைகளையும் மக்களிடம் எடுத்துச் சொல்வதற்குத்தான் இந்த யாத்திரை. அதனால்தான் காமராஜ் பிறந்த தினத்தில் சென்னையில் துவங்கி, காந்தி ஜெயந்தியன்று கன்னியாகுமரியில் முடிக்கிறோம்.''

''உங்களது இந்தச் சத்திய யாத்திரைக்கு மக்கள் வரவேற்பு எப்படி?''

''நன்றாக இருக்கிறது. ஒருநாள் உணவுக்குக் கூட நாங்கள் பணத்தை மடியில் கட்டிக் கொண்டு புறப்படவில்லை. ஆனால், இதுவரையில் நாங்கள் பட்டினியும் இருக்க நேரிட்டதில்லை. காரணம் ஏழை, எளிய மக்களின் அன்பும் ஆதரவும் தான்.''

''அகில இந்திய ஜனதாக் கட்சி இன்று ஜனதா தளமாக உருவெடுத்திருக்கிறபோது, தமிழக ஜனதாவிலும் பெரும்பாலானவர்கள் ஜனதா தளத்தில் இணைந்து விட்ட பிறகு, நீங்கள் மட்டும் இப்படித் தன்னந்தனியான தீவு போல இன்னும் ஜனதாவாகவே இருக்கக் காரணம் என்ன?''

''தனிநபர் எதேச்சாதிகாரத்தையும் ஊழலையும் ஒழிப்பதற்காகவே இந்திரா காங்கிரஸுக்கு எதிராக ஜனதா தளம் உருவானது. ஜனதா, லோக்தளம், ஜனமோர்ச்சா என்று தனித்தனியாகப் பிரிந்து கிடந்தால் இ. காங்கிரஸை ஆட்சிப் பீடத்திலிருந்து இறக்க முடியாது என்பதை உணர்ந்து அனைவரும் இணைந்து 'ஜனதா தளம்' என்று உருவாக்கியது சரி. அதன் பிறகு, எதிர்க்கட்சிகளின் வாக்குகள் சிதறாமலிருக்கப் பாரதிய ஜனதாவுடனும், கம்யூனிஸ்ட் கட்சியுடனும் தொகுதி உடன்பாடு கொள்ள முயன்றதிலும் தவறில்லை. ஆனால், தேசிய முன்னணி என்ற தேவையில்லாத ஓர் அமைப்பைத் தோற்றுவித்து அதில் என். டி. ஆரையும், கருணாநிதியையும் ஏற்றுக் கொண்டது ஜனதா தளத்தின் நோக்கத்திற்கே எதிரானது. இவர்கள் இருவருமே தனிநபர் எதேச்சாதிகாரம் இல்லாதவர்கள் அல்லர். இருவரின் கட்சிகளுக்கும் ஊழலுக்கும் உறவில்லையென்றும் சொல்ல முடியாது. இந்நிலையில்தான் காமராஜரின் உண்மையான தொண்டர்களான நாங்கள், தமிழகத்தில் இன்னும் ஜனதாக் கட்சியாகவே தொடர்ந்து செயலாற்றி வருகிறோம்...'' என்றார் நெல்லை ஜெபமணி.

இதற்குள் மாறாந்தை என்ற கிராமத்தை அடைந்திருந்தோம். நல்ல வெயிலுக்கு இதமாக அங்கிருந்த மாந்தோப்பு ஒன்றில் 'அப்பாடா' என்று உட்கார்ந்தோம். ஓர் அன்பர் கொடுத்துதவிய தயிர் சாதப் பொட்டலங்கள் ஆளுக்கொன்றாக விநியோகிக்கப்பட்டன. அனைவரும் சாப்பிட்டு விட்டு பம்ப் செட் வாரிக் கொட்டிய கிணற்று நீரைக் குடித்தனர். சிலர் காலை நீட்டிப் படுத்தனர். சிலர் உட்கார்ந்தபடியே ஓய்வெடுத்தனர். சற்று நேரத்தில் மீண்டும் தங்கள் லட்சியப் பயணத்தைத் தொடர்ந்தனர்.

எந்த விதமான விளம்பரமும் பரபரப்பும் ஆளுயரப் போஸ்டர்களும் வரவேற்பு வளைவுகளும் இல்லாமல் இப்படியும் சில அரசியல்வாதிகள் ஒரு பொது நோக்கத்திற்காகத் தங்களை வருத்திக் கொண்டு பாத யாத்திரை செய்கிறார்கள் என்பது உண்மையிலேயே ஆச்சர்யமான விஷயம்தான்! சில நூறு பேர்களிடம் ஓர் ஆரோக்கியமான சிந்தனையைத் தூண்டினால் பாத யாத்திரை வெற்றிதான்!

சந்திப்பும், படங்களும்:

குளச்சல் இப்ராஹீம்


''லாட்டரிச் சீட்டு ஏஜெண்ட் பெண்ணைக் கல்யாணம் செய்துக்கிட்டது தப்பாப் போச்சு!''

''ஏன்?''

''மாசக் கடைசியானால் 'பருப்பு கடைசி நாள்' 'காப்பித்தூள் கடைசி நாள்' என்று ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு போர்டு எழுதி வைத்து விடுகிறாள்!''

— எஸ். பிரியதர்ஷினி.





தாழ்ந்து வரும் கல்வித்தரம்!

மத்திய அமைச்சர் ப. சிதம்பரம், முதல்வர் மு. கருணாநிதி — இருவருமே, தமிழகத்தில் கல்வியின் தரம் மிகவும் குறைந்துவிட்டது என்று அங்கலாய்த்திருக்கிறார்கள். இதற்கு என்ன காரணங்கள்? தரம் உயர என்ன செய்ய வேண்டும்? முன்னாள் கல்லூரிக் கல்வி இயக்குநர் என். அனந்தபத்மநாபனும், அண்ணா ஆதர்சக் கல்லூரி முதல்வர் திருமதி ராதா ராவும் இதுபற்றி உரையாடுகிறார்கள்:

அனந்த: கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் கல்வியின் தரம் குறைந்து விட்டதற்குக் காரணம், வகுப்பறையின் சூழல் மாறி விட்டது. குறிப்பிட்ட பாடத்தில் விருப்பமில்லாத மாணவன் அந்தப் பாடத்தையே படிக்க நேர்ந்து விடும் கட்டாயத்தினால், படிப்பில் சிரத்தை இல்லாமல் போய் விடுகிறது.

ராதா: எல்லோருக்குமே விரும்பிய பாடத்தை எடுத்துக் கொள்ளும் அதிர்ஷ்டம் இருப்பதில்லை. வீட்டிலே நிர்ப்பந்தம், குறிப்பிட்ட கோர்ஸில் இடமில்லை என்ற நிலை போன்றவை குறுக்கிடுகின்றன. ஆனால் எந்தப் பாடத்தை எடுத்துக் கொண்டாலும், அதுதான் என் விருப்பம் என்று மாணவர்கள் தீர்மானித்துக் கொண்டால் நிச்சயம் நன்றாகப் படிக்க முடியும்.

அனந்த: அதற்கு போதனா முறையும் துணை செய்தால்தான் முடியும். ஆசிரியர்களின் போதனா முறை மாறவேயில்லை. ஐம்பது வருஷத்துக்கு முன்னாலிருந்த லெக்சர் முறையையே பின்பற்றுகிறார்கள். ஒரு மணி நேரம் பாடம் சொல்லிக் கொடுத்தோமே, எத்தனை மாணவர்கள் அதைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று அறிய அக்கறையே கிடையாது. இந்த வகை போதனா முறையை மாற்றினாலன்றி விமோசனம் இல்லை. ஒரு கணிதக் கோட்பாடு அல்லது நியூட்டனின் விதி என்று எடுத்துக் கொண்டால், ஐந்து–பத்து நிமிஷம் சொல்லிக் கொடுத்து விட்டு, இரண்டு மூன்று கேள்விகள் கேட்க வேண்டும். புரியவில்லையா? வேறு உதாரணங்கள் கொடுத்து, புரியும்படியாக மீண்டும் சொல்லிக் கொடுக்க வேண்டும். எல்லா மாணவர்களும் இதனால் புரிந்து கொள்ள முடியும். இப்படிச் செய்தால் நேரம் ஆகுமே என்று கேட்கலாம். ஆனாலும் பரவாயில்லை.

ராதா: போதனா முறையை மாற்ற வேண்டியதுதான்... ஆடியோ விஷுவல் முறை இருக்கிறது... ப்ராஜெக்ட்ஸ் நிறையக் கொடுக்கலாம். தன்னாலே படிப்பதற்கு அறிவைத் தூண்டி விட வேண்டும். படிப்பில் சுயநம்பிக்கை வேண்டும். அது எப்போது வரும்? ஆசிரியர்கள் மனமுதிர்ச்சி அடைந்தவர்களாய் இருக்க வேண்டும். மாணவர்கள் எப்படி எளிதாக பாஸ் பண்ண வேண்டும் என்று பார்க்கிறார்களோ, அது போல தற்காலக் கல்லூரி ஆசிரியர்கள் ஐந்து நிமிஷம் தாமதமாக வந்து, ஐந்து நிமிஷம் முன்னதாகப் போகிறவர்கள்தான் அதிகம் இருக்கிறார்கள். ஆசிரியர் முழுமையான நோக்கு உடையவராக இருக்க



வேண்டும். அவர்கள், தேர்வில் வரும் கேள்விகளுக்கு மட்டுமே விடையளித்து விட்டுப் போகும் மாணவர்கள் போல் இருக்கக் கூடாது. முழுதும் படித்தறிந்து, மாணவர் மனத்தில் சந்தேகங்களை எழும்பச் செய்து அவர்கள் அதை வெளிப்படுத்தும் போது, தீர்த்து வைக்கும் திறமையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். இன்வால்வ்மெண்ட் இருக்க வேண்டும்.

அனந்த: ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து, பணிக்கு அமர்த்துவதிலும் கல்வித் தரம் கூடவோ குறையவோ வாய்ப்பு இருக்கிறது. இப்போதுள்ள நமது ரெக்ரூட்மெண்ட் முறை சிறப்பானதாக இல்லை. சிறந்த ஆசிரியராக இருப்பவரைத் தேர்ந்தெடுக்கும் சூழ்நிலை, இப்போதில்லை. இப்போதுள்ள விதிமுறைகளின்படி அரசாங்கத்தின் தலையீடு எல்லாவற்றிலுமே இருக்கிறது.... நல்ல சம்பளம் கிடைக்கிறது என்று, இந்த வேலையில் ஆர்வமே இல்லாத பலர் இதற்கு வந்து விடுகிறார்கள்.

ராதா: ஒரு பிஸினஸ்மேன் ஒரு லட்ச ரூபாய் பிஸினஸ் பண்ணினால் பத்து பெர்செண்ட் கமிஷன் கிடைக்குமா என்று பார்க்கிறார். அதே ரீதியில், கல்வித் துறையில் நாம் 'பெஸ்ட் ராங்க் வாங்க வைத்து நமக்கு என்ன கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாகாது. ஏனென்றால் நமக்குக் கிடைக்கிற திருப்தி, மாணவனின் வெற்றிதான்; பணம் சம்பந்தப்பட்டது அல்ல அது. இப்போது நாலாயிரம் ரூபாய் சம்பளம் வருகிறது எனும் போது, பின் வாசல் வழியாகவும் நுழைந்து விடுகிறார்கள். ரிசர்ச் டிகிரி வேண்டும் என்று சொன்னால் கூட 'எம்.ஏ. போதுமே?' என்கிறார்கள். பள்ளிகளில் போதிக்க பி.எட்., எம்.எட். எல்லாம் வேண்டும் என்கிற அளவுக்குக் கூட இங்கே வேண்டாம் என்கிறார்கள். 'நீங்கள் சிறந்த ரிசர்ச் ஸ்காலராய் இருக்கலாம்; அதனால் நீங்கள் சிறந்த கல்லூரி ஆசிரியராக இருக்க வேண்டும் என்பதில்லை' என்கிறார்கள்!

அனந்த: இதற்கு நான் இரண்டு வழிகள் சொல்லுகிறேன். ஒன்று: ஆசிரியராக யாரை வேண்டுமானாலும் தேர்ந்தெடுங்கள். தேர்ந்தெடுத்த பிறகு, அவர்களுக்கு இரண்டாண்டுகள் புரோபேஷன் என்று உண்டு. இந்த இரண்டு ஆண்டுகளில் பல்கலைக் கழகத்திலிருந்து நிபுணரை அனுப்பி வைத்து அவரைப் பரிசோதித்துப் பார்க்கலாம். கல்லூரி முதல்வர், கல்லூரிக் கல்வித் துறைத் தலைவர், பல்கலைக் கழக நிபுணர் மூவரும் சேர்ந்து, இவருடைய பணி சரியாக இல்லை என்று தீர்மானித்தால், அவரைப் பணியிலிருந்து நீக்க நிர்வாகத்துக்கு உரிமை இருக்க வேண்டும். ஒரு நல்ல ஆசிரியர் இருந்தால் நிறைய மாணவர்கள் பயன்பெற முடியும். நல்ல ஆசிரியர் இல்லை என்றால், அவரால் பல மாணவர்கள் பாதிப்புக்கு உள்ளாகக் கூடும். அவர் வேறு பணிக்குச் செல்லலாமே.

இரண்டாவது, இப்போது எம்.ஏ., எம்.எஸ்.ஸி., பட்டம் வாங்கியவர்கள், கல்லூரியில் பணியாற்ற வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அவர்கள் ஆறு மாதம் பயிற்சி பெற்ற பிறகுதான் கல்லூரியில் சேர முடியும் என்று ஒரு கட்டுத்திட்டம் கொண்டு வரப்பட வேண்டும். எத்தனை மாணவர்கள் வகுப்பில் படிக்கிறார்கள், சூழ்நிலை என்ன, எந்த போதனா முறை சிறந்தது, என்ன உபகரணங்கள் சார்ட்டுகள் தேவை என்று முன்கூட்டியே அவர் தெரிந்து கொள்ள வகை செய்ய வேண்டும். இப்படி ஆறு மாதப் பயிற்சி அளித்து விட்டுத்தான் அவர்களைக் கல்லூரி ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும். திருப்தியாக இல்லை என்றால் வெளியேற்ற அதிகாரம் இருக்க வேண்டும். இது கல்வித் தரம் உயர வழி செய்ய முடியும்.

ராதா: பயிற்சி தவிர, வேல்யூஸ், ஹ்யூமன் ரிலேஷன்ஸ் இவையும் தேவை. ஒரு மாணவன் காப்பி பண்ணுகிறான். அது பெரிய குற்றம்தான். ஆனால் அவனைத் தண்டிக்கும் போது, அவன் மறுபடி அந்தக் குற்றத்தைச் செய்யாத அளவுக்கு அவன் திறமையை வளர்க்க வேண்டும் என்று யாரும் எண்ணுவதில்லையே? கவனி, கவனி என்று வகுப்பறையில் சொல்லுகிறோம். ஏன் கவனிக்க மாட்டேன் என்கிறார்கள் என்பதை மறந்து விடுகிறோம். மாணவர்களின் சைக்காலஜியைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அதற்கேற்ப அவர்களைக் கவரும் விதமாகப் பாடம் சொல்லித் தர



வேண்டும். மாணவர்களிடம் நல்ல பெயர் வாங்கவேண்டும்என்றஆர்வம்ஆசிரியருக்கு இருக்க வேண்டும்.

அனந்த: கல்லூரிகளில் கல்வித் தரம் குறைந்து விட்டது என்பதற்கு ஆசிரியர்கள் மட்டுமே காரணம் என்று சொல்ல முடியாது. மாணவர்களுடைய படிப்பார்வத்தை வளர்க்கும் சூழல் இப்போது வீட்டிலோ அல்லது ஹாஸ்டலிலோ இல்லை. இரண்டாவது, ஆசிரியர்களுக்கு இன்–சர்வீஸ் ட்ரெயினிங் என்று, சமீபத்திய ஐந்தாண்டுகளில் அவரவர் துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சி பற்றி அவர்கள் அறிந்துகொள்ள வகை செய்ய வேண்டும். 1950ல் படித்ததையே சொல்லிக் கொடுத்தால் என்ன பயன்? மூன்றாவது, பல்கலைக் கழகங்கள் தேர்வுகள் நடத்துவது பற்றிய பிரச்னைகள் இருக்கின்றன. அதைப் பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

ராதா: தியரி எக்ஸாம் என்று வரும் போது எல்லாம் ஒரே மாதிரி ஸ்டீரியோடைப். இதை எப்படி மாற்றி அமைப்பது என்று தெரியவில்லை. பரீட்சைகள் என்றாலே ஒருவித டென்ஷனும் பயமும் இருக்கிற சூழ்நிலை மாற வேண்டும். ஒரு எல்.கே.ஜி. குழந்தை கூட 'எனக்கு நாலு நாள் எக்ஸாம்' என்று பயத்துடன்தான் சொல்லுகிறது. இதையே மாற்றி, கற்றுக் கொள்ளுதல் என்பது, கற்பவரும்–கற்பிப்பவரும் சம பங்கு கொள்ளுவதாக அமைந்தால் நல்லது. பெற்றோருக்கும் ஒரு குறிப்பிட்ட பங்கு உண்டு. என்ன கற்றுக் கொண்டாய் என்று தங்கள் அறிவாற்றலை விருத்தி செய்து கொள்ள விரும்புவது போல பெற்றோர் மாணவர்களைக் கேட்க வேண்டும். அதன் மூலம் எப்படி முன்னேற்றம் இருக்கிறது என்று கணிக்க வேண்டும். மகிழ்ச்சியை வெளிப்படுத்த வேண்டும் அல்லது அனுதாபத்தை அளித்து ஊக்குவிக்கவும் வேண்டும்.

அனந்த: கேள்வித் தாள்களைத் தயார் செய்து மாணவர்களைக் கண்காணிப்பதிலிருந்து, தேர்வுகள் நடத்தி, மதிப்பெண்கள் வழங்குவது வரை இப்போதுள்ள முறையில் பல குறைபாடுகள் உள்ளன. வினாத்தாள் கடுமை என்ற கூக்குரல் சில சமயம் ஏன் எழுகிறது? குறிப்பிட்ட சில கல்லூரி விடைத்தாள்களுக்குக் குறைந்த மதிப்பெண் போட்டுத் திருத்துவது என்பது நடப்பதுண்டா இல்லையா? இது போன்ற குறைகளுக்குப் பல்கலைக் கழகம் ஒரு பரிகாரம் காண வேண்டும்.

ராதா: படித்து நினைவில் இருப்பதைத்தான் தேர்வுகளில் எழுதுகிறார்கள். 'மெமரி' குறைந்துவிட, பல சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. உதாரணமாக வாரக் கடைசியில் பார்க்கும் மூவி படம் அல்லது சினிமா, என்ன படித்திருக்கிறானோ அதை அப்படியே அழித்து விட வாய்ப்பு இருக்கிறது! மறுநாள் வகுப்புக்கு வரும் போது, துளியும் உற்சாகம் இருப்பதில்லை. எக்ஸாமில், கேட்கவே வேண்டாம்! எதிர்பார்த்த மாதிரி வந்தால் எழுதி விடலாம். இல்லை என்றால் திண்டாட்டம்தான். மூணு மணி நேரத்துக்குள் எழுத வேண்டும் என்ற டென்ஷன்... பலர் அதனால்தான் பரீட்சைகளை சீரியஸ்ஸாக எடுத்துக் கொள்ளுவதில்லை. அரியர்ஸ் இருக்கிறது. பார்த்துக்கொள்ளலாம் என்று விட்டு விடுகிறார்கள்.

அனந்த: பரீட்சைகளை சீரியஸ்ஸாக

அடுத்த இதழில்...



தேளும் பாம்பும் இவருக்குத் தோழர்கள்!

எடுத்துக் கொள்வதில்லை என்பது ரொம்பச் சரி. ஏன் எடுத்துக் கொள்வதில்லை? ஒரு தேர்வில் எம்.ஏ., அல்லது எம்.எஸ்ஸி.யில் முதல் ராங்க்கில் தேறினால், அரசாங்கமோ, தனியாரோ அவனுக்கு உடனே வேலை கொடுக்கிறார்களா? அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், முதல் பத்து ராங்க் வருபவர்களுக்கு உடனே வேலை கொடுக்கும் என்று ஓர் உத்தரவாதம் கொடுத்தால், அவர்களுக்குப் படிப்பிலும் தேர்விலும் ஓர் ஆர்வம் கூடும்.

கல்வித் தரம் குறைவதற்கு இன்னொரு காரணமும் சொல்லலாம்: இப்போது, ஆங்கிலம், தமிழ் என்று மொழிகள் எல்லாம் கல்லூரிகளில் படிக்கத் தேவை இல்லை. கெமிஸ்ட்ரி, எகனாமிக்ஸ் எல்லாம் மட்டும் ஆங்கிலத்தில் படித்தால் போதும் என்கிறார்கள். ஏனென்றால் பள்ளியிலேயே தமிழ் — ஆங்கிலம் எல்லாம் படித்து விடுகிறார்களாம்! இந்தக் கருத்து எனக்கு உடன்பாடல்ல. கல்லூரியில் படிக்கும் மாணவர்கள், பி.ஏ. ஆகட்டும், எம்.ஏ. ஆகட்டும், அவர்களுக்கு மொழி அறிவு மிக மிகக் குறைந்திருக்கிறது. இப்போதே ஓர் எகனாமிக்ஸ் மாணவருக்கு, பத்து வரி கூட தவறு ஏதும் இல்லாமல் எழுத வருவதில்லை. பேப்பர் திருத்துபவர் எகனாமிக்ஸைப் பார்ப்பதில்லை. இங்கிலீஷ் இவ்வளவு மோசமாக இருக்கிறதே, எப்படி மார்க் கொடுப்பது என்று யோசிக்கிறார்! அதே மாதிரிதான் தமிழிலும். தமிழ் மீடியத்தில் படித்து விட்டு எழுதும் போது, எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகள் எத்தனை! ஆக, தமிழ் ஆகட்டும், ஆங்கிலம் ஆகட்டும் இரண்டும் சரியாகச் சொல்லிக் கொடுத்தால்தான் விஷயத்தை வெளிப்படுத்தும் திறமை உருவாகும்.

ராதா: இது அடிப்படையான விஷயம். 'எனக்கு மொழியே தெரியவில்லை' என்று சொல்லி விட்டால் அப்புறம் பாடத்தைப் புரிந்து கொள்ளுவது எப்படி? பரீட்சை எழுதுவது எப்படி?... வேலைக்கு வாய்ப்பளிக்கும் பாடங்களாயிருந்தால், படிப்பவருக்கு உற்சாகமாய் இருக்கிறது என்பது என் அனுபவம். ஆபீஸ் மானேஜ்மெண்ட், கம்ப்யூட்டர் சயன்ஸ், கார்ப்பரேட் செக்ரடரி ஷிப், ஹாஸ்பிடல் மானேஜ்மெண்ட், டைப்ரைட்டிங் — ஷார்ட்ஹேண்ட், ஹிஸ்டரியில் டூரிசம், ஆங்கிலத்தில் ஜர்னலிஸம், ஹோம் சயன்ஸில் டெக்ஸ்டைல்ஸ் — இப்படிப்பட்ட வகுப்புகளில் மாணவர்கள் அவ்வளவு சோர்வு அடைவதில்லை. ஆர்வமாகச் செயல்படுகிறார்கள்.

அனந்த: பொதுவாக நோக்குமிடத்தில், நன்றாகப் படிப்பவர்கள் பற்றிக் கவலை இல்லை. ஆனால் மெதுவாகப் பயிலுபவருக்குத் தனியாகப் பயிற்சி, சிறப்புப் பயிற்சி அளிக்கிறோமா என்று பார்க்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் தாங்கள் ஆசிரியர்களால் கைவிடப்படவில்லை என்று உணர்ந்து, சொந்த முயற்சியும் எடுத்துக் கொண்டு படிப்பதில் அக்கறை காண்பிப்பார்கள். இதற்கு — கல்லூரி, ஹாஸ்டல், வீடு எல்லா இடத்திலும் தகுந்த சூழ்நிலை உருவாக வேண்டும்.

உரையாடல் தொகுப்பு: **சாருகேசி**


அட்டை வண்ணப்படத்தில்:
அண்ணா பல்கலைக் கழக மாணவி சங்கீதா வாசுதேவன்.

அட்டை வண்ணப்படம், புகைப் படங்கள்: **யோகா.**

கணவன் (மனைவியிடம், கோபமாக): நான் கொஞ்ச நாள் காணாமப் போயிருந்தப்ப நீ டி. வி. யில் விளம்பரம் செய்தது பத்திக் கூட எனக்குக் கோபமில்லை; ஆனா, அடையாளம் சொல்றப்ப 'முகத்தில் சதா அசட்டுக் களை வழியும்'னு சொல்லியிருக்கணுமா?

— மேல்மங்கலம் பத்ரா.





"இந்த டி. வி. உன் மாமனார் வாங்கிக் கொடுத்ததா?"

"அட, ஆமாம்! எப்படித் தெரியும்?"

"ஸ்க்ரீன்ல ஓர் ஓரத்துல 'நிதி உதவி: சுப்ரமணி'ன்னு எழுதியிருக்கே!"


— மேல்மங்கலம் பத்ரா.

தேரின் அழகு மிளிர பூவணிகள்
மங்கையின் அழகு மிளிர
குமரன் பட்டுப் புடவைகள் - இந்த தீபாவளிக்கு



12, நாகேஸ்வரன் சாலை, (பனகல் பார்க் எதிரில்)
தியாகராய நகர், சென்னை 600 017.
போன் : 443544 /443278 எமக்கு வேறெங்கும் கிளைகள் கிடையாது


மிஸ்டர் சிங்! உங்களுக்குத் தான் நாற்காலி 'ஜாம் ஜாம்'னு தயாராகுது!
நானே பிரதமர்
நான் தான் பிரதமர்
தேவி லால்
சந்திர சேகர்
ராம ராவ்
பிரதமர் பதவி


அதிக அரிசி கொடு!
மனிதச் சங்கிலி போராட்டம்


டிஸ்மிஸ் டிஸ்மிஸ்
டிஸ்மிஸ் டிஸ்மிஸ்
டிஸ்மிஸ் டிஸ்மிஸ்
டிஸ்மிஸ்.. டிஸ்மிஸ்
டிஸ்மிஸ். டிஸ்மிஸ்
டிஸ்மிஸ்
டிஸ்மிஸ்
டிஸ்மிஸ்
டிஸ்மிஸ்
டிஸ்மிஸ்
டிஸ்மிஸ்
டிஸ்மிஸ் டிஸ்மிஸ்
டிஸ்மிஸ் டிஸ்மிஸ்



கல்கி

1989 அக்டோபர் 8
மலர் 48 இதழ் 10
சுக்ல புரட்டாசி 22



ராஜீவ் ஆட்சிக்கு ஜனகணமன!

தேவிலாலின் எழுபத்தைந்தாவது பிறந்த நாளையொட்டி தில்லியில் திரண்ட மாபெரும் கூட்டம், 'பேரணிகளின் பேரணி' என்று கூறும்படி இருந்தது! 'கூட்டம் சேர்க்க அரியானா அரசு அதிகார துஷ்பிரயோகம் செய்தது' என்ற பஜன்லாலின் குற்றச் சாட்டு, அஸ்தியிலே ஜுரம் கண்டவரின் பேச்சு எனில் எதிர்க்கட்சித் தலைவர்களின் சொற்பொழிவுகள், ராஜீவ் ஆட்சிக்கு வாசிக்கப்பட்ட முடிவுரையாக ஒலித்தன. எல்லாரு மாகச் சேர்ந்து, 'ராஜீவ் காந்தியைப் பதவி இறக்கம் செய்தே தீருவது' என்று உறுதி பூண்டு விட்டனர். 'ஒருவருக்கு ஒருவர் என்ற முறையிலேயே காங்கிரஸை எதிர்த்துத் தேர்தலில் போட்டியிடுவதாக அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும்' என்றார் ஹெக்டே. வாஜ்பாயி இதற்கு ஒருபடி மேலே சென்று, 'இந்த உடன்படிக்கையை மீறுவோரைக் கண்டிப்போம்' என்றும் சொன்னார்.

பேரணியின் போது பேசப்பட்டதைவிட பேரணிக்கு மறுநாள் தேவிலால் கூறிய கருத்து பிரமிக்க வைப்பதாகும்! 'எனக்குப் பிரதமராகும் ஆசை இல்லை. அப்படி யாரும் நினைக்க வேண்டாம். பலராம் ஜாக்கரை முறியடிக்க அவர் போட்டியிடும் தொகுதியில் நிற்பேன்; இல்லையேல் தேர்தலுக்கே நிற்க மாட்டேன்! வி. பி. சிங்கே நமது அடுத்த பிரதமர் என்று ஏற்கிறேன். இந்த மன உறுதியோடு அனைவரும் ஒன்றுபட் டுப் போராடி லஞ்ச ஊழல் சாம்ராஜ்யத்தை வீழ்த்துவோம்' என்று அவர் கூறியிருப்பது பாராட்டி வரவேற்கப்பட வேண்டிய பெருந்தன்மையாகும். இந்தப் பெருந்தன்மையை வேறு சிலரும் காட்டினால் தேசிய முன்னணி வெற்றி பெறுவது மட்டுமல்ல; நிலையான நல்லாட்சியையும் வழங்க இயலும்.

குறைகளே இல்லாத மனிதன் உலகில் எங்குமே இல்லை. வி. பி. சிங்கிடமும் சில குறைகள் இருக்கலாம். எனினும் பல வகையில் நாட்டின் பிரதமராகத் தகுந்தவர்தான் அவர். ஆட்சி அனுபவம் ஒருபுறமிருக்க, ஆட்சியில் இருந்த போதே லஞ்ச ஊழலை அது எத்தனைதான் உயர் மட்டத்தில் இருந்த போதிலும் தாக்கித் தகர்க்கத் துணிந்தவர் அவர். தொழிலதிபர்களுக்கு வரிச் சலுகைகள் பல வழங்கி, கட்டுப்பாடுகளைத் தளர்த்தி ஊக்குவித்த அதே நேரத்தில், அவர்களிடமிருந்து கறுப்புப் பணப் பேயை விரட்ட நடவடிக்கை எடுக்கும் நெஞ்சுறுதி அவரிடம்தான் இருந்தது. அவர் மீதும் அவர் மகன் மீதும் அவதூறுகள் சுமத்தப்பட்ட போது, ''பேசிக் கொண்டிருப்பானேன்? நானோ, என் மகனோ ஏதாவது தவறுகள் செய்திருந்தால் எங்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதுதானே? வழக்குகள் தொடர வேண்டியதுதானே?'' என்று கேட்டவர் அவர். அவதூறுகள் வலுவிழந்து விழுந்தன. அவர் மகனோ தமது சொத்துக்களைப் பட்டிய லிட்டுப் பகிரங்கப்படுத்தியிருக்கிறார்.

''எமெர்ஜென்ஸியின் போது வி.பி.சிங் காங்கிரஸில்தானே இருந்தார்? ஆட்சியில் தானே இருந்தார்? ஏன் காங்கிரஸை விட்டும் ஆட்சியிலிருந்தும் வெளியேறவில்லை?'' என்ற கேள்வி அவ்வப்போது பலரால் எழுப்பப்படுவதுண்டு. சமீபத்திய ''சண்டே'' வார இதழில் இதற்கு அழகாகப் பதில் கூறியிருக்கிறார் வி. பி. சிங்:

எமெர்ஜென்ஸி பற்றித் தேசிய அளவில் பலமான வாக்குவாதம் நிகழ்ந்தியா யிற்று. 1977 தேர்தல் முடிவு எமெர்ஜென்ஸிக்கு எதிராக மக்கள் வழங்கிய தீர்ப்பு. அந்தத் தீர்ப்பை நாம் அனைவரும் ஏற்கிறோம். நானும் ஏற்கிறேன். ஒரு விஷயத்தை நீங்கள் கவனிக்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர்கள் பலர் எமர்ஜென்ஸியின் போது சொல்லொணாக் கொடுமைகளுக்கு ஆளானார்கள். அந்த எதிர்க்கட்சித் தலைவர்களே இன்று என்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்றால் அதற்கு வலுவான காரணம் இருக்கத்தானே வேண்டும்!''

'ராஜீவைப் பதவி இறக்கிவிட்டால் போதுமா? தேசிய முன்னணியினர் குடுமிப் பிடி சண்டையில் இறங்காமல் எத்தனை காலம் ஆட்சி நடத்துவார்கள்?' என்று சிலர் கேட்கலாம். ''அப்படிப் பிளவுபட்டுச் சிதறாமல் இருக்க, முந்தைய அனுபவம் பாதுகாப்புக் கவசமாக விளங்கும்'' என்கிறார் வி. பி. சிங்.

அந்தக் கவசம் தகர்ந்து விழுந்தாலும் பாதகமில்லை. லஞ்ச ஊழல் சாகரத்தில் அகம்பாவ ஆடம்பரக் கப்பலைச் செலுத்திக் கொண்டிருக்கும் காங்கிரஸுக்கும் அதன் தலைவருக்கும் பாடம் கற்பிக்க வேண்டியது, நிலையான ஆட்சி என்பதை விடவும் முக்கியமானது. முன்னது பயங்கர நிஜம்; பின்னதோ 'கவலை'யில் விளைந்த அனுமானம் மட்டுமே.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

பேசும் சில்லுகள்!

சென்ற வாரக் கேள்வியின் விடை: பாபி மக்ஃப்ரே. இந்த ஆசாமி பலகுரல் மன்னன். ஒரே இசைத்தட்டில் பாட்டு, பின்னணி எல்லாம் ஒரே ஆள். 'டோன்ட் ஒர்ரி பி ஹாப்பி' என்கிற பாட்டு மிகப் பிரபலம்.

சின்தஸைஸர்களில் சங்கீதம் பண்ணும் நுட்பத்தைப் பற்றி இன்னம் கொஞ்சம். சிலிக்கன் சில்லுகள் வந்த பின்தான் இந்த வாத்தியங்கள் பிரபலமாயின. இது வயலின், இது பியானோ, இது கித்தார் என்று பற்பல ஒலி அலைகளை உண்டு பண்ணுகிறார்கள். இதன் சூக்குமம்? அலை வடிவம்தான். பியானோவுக்கும் வயலினுக்கும் ஆதார சுருதி ஒன்றாக இருந்தாலும் இரண்டிற்கும் ஒலி வடிவத்தில் வித்தியாசம் உண்டு. பியானோ அலை என்பது, சட்டென்று புறப்பட்டு மெதுவாகக் கரையும் ஒலி வடிவம். வயலின் தொடர்ந்து சிலிர்க்கும் சிக்கலான வடிவம். இந்த வடிவ அமைப்புக்களை சின்தஸைஸரின் ஞாபக அடுக்குகளில் டிஜிட்டலாக மாற்றிப் பதித்து வைத்துக் கொள்கிறார்கள். வயலின் கேட்டால் ஞாபகத்தில் வயலின் வடிவத்தைத் தேடி, அதே வடிவத்தில் அலைகளை ஏற்பாடு பண்ணுகிறார்கள். மேல்ஸ்தாயி என்றால் வேகமாக, கீழ் ஸ்தாயி என்றால் மெல்ல என்று ஒலி எழுப்பும் கதியை மாற்றுகிறார்கள். ஆனால் வடிவம் வயலின் வடிவம். இவ்வாறே மற்ற வாத்தியங்களும்.

ஆரம்ப காலத்தில் எஃப்.எம். என்று சொல்லக்கூடிய பண்பலை முறைப்படி, இந்த ஒலிகளை அமைத்துக் கொண்டிருந்தார்கள். தற்போது முழுக்க முழுக்கச் சில்லுக்குள் பதிந்திருக்கும் ஆதார வடிவம் தான். வருங்காலத்தில் இந்தச் சங்கீதக் கலவைகள், வடிவமைப்புக்கள் இன்னம் அழகுபடுத்தப்பட்டு, நம்மால் எண்ணிப் பார்க்க இயலாத அளவுக்கு, அத்தனை ஒலிப் பின்னல்களைச் சொற்பமே ஞான முன்னவர்களால் உண்டு பண்ண முடியும். மேதைகளுக்கெல்லாம் தேவையே இல்லாமல் பண்ணி விடப் போகிறார்கள்.


நீங்கள் ஒரு சினிமாப் படம் எடுக்க விரும்புகிறீர்கள் என்றால், அதற்கு இசையமைக்க ஒரு ராஜாவையோ ஒரு போஸையோ தேடிச் செல்ல வேண்டியதில்லை. மெட்டுக் கிடைத்தால் போதும். அந்த மெட்டுக்குப் பல்வேறு பின்னணிப் பின்னல்களைக் கம்ப்யூட்டர் மூலமே அமைத்து, அதை நாம் சொன்ன 'மிடி' மூலம் ஒரு சின்தஸைஸருடன் இணைத்து விட்டால், அது தானாகவே எல்லாச் சங்கீதமும் உண்டு பண்ணி, ஒலிப்பதிவும் செய்து விடும். மிச்சமிருப்பது குரல். ஒரு எஸ்.பி.பி. சமயம் கிடைக்கும் போது வந்து பாட்டுப் பதிவு செய்து கொள்ளலாம். அழகாகப் பாட இன்னமும் அவர்கள் சில்லு கொண்டு வரவில்லை. நல்லவேளை!

அழகாகப் பேச, அதாவது ஏறக்குறைய அழகாகப் பேச, சில்லுகள் கொண்டு வந்து விட்டார்கள். பேசும் சில்லுகளால் பல உபயோகங்கள் உள்ளன.

பார்வையற்றவர்களுக்குப் படித்துக் காட்டும் சில்லுகள்தான் தற்போது லேட்டஸ்ட்டு. விலை அதிகமாக இருக்கிறதால் பார்வையற்றவர்கள் அனைவராலும் வாங்கிக் கட்டுபடியாகாது. ஆனால் எதிர்காலத்தில் இந்தச் சில்லுகள் மலிவாகி, ஒரு அச்சடித்த புத்தகத்தின் வரிகளின் மேல் ஒரு 'ஸ்கானரை' வருடினால், சில்லு, வரியை அப்படியே படிக்கும் சாதனம் விரைவில் கிடைக்கும்.

இந்த இயலுக்குப் பேசும் சில்லு மட்டும் போதாது. அச்சடித்த எழுத்துக்களை அடையாளம் கண்டுகொள்ளும் திறமை உள்ள சில்லுகள் வேண்டும். இதற்கு ஓ.ஸி.ஆர். என்று பெயர். ஆப்டிக்கல் காரக்டர் ரெகாக்னிஷன்.

இது புதிய இயல். இதில் பிரமிக்கத்தக்க முன்னேற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. நம் மூளை, எழுதப்பட்ட எழுத்துக்களை அடையாளம் கண்டுகொள்வது ரொம்பச் சிக்கலான விஷயம். எப்படி என்பதைச் சரியாக இன்னம் விஞ்ஞானிகள் புரிந்து கொள்ளவில்லை. கீழ்க்கண்ட வரிகள் அனைத்தையும் பாருங்கள்.




எல்லாமே 'தமிழ்' என்று எப்படிப் புரிந்து கொள்கிறீர்கள்?


அதே போல் இது அனைத்தும் நாற்காலி தான் என்று எப்படிச் சொல்கிறீர்கள்?


இந்தச் சூட்சுமத்தைப் புரிந்து கொண்டால், அது இந்த நூற்றாண்டின் புரட்சிகரமான விஷயமாக இருக்கும். ஒரு வடிவத்தின் ஆதாரச் செய்தியை, சாரத்தை மூளை எப்படி அதில் உள்ள அனாவசியங்களையெல்லாம் நீக்கி விட்டு, அடையாளம் கண்டு கொள்கிறது? அது இன்னமும் தெரிய

வில்லை. கம்ப்யூட்டரால் அச்சடித்த எழுத்துக்களை மட்டும் சந்தேகமில்லாமல் அடையாளம் கண்டு கொள்ளும் திறமை வரை வந்திருக்கிறார்கள். கையெழுத்து?









தொட்டால் போதும்...

ம்ஹூம்.

அச்சடித்தஎழுத்தைப்படிக்கும்திறமையே அத்தனை எளிதல்ல. இதற்காக மாய்ந்து மாய்ந்து ப்ரொக்ராம் எழுத வேண்டும். எழுத்துக்கள் ஒரே சீராக இருந்தால் சரி. ஒரே மாதிரி அச்சடித்திருந்தால் சரி. சற்றே சாய்ந்தோ கோணலாகவோ இருந்தால் கம்ப்யூட்டர் அதைப் படிக்கக் கஷ்டப்படும். நாம் அத்தனை சுலபமாகச் செய்யும் விஷயத்தைக் கம்ப்யூட்டர் மூலம் செய்யக் கஷ்டப்படுவதற்குக் காரணம், மூளையின் முறையை இன்னமும் நாம் அறிந்து கொள்ளாததால்.

வங்கிகளில் காசோலைகளின் எண்களைப் படிக்கும் சாதனங்கள் வந்திருக்கின்றன. இதற்குத் தனிப்பட்ட காந்த மசியைப் பயன்படுத்துகிறார்கள்.

டிப்பார்ட்மெண்ட் ஸ்டோர்களில் பொருட்களின் மேல் விலை எழுதியிருக்கும் பட்டைகளை, விலைக் கோடுகளைப் படித்து பில் போடும் திறமையும் இப்போது இந்தியாவில் வந்து கொண்டிருக்கிறது. 'பார் கோடு ரீடர்' என்று இதற்குப் பெயர். இதில் பிழையில்லாமல் படிக்க ஹோலோகிராம் முறையைப் பயன்படுத்துகிறார்கள்.

அடுத்த நூற்றாண்டின் துவக்கத்தில் நம் கடைகளிலும் இந்த மாதிரி விலைப்பட்டியலைப் படிக்கும் சாதனங்கள் வந்து விடும். இவ்வகைச் சாதனங்களைத் தற்போது யூ.பி. எஸ்.ஸி. போன்ற அமைப்புக்களில் பரீட்சைத் தாள்களைத் திருத்தப் பயன்படுத்துகிறார்கள்.

இந்த முறையில் ஐ.ஏ.எஸ். போன்ற பரீட்சைகளில், 'அப்ஜெக்ட்டிவ்' வகை வினாத் தாள்களில் ஒவ்வொரு கேள்விக்கும் நான்கு விடைகள் கொடுக்கப்பட்டிருக்கும். அவைகளில் ஒன்றுதான் சரியான விடை. அது எது என்று அறிந்து நான்கு நீள் சதுரப் பெட்டிகளில் ஒன்றை நிரப்ப வேண்டும். இவ்வாறு விடையளிப்பதில், விடைத் தாள்களைக் கம்ப்யூட்டர் மூலம் திருத்த இயலும். ஒரு சிறிய ஒளிப்பேனாவினால் விடைத் தாள்களை வருடினால் போதும். விடைத் தாள்களை அதைவிட வேகமாகப் படிப்பதற்கும் சாதனங்கள் உள்ளன.

இவ்வகைப் பரீட்சைகளில் — பிழைத் திருத்தங்களில் பிழை என்பதே இராது. அமெரிக்காவில் கல்லூரிகளில் அனுமதிக்கு உண்டான ஜி. ஆர். இ. டோஃபெல் போன்ற பரீட்சை விடைத்தாள்களை இவ் வகையில்

சுஜாதா

ஒன்பது கேள்விகள் :

கல்கி 17.9.89 இதழில் வெளியான சுஜாதாவின் ஒன்பது கேள்விகளுக்கும் சரியான விடையை அளித்தவர்கள் எவருமில்லை. ஏழு கேள்விகளுக்குச் சரியான விடை அளித்தவர்கள் மூன்று பேர். எனவே பரிசுத் தொகை ரூபாய் ஐந்து அதிகரிக்கப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் ரூ. 35 விதம் மூன்று பேருக்கு ரூ. 105/— வழங்கப்படுகிறது. பரிசு பெறுபவர் விவரம்:

1. ஆர். ராமசுப்பிரமணியம்,
   47, மந்தைவெளி லேன்,
   மயிலாப்பூர், சென்னை — 600 004.
2. எம். விஜயலக்ஷ்மி,
   PH 85 F, BHEL டவுன்ஷிப்,
   திருச்சி — 620 014.
3. சுதா விஜயராகவன்,
   D 29/79, அடையாறு அவென்யூ,
   சென்னை — 600 036.


தான் திருத்துகிறார்கள்.


'ஒளிப்பேனா' என்று ஒரு வார்த்தை பயன்படுத்தினோம். ஒரு கம்ப்யூட்டர் திரையில் ஆணைகளைப் பட்டியலிட்டு அவைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க ஒளிப்பேனாக்களைப் பயன்படுத்துகிறார்கள். மேலும் ஒரு வரி வடிவத்தை அல்லது வரைபடத்தை டிஜிட்டல் ரூபமாக மாற்றவும் இவ்வகைச் சாதனங்களைப் பயன்படுத்துகிறார்கள். இவைகளுக்கு ஸ்கானர் டிஜிட்டைஸர் என்றெல்லாம் பெயர். வடிவமைப்பில் இருப்பதைக் கம்ப்யூட்டர்களுக்குப் புள்ளி அடர்த்திகளாகச் செய்தி சொல்வதற்கு ஏற்பட்ட சாதனங்கள். இவையனைத்தும் இப்போது இந்தியாவில் பயன்படுகின்றன. அடுத்த நூற்றாண்டுக்குள் இவ்வகைச் சாதனங்கள் மிகவும் எளிமையாக்கப்பட்டு விடும். கம்ப்யூட்டர் திரையில் ஒரு ஆணைப் பட்டியல் தெரிய, நமக்கு வேண்டிய ஆணையைத் தொட்டாலே போதும். அந்த ஆணையைச் செயல்படுத்தவல்ல திறமைகள் இப்போதே கூட இருக்கின்றன.

கம்ப்யூட்டருக்கு ஆணை பிறப்பிக்க இரண்டு மூன்று முறைகள் நமக்குக் கிடைக்கும். ஆணையை டைப் செய்வது சம்பிரதாயமாக இருக்கிறது இன்று. அதில்லாமல் ஆணையைப் பட்டியலில் தொட்டுக் காட்டுவது அல்லது ஆணையை வாய்மொழியாகச் சொல்வது. 'எழுது', 'படி', 'நீக்கு', 'காட்டு' போன்ற வாய் வார்த்தை ஆணைகளையும் கம்ப்யூட்டர் ஏற்கும் காலம் அடுத்த நூற்றாண்டுக்குள் வந்து விடும். ஜப்பானியர்கள் 'ஐந்தாம் தலைமுறைக் கம்ப்யூட்டர்' என்ற பெயரில் ஒரு ஸூப்பர் கம்ப்யூட்டரை நூற்றாண்டின் இறுதியில் கொண்டு வர முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இவைகளுக்குக் கொடுக்கப்படும் ஆணைகள், பேச்சு மொழியில் இயல்பாக இருக்க வேண்டும் என்பது அவர்கள் குறிக்கோள்.

அதைப் பற்றிச் சொல்லுமுன் வழக்கம் போலக் கேள்வி: 'லிஸ்ப்' (Lisp) என்றால் என்ன? கல்கி காரியாலயத்துக்கு வரும் முதல் சரியான விடைக்குப் புத்தகம் பரிசு.

(தொடரும்)





அ. ஏழைகளுக்கான குடியிருப்புக்களில் ஒன்று. அமைச்சர் திறந்து வைக்கக் காத்திருக்கிறது.

ஆ. ஆழ்கிணறு பம்ப் செட் நிறுவப்பட்டுள்ள அறை.


இ. தோட்டக்காரர் மண்வெட்டி, கடப்பாரை, கூடை முதலான உபகரணங்களைப் போட்டு வைக்க உருவானது.

ஈ. இறந்தவர்களைப் புதைத்து எழுப்பப்படும் கல்லறை!

எது சரி?

விடை 52—ம் பக்கம்...

தடைகளைத் தாண்டி



முன்னேறுங்கள்

நம்மிடம் ஒருவர் ஆங்கிலத்தில் பேசினால் நாமும் அவர்களிடம் ஆங்கிலத்தில் சரளமாகப் பேச வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் ஒரு சிலர் ஆங்கிலத்தில் பேசத்தயங்குகிறார்கள்.

இத்தயக்கம் ஏன் ஏற்படுகிறது?

உதாரணமாக நாம் ஒரு விளையாட்டுப் போட்டியில் பங்கு பெற விரும்புகிறோம். அப் போட்டியில் வெற்றிபெற வேண்டுமெனில், அவ்விளையாட்டில் நாம் பயிற்சி பெற்றிருப்பது அவசியமல்லவா?

அதுபோலவே நாம் ஆங்கிலத்தில் சரளமாகப் பேச முறையான பயிற்சி முறை அவசியமாகிறது. போதிய பயிற்சியின்மையினால் தான் நாம் ஆங்கிலத்தில் பேசினால் ஏதாவது தவறாகப் பேசி விடுவோமோ, என்ற தயக்கம் ஏற்படுகிறது.

ஆங்கிலத்தில் சரளமாகப் பேச வேண்டும், வாழ்க்கையில் முன்னேற வேண்டும், என்ற நமது விருப்பத்தை தயக்கம் என்ற முட்டுக் கட்டை தடை செய்கிறதென்றால், இத்தடையைத் தாண்டித்தான் ஆகவேண்டும். இத் தடையைத் தாண்டுவது மிகவும் எளிது.

உங்களிடமுள்ள இத் தயக்கத்தை முதலில் நீக்கி, நீங்கள் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசவும், இலக்கணப் பிழை ஏற்பட்டு விடுமோ என்று பயப்படாமல் கடிதங்கள் கட்டுரைகள் எழுதும் ஆற்றலை அடையவும், தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்ற தனிப் புகழ் பெற்ற விவேகானந்தா கல்வி நிலையத்தினர் மிகச் சிறந்த முறையில் பயிற்சியளித்து வருகிறார்கள்.


வீட்டிலிருந்த படியே ஓய்வுநேரத்தில் தபால் மூலம் இப்பயிற்சியை மேற்கொள்ளலாம். "நேர்முகப் பயிற்சியும் உண்டு"

இப்பயிற்சியில் சேர்ந்து பயன் பெற விரும்புவோர் கீழ்கண்ட முகவரியில் இன்றே தொடர்பு கொள்ளவும்.

விவேகானந்தா கல்வி நிலையம்
த. பெ. எண். 4986
9, மேட்லிரோடு
தி. நகர்
சென்னை - 600 017.

NAGA

முதலைகள் வடிக்கும் நிஜமான கண்ணீர்!



போலியாகக் கண்ணீர் வடிக்கும் ஆசாமிகளைக் குறிப்பிடும் போது, 'முதலைக் கண்ணீர் வடிக்கிறான்' என்பார்கள். இன்றைக்கோ உண்மையிலேயே முதலைகள் கண்ணீர் வடிக்கின்றன. காரணம், பட்டினிக் கொடுமை! அரசாங்கத்தின் வழக்கமான குளறுபடிகள்!

முதலைக் கண்ணீர் சாதாரணமானது தான் என்றாலும் முதலையின் தோல் அசாதாரணமானது. சில கிழக்காசிய நாடுகளில் முதலை இறைச்சிக்கும் கிராக்கி. இருபது வயதான ஒரு முதலை உலக மார்க்கெட்டில் ஒரு லட்சம் ரூபாய் வரை விலை போகும். இந்தக் கிராக்கியைக் கண்ட மத்திய அரசு முதலைத் தோல் ஏற்றுமதி செய்து லாபம் ஈட்ட நினைத்தது. அதற்காகக் கடந்த 81—இல் ஒரு திட்டம் தீட்டி மூன்று முதலை வளர்ப்புப் பண்ணைகளைத் தமிழ்நாட்டில் ஏற்படுத்தியது. இவற்றை மாநில வனத் துறையின் பொறுப்பில் விட்டது. பண்ணைகளில் முதலை உற்பத்தியும் அமோகமாக நடந்தது.

பிறகுதான் தெரிந்தது, உலகில் அரிதாகிக் கொண்டு வரும் விலங்கினங்களில் ஒன்று இந்த (நல்ல நீரில் வாழும்) முதலை இனம் என்பது! எனவே, வனவிலங்குச் சட்டப்படி இம்முதலைகளைக் கொல்லக் கூடாது என்பதால், முதலைத் தோல் ஏற்றுமதி செய்ய முடியாது. வியாபாரத்திற்கு உதவாத முதலைகளுக்குத் தீனி போட அரசாங்கம் விரும்பவில்லை. எனவே, ஒவ்வொரு முதலைப் பண்ணைக்கும் மத்திய அரசு ஒதுக்கியுள்ள முதலைகளின் பராமரிப்புத் தொகையைப் பயன்படுத்தக் கூடாது என்று அரசே உத்தரவு போட்டுவிட்டது! முதலைகளையெல்லாம் பேசாமல் அணைக்குள் கொண்டு போய் விட்டு விடலாம் என்றால், அணைக்குள் மீ னி ன மே அழிந்து விடும் என்பதோடு, அணைப் பகுதியும் ஆபத்தானதாகிவிடும்!

பணமில்லாததால் முதலைகளுக்குத் தீனி இல்லை. உதாரணத்திற்குச் சாத்தனூரில் உள்ள முதலைப் பண்ணையைச் சென்று பார்த்தோம். ஒணான் சைசிலிருந்து பெரிது பெரிதாக என்று மொத்தம் 1167 முதலைகள். முன்பு இவற்றுக்குத் தினந்தோறும் 106 கிலோ இறைச்சி, 20 கிலோ மீன், ஐந்து கிலோ த வ ளை ... என்று கொடுத்து வந்தார்கள்.

இப்போது மத்திய அரசின் பணத்தைப் பயன்படுத்த முடியாது என்பதால் மாநில வனத்துறை, ஏதோ தன்னால் முடிந்தவரை தினமும் ஐம்பது கிலோ இறைச்சி, பத்துக் கிலோ மீன் என்று பாதியளவுக்கும் குறைவான உணவை மட்டுமே கொடுத்துப் பல முதலைகளைப் பட்டினி போட்டுக் கொண்டிருக்கிறது.


இருக்கிற முதலைகளுக்கே உணவில்லாத போது, புதிதாகப் பிறக்கும் முதலைக் குட்டிகளின் கதி? "முட்டையாக இருக்கும்போதே அவற்றை உடைத்து விடுகிறோம்" என்றார் ஊழியர் ஒருவர்.

இந்த நிலை சாத்தனூரில் மட்டும்தான் என்பதில்லை. அமராவதி, ஒகேனக்கல் ஆகிய இடங்களிலும் இதே பட்டினிக் கதி தான்.

ஒரு பக்கம் அரசு, முதலைகளைப் பட்டினி போட்டும் முட்டைகளை உடைத்தும் கொல்கிறது. இன்னொரு பக்கம், அதே அரசு, அதே வகை முதலைகள் அரிதாகி விட்டன; அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்று சட்டம் இயற்றுகிறது! இதற்குப் பெயர் தான் "முதலைக் கண்ணீர்" என்பதாக நாமும் புரிந்து கொள்கிறோம்!

— ப்ரியன்

படம்: ராதாகிருஷ்ணன்.



அவனுக்குத் தேவை
ஜோரான ருசி...

அம்மாவுக்கோ
போஷாக்கில்தான் குறி...

இருவரும் விரும்புவது

புதிய
கேம்ப்கோ
வின்னர்

இது ஜோரான
ருசியுள்ள சாக்கலேட்
பானம். மற்ற பானங்களைவிட
மும்மடங்கு அதிகமாக வின்னரில்
உள்ள சாக்கலேட் சுவை
குழந்தைகளுக்குக்
குதூகலம் மூட்டுகிறது.

ருசி மட்டுமா? சக்தி தரும் குளுகோஸ்
சத்தும் நிறைந்தது வின்னர்.
எனவேதான் பிள்ளைகளோடு
அன்னையரும் வின்னரையே
விரும்பித் தேர்ந்தெடுக்கின்றனர்.

குழந்தைகளின் முழுமையான
வளர்ச்சிக்கு அத்தியாவசியமான
வைட்டமின்களும் மினரல்களும் நிறைந்த
வின்னர் சூடான மற்றும் குளிர்ச்சியான
பாலில் மிக எளிதாகக்கரைகிறது.

*கேம்பகோ
வின்னரையே தேர்ந்தெடுங்கள்.
அது ருசியில் 'வின்னர்',
போஷாக்கிலும் 'வின்னர்'.*


இலவசம்
ஒரு
நெட்லான்
ஷாப்பிங்
பேக்



கேம்பகோ
லிமிடெட், மங்களூர்

R K SWAMY/CL/7247

விஜயதசமி திருநாள் வெகுமதி பெறும் நாள்!
ஸ்ரீராம் சிட்ஸிக்கு உங்கள் நண்பர்கள் புடைசூழ வாருங்கள்!



அரிய அன்பளிப்பு விழா!

விஜயதசமி, அக்டோபர் 10ம் தேதி. இந்த நன்னாள் புதியவை தொடங்க ஏற்ற நாள். உங்களுக்கு ஏற்ற புதிய சீட்டு குருப்புகளில் சேருங்கள். இலவசப் பரிசைப் பெறுங்கள். இலவசப் பரிசு, விஜயதசமி நாள் அன்று மட்டுமே, காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை தான்.

1,40,000 அங்கத்தினர்கள் சேர்ந்து இயக்கும் மகத்தான மக்கள் இயக்கம் ஸ்ரீராம் சிட்ஸ்.
37 கிளைகள் கொண்டது. ஆண்டுக்கு ரூ.100 கோடிக்கு மேல் பண பட்டுவாடா புரியும் ஸ்தாபனம். இந்த இயக்கத்திற்கு நிகர் எதுவுமில்லை.

சிறப்புச் சலுகைகள்:

ரூ.30,000 வரையிலான சீட்டு குருப்புகளில் பணம் எடுக்க, தக்க வருவாய் உள்ள 3 தனிநபர் உத்திரவாதம் இருந்தால் போதும்.

வேலையில் இருக்கும் பெண்மணிகளுக்கு ரூ.15,000 வரையிலான சீட்டு குருப்புகளில் கணவரது உத்திரவாதம் இருந்தால் போதும்.

10.10.89 அன்று பல புதிய கிளைகள் திறப்பு விழா:

சென்னை — புரசைவாக்கம், திருப்பூர், புதுச்சேரி, ஆந்திரத்தில் — ஹைதராபாத் மற்றும் ராஜமுந்திரி.

புதிய கிளை திறப்பு விழா அன்று வருகை தரும் குழந்தைகளுக்கு "ஸ்ரீராம் ஆங்கில அகராதி" (Shriram English Dictionary) பரிசாக அளிக்கப்படும்.

ஸ்ரீராம் சிட்ஸ்—
மக்களுக்குப் பணி புரியும் மகத்தான இயக்கம்.



புதிய சீட்டு குருப்புகள்	புதிய அன்பளிப்புகள்
ரூ. 200x 30 = ரூ. 6,000	"ஸ்ரீபெட்" பாட்டில்கள்
ரூ. 250x 40 = ரூ. 10,000	5 கிராம் வெள்ளிப்பதக்கம்
ரூ. 500x 30 = ரூ. 15,000	மில்டன் லஞ்ச் பாக் Milton's Lunch Pack
ரூ. 625x 40 = ரூ. 25,000	மூடியற்ற ப்ரை பான் (அடிப் பிடிக்காதது) Fry Pan without lid (Non-Stick)
ரூ. 500x 60 = ரூ. 30,000	"காஸி" ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் காப்பர் பாட்டம் கடாய்
ரூ. 1,000x 50 = ரூ. 50,000	"ஹால்மார்க்" ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தவா
ரூ. 1,000x100 = ரூ. 1,00,000	நுவேர் டின்னர் செட் (17 பாக் செட்) Nuware Dinner Set (17 Piece)
ரூ. 4,000x 50 = ரூ. 2,00,000	மில்டன் & குருசர் கிப்ட் பாக் (12 பாக் செட்) Milton & Cruiser Gift Pack (12 Piece Set)
ரூ. 10,000x 50 = ரூ. 5,00,000	லக்ஷ்மி திருஉரு பதித்த 4 கிராம் தங்கப்பதக்கம்

நுழைவுக் கட்டணம் தனி.

ADWAVE/SCI/3881 Tam A

All India Deposit Mobilisation Drive Till 31.10.89.

SHRIRAM GROUP COMPANIES MADRAS

ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பி. லிமிடெட்.
நிர்வாக அலுவலகம்: சுப்ரமணியம் பில்டிங்,
1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை - 600 002.
போன்: 474451/475536/470400/473932.

இரண்டாவது சூரியன்

10

“பிரிச்சுக் கொட்ட வேணாமா... உட்கார்ந்துட்ட?”

பானுமதி நாகம்மாவின் குரலுக்குப் பேசாமல் விட்டம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“என்ன உட்கார்ந்துட்டே?”

“ஒண்ணுமே பிடிக்கலை போ.”

“யாரு வந்தது?”

“அந்த ஆளுக்குத் தெரிஞ்சவன். அவருக்கிட்டப் படிக்கிறவன்...”

“அதுக்குப் போய் ஏன் உட்கார்ந்துட்டே? இது ஊரு உலகத்துக்கெல்லாம் தெரியுதேன்னு உட்கார்ந்துட்ட, இல்லே? எத்தினி நாள் பேசுவாங்க... மிஞ்சிப் போனா ஒரு வருஷம்... இதான் பேசுவாங்க. உன்கிட்ட, என்கிட்ட. நின்னு சிரிச்சாப் போதும்... ஏன் அறுத்துட்ட, எப்படி? என்னா குறை? எல்லாம் கேக்கத்தான் கேப்பாங்க. அறுக்கற வரைக்கும் அறுக்க மாட்டமா.. அறுக்க மாட்டமான்னு இருக்கும். அப்புறம் ஏண்டா அறுத்தோம்கற அளவுக்கு ஆயிடும்.”

“அது இல்லை நாகம்மா. அந்த ஆள் பேர் சொல்லி யார் வரதும் புடிக்கலை.”

“இந்த ஆளு தெரியாத வந்துட்டான். தெரிஞ்சு வரவங்கதான் வினை நமக்கு.”

“தெரிஞ்சவங்க அதிகம் பேச மாட்டாங்க.”

“பின்னால பேசுவாங்க. முன்னால சிரிப்பாங்க. நீ அந்தாண்ட போன பிறகு மூஞ்சிய இடிச்சுக்குவாங்க. இவன் ஆம்பளை. நீ சுள்ளுன்னதும் பதில் பேசத் தெரியாத போயிட்டான். இதுவே பொம்பளையா இருந்தாக் கேள்வி கேக்காத இடத்தை விட்டுட்டுப் போயிடுமா?”

“என்ன கேள்வி?”

“உன் தலையெழுத்துக்கு என்கிட்ட ஏண்டி மொறைக்கிறே? வந்து பாத்தாத்தான உன் பவுசு தெரியுது. இப்படி மொறைச்சுக் கறதுனாலதான் குடித்தனம் உருப்படலைன்னு இன்னும் என்னென்னமோ சொல்லுவாங்க.”

“என்ன செய்யறது நாகம்மா?”

“என்னாட்டம் இரு. கேட்டா ஆமான்னு சொல்லு. அதுக்கு மேல என்ன ஏன்னு துருவுனா அதுக்கெல்லாம் பதில் சொல்லாதே. என்னியக் கேட்டா ஆமான்னு சொல்லிட்டு மேல கேக்கறப்பப் பேச்சை மாத்திடுவேன். மல்லிப் பூ இரண்டு முழம் தரட்டா... நாளைக்கும் வேணுமின்னா இன்னிக்கே சொல்லிடும்மா. ரொம்பக் கிராக்கி... இப்படி ஏதாச்சும் சொல்லி பேசப் புடிக்கலைங்கறதக் காமிச்சிருவேன்.”

“சொல்லித்தான் ஆகணும்னு நின்னா...?”

“நாம பாட்டுக்கு நம்ம வேலையப் பாத்துக்கினு போய்க்கினே இருக்க வேண்டியதுதான்.”

“போக முடியலை. பஸ்ஸுல பக்கத்து சீட்ல இருக்கிறவ கேள்வி கேட்டா?”

“ரொம்ப நிம்மதி. வெளிப்பக்கம் பார்த்துக்கினே வர வேண்டியதுதான். இல்லேன்னா கண்ணை மூடிக்கிட்டுச் சாஞ்சுக்க வேண்டியதுதான்.”

பானுமதி சிரித்தாள். கரெக்டா டக்கு டக்குன்னு பதில் ரெடியா வச்சிருக்கியே...”

“பட்டிருக்கேனே. கேஸ் முடியற வரைக்கும் அம்மாடி... கொஞ்சமா கேள்வி கேட்டாளுங்க. உங்களுதுல இப்படிப் பச்சை பச்சையாக் கேட்க மாட்டாங்கம்மா. நாசூக்காப் பேசுவாங்க. எங்க பொம்பளைங்க எப்படித் தெரியுமா கேட்பாளுங்க.. இப்ப யாரோட இருக்கேன்னு பட்டுன்னு கேட்டுருவாளுங்க...

“என்ன சொல்வே?”

“ம்.. ஒரு ஆள் இருக்கான். ஆனா அந்தாளுக்கு ஏற்கெனவே ரெண்டு பொண்டாட்டி.வேணுமின்னா நீயும் வான்னுவேன். இந்த மாதிரி இடக்காப் பட்டுன்னு பல்லு மேல போட்டாப்பல பதில் சொன்னாத்தான் வாய மூடுவாங்க.”


பானுமதி வாய் விட்டுச் சிரித்தாள்.

“பேச்சு சாமர்த்தியம் இல்லைன்னா மென்னு முழுங்கிடுவாளுங்கம்மா. கம்முன்னு உக்காரவும் கூடாது. கடிச்சுக் குதறினா, ‘வேணும் இவளுக்கு’ன்னுவாங்க. கண்டுக்காத உக்காந்தா கதை கதையாப் பேசுவாங்க. சரி சாமான் கொட்டி வைக்கலாம்... வா.”

“அது அப்புறம். முதல்ல சமையல்.”

காஸ் ஸ்டவ் மூட்டி, ரசத்துக்குப் பாத்திரம் ஏற்ற, நாகம்மா காய் நறுக்கினாள். முக்கால் மணியில் சமையல் முடிந்தது. உலர்ந்த துணிகளை மாடியிலிருந்து எடுத்து மடித்து வைத்தாள். யூஜிஸி புரோக்ராம் டீ.வி.யில் ஏதோ மலைகள் காட்ட, வியந்த படி பார்த்துக் கொண்டிருந்தாள்.

பாலகுமாரன்



''டி. வி. யில படம் ஆரம்பிக்கிற போது பக்கத்துல போய்ச் சென்சார் சர்டிபிகேட்டுல என்னத்தை உத்துப் பார்த்தே?''

''படம் 'கி. மு. வா... கி. பி' யான்னு...''

— வி. கிருஷ்ணகுமார்.

''ஏம்மா நீ எப்ப வேலைக்குப் போவணும்?''

''நாளைலேர்ந்து.''

''அப்ப நான் இருந்துக்கவா இங்கேயே.''

''நான் உன்னைக் கேட்டாச்சு. நீதான் முடிவு சொல்லணும்.''

''கோர்ட்ல வச்சுப் பாத்ததுதான் என்னை. நம்பறியாம்மா என்னை?''

''நம்பறியான்னா?''

''ஏம்மா... ஊர் உலகம் கெட்டுக் கெடக்கும்மா. முன்ன பின்னத் தெரியாதவளை வேலைக்கு வச்சேன். புடைவையைக் காணோம். நகையைக் காணோம்னு சொல்ற காலம் இது.''

''என்கிட்ட ஓஹோன்னு ஒண்ணுமில்லை தாகம்மா. அப்படியே நீ எடுத்துட்டுப் போய் எங்கனாச்சும் மாட்டிக்கிட்டா.''

''சும்மா வுடுவாங்களா... தவடைல நாலு போட்டு...''

''ச்சே.. ச்சே... கூட ஒரு புடைவை கொடுத்து அப்பப்ப வீட்டுக்கு வந்துட்டுப் போன்னுவேன்.''

''ஏன்...?''

''இல்லாத குறைதானே. நீ எடுக்கற வரைக்கும் நான் ஏன் விடணும். நானே உன்னை சௌகர்யமா வச்சுக்கிட்டா? பழசாப் போறத உன்கிட்டதான் கொடுக்கப் போறேன். உன் கண்ணை உறுத்தற அளவுக்கு என்கிட்ட நகை நட்டு எதுவுமில்லை.''

''ம்ஹூம். மனுஷான் புரியாத பேசற. நம்மகிட்ட இல்லேங்கறதுக்காக மட்டுமா திருடறாங்க. வேணும்கற பேராசை தாம்மா. இதுல உறுத்தற அளவு இருந்தா என்ன.. ஒண்ணு ரெண்டு இருந்தா என்ன.. வேலைக்குப் போறப்ப பூட்டிச் சாவியை எடுத்துக்கினு போ.''

''நீ...?''

''வராந்தால பசங்களுக்கு வேணுங்கறத வச்சுட்டு உக்காந்துக்கறேன். அங்கனயே கொஞ்சம் சாஞ்சுக்கறேன்.''

''எட்டு மணியிலேர்ந்து நாலு மணி வரைக்கும் என்ன செய்வே?''

''பின்னாடி, முன்னாடி எதுனாத் தோட்டம் போடலாம். கருக்கல்ல முழிக்கறதுக்கு ஒரு தூக்கம் போடலாம். மத்தியானம் பால் கவர் வாங்கி நாலு வீட்டுக்குக் குடுக்கலாம். நீ சரின்னா இன்னும் இரண்டு வீட்டு வேலை பாக்கலாம்.''

''எதுக்கு?''

''காசுக்கு இல்ல தாயி. நாலு இடம் அலைஞ்சு திரிஞ்சு பூ வித்தவ. கட்டிப் போட்ட மாதிரி இருக்க முடியுமா? பரபரன்னு வேலை செஞ்சாத்தான் ராத் தூக்கம் நிம்மதியா இருக்கும்.''

''சரி.''

''யோசிச்சுச் சொல்லும்மா. நாலு வூட்டு வேலைக்கு அனுப்பிட்டு அப்புறம் வம்பு வந்தா என் தலைய உருட்டாத.''

''நீயும் என்னை மாதிரிதான. என்ன வம்பு பேச முடியும் மத்தவங்ககிட்டப் போய்?''

''நான் துரோகம் பண்ண மாட்டேன்னு தோணிப் போச்சு உனக்கு. நம்பிக்கையக் காப்பாத்துவேன். ஒண்ணும் கவலைப் படாம நீ வேலைக்குப் போ. நான் பாத்துக்கறேன் எல்லாம். சரி சோத்தப் போடுறியா. நாலு மணிக்கு முழிச்சது. கண்ணுச் சுத்துது.''

தட்டுப் போட்டு எதிரும் புதிருமாக உக்கார, தோட்டக் கதவு திறக்கும் சத்தம் கேட்டது.

''மளிகைக் கடைச் சாமான் வந்திருக்கும். நீ இரு. நான் போய்ப் பாக்கறேன்.''

ஹால் கதவு திறந்து வராந்தாவுக்குப் போனாள்.

''யம்மா...'' அங்கிருந்தபடியே குரல் கொடுத்தாள்.

''பானுமதி வீடுதானே?''

''ஆமா... வாங்க.'' யாரையோ வரவேற்றாள்.

பானுமதி ஹாலுக்கு வர அப்புறம் தலை தெரிந்தது.

''வா. அம்புஜம்.''

''அவரும் வந்திருக்காரு.''

''யாரு?''

''என் வீட்டுக்காரர்.''

''வாங்க. வாங்க. உள்ளே வாங்க.''

''நாளைக்கு ஜாயின் பண்றியான்னு கேட்டுட்டு வரச் சொன்னாங்க ஹெச்.எம். அதான் வந்தேன். இதான் உனக்குக் கிடைச்ச வீடா? அந்த வீடு இன்னும் பெரிசில்ல...?''

''ஆமா. உட்காருங்க.''

''இது யாரு சர்வென்ட்டா?''

''ஆமா. நீ என்ன சாப்பிடறே?''

''தண்ணி மட்டும் குடு. போறும்.''

பானுமதி உள்ளே ஓடினாள். குளிர் பெட்டி திறந்து பாட்டில் எடுத்துத் தம்ளர்களில் நீர் நிரப்பி ட்ரேயில் வைத்து இருவரிடமும் நீட்டினாள்.

"நாளைக்கு ஜாயின் பண்றேன் அம்புஜம்."

"டைவர்ஸ் கிடைச்சுடுத்தா?"

"கொடுத்துட்டாங்க."

"அப்பாடா நிம்மதி. கோர்ட் ஆர்டர் கொடுத்துட்டாங்களா?"

"இல்லை. தீர்ப்புச் சொல்லியாச்சு."

"நஷ்ட ஈடு.."

"பணமா இல்லை. பதிலாத்தான் இந்த வீடு."

"மியூச்சுவல் கன்ஸென்ட்டா?" அந்த மனிதர் வாய் திறந்து கேட்டார்.

"ஆமா."

"அப்ப நஷ்ட ஈடு கிடைக்காது."

"எனக்குக் கிடைக்காது. என் குழந்தைகளுக்குக் கேட்டாக் கிடைக்கும். அதுக்குப் பதிலா கோர்ட்டுக்கு வெளில இந்த வீடுன்னு செட்டில் ஆச்சு."

"குழந்தைங்க எங்கே? பள்ளிக்கூடமா?"

"ஆமா. நாலு மணிக்கு வருங்க."

"இவர்தான் சொன்னார். எனக்குத் தெரியாது. நேத்திக்கு உனக்குத் தீர்ப்புக் கொடுத்தாச்சுன்னு இன்னிக்குப் பேப்பர் பார்த்ததும்தான் தெரிஞ்சுது."

"பேப்பரா?"

"ஆமா. கோர்ட் தீர்ப்பு நம்பர் சொல்லி, எனக்கும் இன்னார் மகளும் என் முன்னாள் மனைவியுமானவன்னு உன் பேர் போட்டு எந்தவிதத் தொடர்பும் இல்லைன்னு பார்க்கலையா?"

"இல்லையே."

பானுமதி ஒரு கணம் வியப்பிலும் வேதனையிலும் ஆழ்ந்தாள். ஏன் விளம்பரம்? எதற்குப் பேப்பரில்? என்ன செய்யப் போகிறார்?"

"வேற என்ன போட்டிருக்கு?"

"ஒண்ணுமில்லை. கோர்ட்டுத்தீர்ப்புன்னு நாலு வரி. கூட்டத்தோட கூட்டமா நாலாம் பக்கம் மேல. இரண்டாவது பத்தி...."

"ஐ.ஸி."

"இனிமே உங்க வருமானம் மட்டும் தானா?" அவர் கேட்டார்.


"ஆமா."

"போறுமா.. ரெண்டு குழந்தைங்க."

"வேற வழி?"

"கொஞ்சம் சிரமப்படும்."

"என்ன சிரமம்.. ஒரு நாளைக்குப் போல அழுத முகத்தோட வருவா ஸ்கூலுக்கு. அதுக்குக் கஞ்சியோ, கூழோ.. சந்தோஷமா வரலாம்."



பானுமதி சிறிய அவமானம் உணர்ந்தாள்.

''வேலைக்காரிக்கு என்ன சம்பளம்?''

''இனிமேதான் பேசணும். நேத்திலேர்ந்துதான் வச்சிருக்கேன்.''

''சிரமம்தான். யாராவது துணை வேண்டியிருக்கு. தனியா ஒரு பொம்மனாட்டி இருக்க முடியுமா?''

''இருக்கலாம். இருக்கணும்னுதான் டைவர்ஸ் கேட்டது.''

''ராத்திரி கதவை நன்னாப் பூட்டிட்டுப் படுத்துக்கோ. எனக்கு ஒரே கவலை போ. என்னடா பானுமதிக்கு இப்படி ஆயிடுத்தே... என்ன பண்ணப் போறாளோன்னு.''

''லேடீஸ் சமாளிச்சுக்கலாம். குழந்தைகளுக்குத்தான் கஷ்டம்.''

''என்ன நீங்க சொல்றது.. சமாளிச்சுக்கலாம்னு ஈஸியா சொல்லிட்டேன். லேடீஸ் படற வேதனை லேடீஸுக்குத்தான் தெரியும்.''

''அது இல்லை அம்புஜம். குழந்தைகளுக்கு அப்பா எங்கேன்னு கேட்டாப் பதில் சொல்லணுமே...'' அந்த மனிதர் மடக்கினார்.

''அவங்களுக்குப் புரியுது என் கஷ்டம். என் கூடச் சேர்ந்து அனுபவிச்சாங்களே.''

''இந்தக் காலத்துப் பசங்களை நம்ப முடியாதும்மா. நாளைக்குப் பெரிசான வுடனே என்ன ஏதுன்னு கேக்கும். எத்தனை சொன்னாலும் எடுபடாது.''

''படாத போனால் போகட்டும்.''

''அப்படிச் சொல்லிட முடியுமா பானுமதி? இனிமே குழந்தைங்கதானே உனக்கு...?''

''இல்லை அம்புஜம் யாரும் எனக்குத் துணையில்லைன்னு தெரிஞ்சுக்கிட்டேன்.''

''அதென்ன அப்படிச் சொல்லிட்டே.. நாங்க இருக்கோம். மொத்த ஸ்கூல் டீச்சர்ஸும் இருக்கோம். எனக்குத் தெரியாதா நீ பட்ட அவஸ்தை.. ஒரு நாளைப் போல.. அப்பா.. எத்தனை ஹிம்ஸை. இதெல்லாம் பாக்கறப்ப எங்க மாதிரி இருக்கறவா லைஃப் எவ்வளவோ தேவலாம்.''

''உனக்கென்ன குறை?''

''இன்லாஸ் பிரச்னை. கூட்டுக் குடும்பம் வேற. என்னவோ இவர் என் பேச்சுக்குக் கொஞ்சம் தலையாட்டறதுனால பொழைச்சேன். இல்லைன்னா என் கதி?''

எந்தப் பதிலும் சொல்ல முடியாத இடத்துக்கு, மேலும் பேச முடியாத நிலைக்கு பானுமதி வந்தது உணர்ந்தாள்.

''நாளைக்கு நான் வரேன்னு சொல்லு.''

''நாளைக்கு நீயேதான் வரப் போறியே.''

''ஹெச்.எம்.முக்குப் பார்த்தேன்னு ஃபோன் பண்ண மாட்டியா?''

''இன்னிக்கு நான் லீவு. நீ சொன்னா போன் பண்றேன்.''

''பண்ணு.''

''பர்மனென்ட் வேலைக்காரியா?''

''அப்படின்னா?''

''எப்பவும் உன் கூடவே இருப்பாளா?''

''பள்ளிக்கூடத்துக்கு எப்படிக் கூட்டிட்டு வர முடியும்?''

''இல்லை. வீட்ல.''

''அவளுக்கு இஷ்டம்னா இருக்கலாம்.''

''சமையல் ரூம்ல ரெண்டு தட்டுப் போட்டிருக்கே?''

பானுமதிக்குக் கோபம் வந்தது.

''ரெண்டு தட்டும் எனக்குத்தான். ஒண்ணுல சாப்பாடு. ஒண்ணுல மீன் கறி மசாலா.''

''தம்ளர் இரண்டு இருக்கு.''

பானுமதிக்கு உள்ளே குமுறிற்று. என்ன கேள்வி? இது எதற்கு அது எதற்கு என்று... என்ன வேண்டும் இவர்களுக்கு?

''சரி. நாங்க கிளம்பறோம். லேட்டாறது எங்களுக்கு. சும்மா வெளியே ஒரு ரவுண்டு கிளம்பினோம்.''

அம்புஜம் எழுந்தாள். சரி ஹெச்.எம். கிட்டச் சொல்றேன். உம் புடைவை மாதிரி இருக்கு. ஏன் அதுக்குள்ள அவளுக்குக் கொடுத்துட்டே?''

பானுமதி பேசாதிருந்தாள்.

''சுவரு இன்னும் எழுப்பி இரும்புக் கதவு போட்டுக்கோ.''

''எதுக்கு?''

''ஒரு ஜாக்கிரதைக்குத்தான். வீடு நன்னா இருக்கு. நான் வரட்டுமா. வாசல் இறங்கிப் புருஷன் பின்னால் ஸ்கூட்டரில் உட்கார்ந்து, தோளில் கை வைத்துக் கொண்டாள். அந்தப் புருஷன் முகத்தில் நிரந்தரமாய் ஒரு அலட்சியச் சிரிப்பு, கேலி இருந்தது.

ஸ்கூட்டர் கிளம்ப அம்புஜம் கையசைத்தாள். பானுமதி பேசாது நின்றிருந்தாள். தோட்டக் கதவுச் சாத்தினாள். வராந்தா ஏறி ஹால் கதவு மூடினாள். தட்டெதிரே உட்கார்ந்து கொண்டாள். சாதம் எடுத்துத் தட்டில் போட்டாள். கண்ணில் ஜலம் பொங்கிக் கன்னம் வழிந்து புறங்கையில் தெறித்தது.

''அழுவுறியா... உக்காந்து அழுதுட்டு அப்புறமாச் சோறு துன்னு. உனக்குப் போறலம்மா. உலகத்துல தெரிஞ்சுக்க வேண்டியது நிறைய இருக்கு. இன்னும் குழந்தைத் தனமா இருக்கறே. உக்காந்து ஒரு பாட்டம் அழுது தீர்த்துடு.''

நாகம்மா எழுந்து வராந்தாவுக்குப் போய் உட்கார்ந்து கொண்டாள். வீட்டில் ஒரு நிசப்தம் படிந்தது.

'சுவரு இன்னும் எழுப்பி இரும்புக் கதவு போட்டுக்கோ...' — குரல் காதில் ரீங்கரித்தது.

'கதவு திறந்து, சிரித்தபடி வம்புக்கு வருபவர்களை, எது எழுப்பி நிறுத்த?' கேள்வி வந்தது.

(தொடரும்)

புதிய பார்வை

கே.பி. ஜனார்த்தனன்

சாரல் மழை மார்க்கெட்டில் சகதிக் கம்பளம் விரித்திருந்தது. பார்த்துப் பார்த்து நடந்து, பேரம் பேசி வாங்கிய காய்கறிகளைப் பைக்குள் திணித்துக்கொண்டு, ஒரு வாறாக மார்க்கெட்டை விட்டு வெளியே வருவதற்குள் சோர்ந்திருந்தான் அருண்.

மத்தியானமே கிளம்பியிருந்திருக்க வேண்டும். கவிதாவின் புடைவைகளை இஸ்திரி செய்து முடித்துக் குழந்தை ஷானுவைத் தூங்கப் பண்ணி பக்கத்து வீட்டு அம்மாவிடம் வீட்டை ஒப்படைத்து விட்டுப் புறப்படுவதற்குள், மணி மூன்றாகி, மழையும் தூற்றத் தொடங்கி விட்டது.

இன்னும் வரிசையாக வேலைகள். அதற்குள் ஒரு டீ சாப்பிட்டுவிடலாம் என்று, தான் வழக்கமாகச் செல்லும் ஹோட்டலுக்குள் நுழைந்தான். ஜூக் பாக்ஸில் காசைப் போட்டுத் தான் விரும்பிக் கேட்கும் அந்த இந்திப் பாடலின் பட்டனை அழுத்தி விட்டுப் பக்கத்து டேபிளில் அமர்ந்தான்.

''உனக்கென்னப்பா படுஜாலி!'' என்ற உற்சாகமான குரலுடன் ஒருகரம் தோளில் விழத் திரும்பினான்.

பிரகாஷ்! பக்கத்து சீட்டில்.

''என்ன சொன்னே?''

''உனக்கென்னப்பா படுஜாலி தான்,'' என்றான் பிரகாஷ் மீண்டும் கண் சிமிட்டிய படி. ''பெண்டாட்டி சம்பாதிச்சுக் கொண்டு வந்து கொட்டறா. அதைச் செலவு பண்ணி வாழ்க்கையை அனுபவிக்கிற ஒரே வேலை உனக்கு.....ம், கொடுத்து வெச்சவன்!''

அவ்வளவு தான். அதுவரை நேர்ந்த உடல் சோர்வு எல்லாம் ஒரே விநாடியில் பறந்துவிட்டது. அந்த அளவுக்கு மனப் பாரம் வந்து மேலழுத்திக் கொண்டது. இவன் மட்டுமா? ராகவ், சந்துரு, ஸ்ரீராம் எல்லாரும் இதையே தான் சொல்கிறார்கள்.

''உனக்கென்னடா தெரியும் மனசுக்குள்ளே தினம் நான் படற மனவேதனை?'' என்ற போது, அவன் குரல் அவனுக்கே கேட்கவில்லை. பிரகாஷ் பெரிய சிரிப்பாய்ச் சிரித்து, அதை அமுக்கி விட்டான்.

''ஆமா, உன்னை என்னடா நம்ம கிளப் பக்கமே காணோம்? கல்யாணத்துக்கு முன்னே ரெகுலரா ஆஜராயிட்டிருந்தே? நீ தானே இப்ப எல்லாரையும் விட ஃப்ரீ?''

''இல்லேடா, நிஜமாவே டயமில்லே. வீட்டிலேயே நேரம் சரியா இருக்கு.''

''ஆமா, அப்படி என்ன வீட்டிலே? பெண்டாட்டிக்குத் துணி துவைச்கப் போடறியாக்கும்?''

''ஆமா,'' என்றவன் பதிலுக்குக் காத்திராமல் பில்லை எடுத்துக் கொண்டு எழுந்தான்.

''இருடா, உன் பில்லையும் சேர்த்து நானே கொடுக்கறேன்'' என்று பறித்த பிரகாஷ், ''நான் சொன்னதை ஜோவியலா எடுத்துக்கோ,'' என்றான். அப்போதுதான் இன்னும் சீரியஸாக எடுக்கத் தோன்றியது இவனுக்கு.

பக்கத்து ஷோரூமில் நுழைந்து அப்பாவுக்கு, அம்மாவுக்கு, தங்கைக்கு என்று வரிசையாய்ப் புதுத்துணி எடுத்த போது மனம் அந்த நண்பனின் வார்த்தைகளிலேயே... வலி அந்த ஞாபகத்திலேயே.....

''சார், இந்த ஷர்ட் கிளாத் ரெண்டு மீட்டர் இருக்கு. லாஸ்ட் பிட். உங்களுக்கு 30 செ.மீ. ஆஃப் கிடைக்கும். இந்த பில்லில் ஒரு கையெழுத்துப் போடுங்க.''

போட்டான்.

பெயரை எழுதிவிட்டு, ''உங்க அட்ரஸ்? எந்த ஆபீசில் சார் வேலை பார்க்கறீங்க?'' என்றாள் அந்தப் பெண்.

''இல்லைங்க, நான் அன் எம்ப்ளாய்ட்.''

''அன் எம்ப்ளாய்டா? பின்னே இன்ஸ்டால்மென்டில் வாங்க ஃபார்ம்ஸ் கொடுத்த மாதிரி இருந்ததே?''

''அதுவா, என் மனைவி இன்ஷூரன்ஸ் கம்பெனியில் வொர்க் பண்றா. அவள் கணக்கில் எடுக்கத்தான் ஃபார்ம்ஸ் ஃபில் அப் செய்து கொண்டு வந்தேன்.''

''உங்க மனைவி வேலை பார்க்கறாங்களா?'' அவள் அவனைப் பார்த்த பார்வை தாக்கிற்று. ஒரு வாழ்ந்து கெட்ட பிச்சைக்காரனைப் பார்ப்பது போல! புதுஜோடி வாங்கிய பின் பழைய செருப்பைப் பார்ப்பது போல!

அதன் பின் அவள் அவனுக்குக் காட்டிய தனிப்பட்ட கவனம், பில் போடுவதில் காட்டிய அவசரம், எல்லாமே ஏதோ ஒரு வகையில் அவனை மற்ற கஸ்டமர்களிடமிருந்து அந்நியப் படுத்துகிற மாதிரி இருந்தது. ஓர் அதிகப்படியான பரிதாபத்தை வலிந்து செலுத்துகிற மாதிரி.... சடுதியில் அவனை அப்புறப்படுத்த முயன்ற மாதிரி... அதில் எங்கோ ஒரு 'நீயெல்லாம் ஓர் ஆம்பளை!' ஒளிந்திருந்த மாதிரி......

பஸ் பிடித்து அப்பாவின் வீட்டை அடைந்த போது, மணி ஐந்தாகியிருந்தது. ஆமாம், திருமணம் செய்து கொண்டதிலிருந்து அவன் தன் குடும்பத்

திலிருந்து தனியே பிரிந்து தான் வாழ்கிறான்.

சுசீலாவைத் திருமணம் செய்து கொண்ட போது, சுசீலாவுக்கு மட்டுமே வேலையிருந்தது. அவனுக்கும் ஒரு வேலை கிடைக்கிற வரை அவர்கள் காதல் காத்திருக்க முடியாமல், அவள் வீட்டில் கல்யாணத்துக்கு அவசரப் படுத்தவே, இருவர் வீட்டிலும் காதலை வெளியிட வேண்டியதாயிற்று. அவள் வீட்டில் எதிர்ப்பு வரவே, பதிவுத் திருமணம் செய்து கொள்ள வேண்டியதாயிற்று. அவன் வீட்டாருடன் ஒத்துப் போகாமல் போகவே, தனியே செல்ல நேரிட்டது.

முடிந்தவரை உறவுப் பாலத்தைத் துண்டித்து விடாமல் அடிக்கடி பெற்றோரைப் போய்ப் பார்த்துக் கொண்டு இருந்தான், அருண்.

அம்மாவின் ஆஸ்துமாவை விசாரிக்கும் போது சரியாகத் தான் இருந்தார்கள். தங்கையின் பிளஸ்டு மார்க்குக்குத் தோதான எதிர்காலத் திட்டங்களைக் கொடுத்தபோது, கேட்டுக்கொண்டு தான் இருந்தார்கள். ஆனால், "இந்தாம்மா, எல்லாருக்கும் தீபாவளிக்குத் துணி எடுத்து வந்தேன்," என்று பார்சலை விரித்ததும் அவர்கள் முகம் போன போக்கு!



''இதெல்லாம் எதுக்குப்பா? வேண்டாம்.

''தீபாவளிக்குத் தாம்மா. தனியே இருந்தால் என்ன நான் எடுத்துத் தரக்கூடாதா?''

''அதுக்கில்லேப்பா. உனக்கு ஒரு வருமானமிருந்தாச்சரி, பரவாயில்லை. உன் பெண்டாட்டி காசை எடுத்து எங்களுக்கு எதுவும் செய்ய வேண்டாம். அது சரியில்லை.''

அறைந்த மாதிரி இருந்தது. ம்... யோசிக்காமல் வாங்கி வந்தது தப்புத்தான்.

எடுத்துக் கொண்டான். வேறொன்றும் பேசப் பிடிக்காமல் தங்கை கொண்டு வந்து வைத்த காப்பியைக் குடிக்காமலேயே கிளம்பினான்.

வீட்டை அடைந்தபோது துவண்டிருந்தான்.

ஏற்கெனவே நிறையக் கசப்பான அனுபவங்கள். இன்று? டூ மச்.

தாள முடியாத மனம் சோர்ந்து போனது.

மனைவி வேலைக்குப் போக உட்கார்ந்து சாப்பிடும் கணவனின் நிலையை விட பரிதாபமான நிலையைக் கற்பனை செய்ய, இன்னொரு கம்பன் தான் வர வேண்டும்!

இருட்டிப்போனது. உள்ளேயும் வெளியேயும்!

லைட்டைப் போட்டுக் கொள்ளாமலேயே உட்கார்ந்திருந்தான், அருண்.

வெளியே வாசல் கதவைத் திறக்கும் ஒலி கேட்டது. சுசிலா...

''இதோ பாருங்க,'' என்று கணவனின் மோவாயை நிமிர்த்தினாள் சுசிலா. ''நமக்குக் குடும்பச் செலவுக்கு வேண்டியது மாசம் ஆயிரம் ரூபாய். அதை நீங்க சம்பாதிச்சா என்ன, நான் சம்பாதிச்சா என்ன?''

''அதில்லே. அது மட்டும் போதுமா?''

''ஆம்பளை சம்பாதிச்சா நல்லாயிருக்கும். ஆனா பொம்பளை சம்பாதிச்சா மோசம் இல்லைங்க! நீங்க என்னைச் சரியாப் புரிந்து கொண்டு, நமக்குள்ளே ஓர் அண்டர்ஸ்டாண்டிங் இருக்கு. அதான் இங்கே முக்கியம்.''

''பிரண்ட்ஸ் சொல்றாங்களே? இன்னிக்குக்கூட பிரகாஷ் கொடுத்து வெச்சவன், பெண்டாட்டி சம்பாதிச்சு வந்து கொட்டறான்னான். கேட்டு என் மனசு எப்படி வாடிப்போச்சு தெரியுமா?''

''சரி, ஏன் வாடிச்சு தெரியுமா? உங்க மனசில் ஒரு மூலையில் அப்படி ஓர் உறுத்தல் இருக்கு. அவன் சொன்னதும் அதை உணர்றீங்க. சரி, அதை அவன் சொல்லு முன்னாலும் அது அங்கே தானே இருக்கு? நீங்க உணரலையா?''

''எங்கே உணராமல்? அதான் ஒருத்தர் மாத்தி ஒருத்தர் அதைத் தொட்டுக் காட்டறாங்களே?''

''அவங்க தொட்டுக் காட்டா விட்டாலும் நீங்க உணரத்தான் செய்வீங்க. ஏன்னா அது அங்கே இருக்கே? அப்படி ஒரு ஃபீலிங்? அதை முதல்லே.....''

''எப்படிக் களைய முடியும் சுசி?''

''களைய வேண்டிய அவசியமில்லை. ஒத்துக் கொள்ளுங்க. அது ஓர் உண்மை. அந்த பிரண்ட் சொன்னது ஓர் உண்மை. நான் தான் சம்பாதிச்சு வந்து கொடுக்கறேன். ஆனா நீங்க வெறுமே உட்கார்ந்து சாப்பிடலை. அதுவும் ஓர் உண்மை. ஆனா அது உங்களுக்கு மட்டும் தான் தெரியும். அவனுக்குத் தெரியாது. உங்க மனசிலே தான் சந்தேகம் — பிளவு — இருக்கக் கூடாது. அடுத்தவங்க மனசிலே இருந்தா என்ன?''

தொட்டிலில் கிடந்த குழந்தைக்குக் கொசுவலை மாட்டி விட்டபடியே பேசினாள். ''நீங்க வேலைக்குப் போக முயற்சி செய்யறீங்க. வீட்டுப் பொறுப்புகளையெல்லாம் ஏத்துச் செய்யறீங்க. குழந்தையைக் குளிப்பாட்டிச் சட்டை மாத்தி விடறீங்க. எனக்குத் தெரியும், அவனுக்குத் தெரியாது. அதையே நான் வீட்டிலிருக்கும் போது, நீங்க செய்ய நான் விடறது கிடையாது. அதுவும் எனக்குத் தெரியும். அவனுக்குத் தெரியாது. தெரிஞ்சா பொறாமைப்படுவான், தன் வீட்டில் அப்படி ஒரு அண்டர்ஸ்டாண்டிங் இல்லையேன்னு! பொறாமையில் அதையே கிண்டல் பண்ணுவான். சரி, அம்மாவுக்கு உடம்பு எப்படி இருக்கு? துணிகளைக் கொடுத்திட்டீங்களா?''

''நல்லாத்தான் இருக்கா. ஏண்டா போனோம்னு ஆயிட்டுது.''

ஓர் வேண்டுகோள்



சுமார் 400 ஆதரவற்ற குழந்தைகளுக்கு இலவச உணவு, உடை, இருக்க இருப்பிடம், கல்வி மற்றும் மருத்துவ வசதியும் அளித்து வரும் சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம் ஆண்டுதோறும் தீபாவளி அன்று குழந்தைகளுக்கு புத்தாடைகள், பட்டாசுகள், இனிப்புகள் வழங்கி தீபாவளியை சிறப்பாக கொண்டாட பொது மக்கள் பண உதவியோ அல்லது பொருளுதவியோ கொடுத்து உதவும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தாங்கள் ஆதரவற்ற குழந்தைகளுக்கு அடைக்கலம் கொடுத்து அவர்களை ஒரு புதிய பாதையில் கொண்டு செல்லும் ஆசிரமத்தின் அரியதொரு செயலையும் திக்கற்ற முதியோர்களுக்கு அடைக்கலம் கொடுத்து வருவதையும் அறிந்திருப்பீர்கள் என்று நினைக்கிறோம். எனவே, இது சம்பந்தமாக தாங்கள் அளிக்கும் உதவி ஆதரவற்ற குழந்தைகளுக்கும், ஆசிரமத்தில் இருக்கும் முதியோர் இல்லத்தின் முதியோர்களுக்கும் மனமகிழ்ச்சியுடன் தீபாவளி திருநாளைக் கொண்டாட அவர்களுக்கு புத்தாடைகள், பட்டாசுகள், இனிப்புகள் வழங்க ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், முதியோர்களுக்கு பிரத்தியேகமாக சுமார் பத்து இலட்சம் ரூபாய் செலவில் முதியோர் இல்லம் கட்டி 100 முதியோர்களுக்கு அடைக்கலம் கொடுக்க வழிவகைகள் செய்து வருகிறோம். அதற்கும் பொது மக்கள் நிதி உதவி அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொது மக்கள் அளிக்க விரும்பும் நன்கொடை பணம், பொருள் எதுவாக இருந்தாலும், அக்குழந்தைகளின் நலனை முன்னிட்டு ஏற்றுக் கொள்ளப்படும். வருமான வரி விலக்கும் அளிக்கப்படும். பொது மக்கள் தங்களால் இயன்ற உதவியை பணமாக அல்லது பொருட்களாக,

நிர்வாகி,

சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்,

நெ. 20, கம்பர் தெரு, கிழக்கு தாம்பரம், சென்னை 600 059

''அவர்களும் ஏதாவது சொன்னாங்களா?''

''சொன்னால் பரவாயில்லையே. தீபாவளி டிரஸ்ஸை வேண்டாம்னுட்டாங்க. அதான் எனக்கு ரொம்ப அவமானமாயிட்டுது. உண்மையிலேயே நீ உன் பெண்டாட்டி காசை எடுத்து எங்களுக்கு எதுவும் செய்ய வேண்டாம்னுட்டாங்க.... நீயே உன் பெண்டாட்டி தயவிலே இருக்கிறேங்கிற தொனியில்.''

சுசீலா குபுக்கென்று எழுந்து கொண்டாள். குறுக்கும் நெடுக்குமாக நடந்தபடி சொன்னாள். ''நீங்களும் சரின்னு தலையை ஆட்டிட்டு வந்திட்டீங்க? தப்பு உங்க மேலே தான். அந்த மாதிரி ஒரு ஃபீலிங் அவங்களுக்கு வரும்கிறது எதிர்பார்க்கக் கூடியது தானே? எதிர் பார்க்கலையா நீங்க? வராதுன்னு நினைச்சதாலே தான் உங்களுக்குக் கஷ்டமா இருக்கு. வரும். அதுக்கு என்ன செய்யணும்னு தெரிஞ்சிட்டிருக்கணும்.''

''சரி, என்ன சமாதானம் சொல்றது?''

''சமாதானம் சொல்றது இல்லை. சொல்லவும் முடியாது. நேராகத் துணியைக் கொண்டு போய்க் கொடுக்க வேண்டியது. அம்மாவை நமஸ்காரம் பண்ணவேண்டியது. ஏதாவது கேட்டால் நறுக்கென்று நாலு வார்த்தை பேசிவிட்டு வந்துவிட வேண்டியது.''

''அப்ப மட்டும் கேட்க மாட்டாங்களா, ஏண்டா உன் பெண்டாட்டி சம்பளத்திலே இதெல்லாம் வாங்கிட்டு வரணும்னு?''

''அதுக்குத்தான் அந்த நாலு வார்த்தை. அம்மா, எங்களைப் பொறுத்தவரை என் காசு அவகாசுன்னு வித்தியாசம் பார்க்கிற இல்லை. இந்தக் காசுக்காக நான் அவளோடு போராட வேண்டியது வரலைங்கறது உண்மை. இதை நீங்க போட்டுக்கலைன்னா என் மனசு வருத்தப்படும். நான் வாங்கிக் கொடுத்ததைப் போட்டுக்கலேன்னா எப்படியோ அது மாதிரி.... அதே அளவு. போட்டுக்கலேன்னாக் கொடுத்திடுங்க. எடுத்திட்டுப் போயிடறேன்னு சொல்லிடறது.''

''சுசீலா, உனக்கு ரொம்ப உயர்ந்த மனசுன்னு நினைச்சேன். ரொம்பத் தெளிஞ்ச மனசும் கூட.''

''போச்சுடா,'' என்று பக்கத்தில் உட்கார்ந்தாள்.

''ஏம்மா?''

''அப்படியெல்லாம் நினைச்சா உடனே கவலை ஆரம்பிச்சிடும் உங்களுக்கு. இந்தத் தெளிஞ்ச மனசு எப்பவும் இப்படியே இருக்கணுமேங்கிற கவலை.''

''ஆமா, சரிதான்.''

''அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்.''

''ஏன் சுசி?''

''அந்தக் கவலையைத் தான் நான் பட்டிட்டிருக்கேனே? என் கவலை அது தாங்க. இந்தத் தெளிஞ்ச மனசு எனக்கு எப்பவும் இருக்கணும்னு....'' எழுந்து ஒரு தலையணையை எடுத்து அவன் முதுக்குக்குப் பின்னால் செருகினாள்.

''இதோ பாருங்க. வாழ்க்கையில் திருப்பங்கள் தான் உண்டு. கிளைமாக்ஸ் கிடையாது. ஆனா வர்ற ஒவ்வொரு திருப்பமும் கிளைமாக்ஸ் மாதிரி தோன்றும். இது ஒரு திருப்பம் அவ்வளவுதான். உங்களுக்கு ஒரு வேலை கிடைப்பது அடுத்த திருப்பம். அதுக்காகக் காத்திருக்கோம். அவ்வளவு தான்.''

அந்தத் தலையணையிலும் சரி, அவள் வார்த்தைகளிலும் சரி, சாயச் சாய இதமாக உணர்ந்தான் அருண்.

ஏற்கெனவே விலை போனது!

அரபு நாட்டைச் சேர்ந்த ஷேக் ஒருவர், இந்தியா வந்தபோது, அழகான விமானப் பணிப்பெண்ணைக் கண்டார். நண்பரிடம் அந்தப் பெண்ணின் விலை என்ன என்று விசாரித்தார்.



''உங்களால் அவளை வாங்க முடியாது. அந்தப் பெண் ஏர் இந்தியாவுக்குச் சொந்தமானவள்.''

''அப்படியானால் ஏர்—இந்தியா என்ன விலை?'' அதையே வாங்கி விடுகிறேன்!''

''அதுவும் முடியாது. ஏர்—இந்தியா இந்திய அரசுக்குச் சொந்தமானது.''

''ஹூம், இந்திய அரசாங்கத்தையே விலைக்கு வாங்கிவிடுகிறேன்!'' என்று சீறினார்.

''அதுவும் சாத்தியமில்லை. இந்திய அரசாங்கத்தை ஏற்கெனவே போஃபோர்ஸ் நிறுவனம் விலைக்கு வாங்கி விட்டது!''

''தூயவன்'' பேச்சிலிருந்து:

பி. ஆர். ஜீவரத்தினம்.



கல்பனாவின் மேனியழகு எழிலோவியமாச்சு! ஒளிசுடர வைத்தது ஃபேர் அண்ட் லவ்லி.

"ஆச்சா!" கிளுகிளுக்கிறாள் கல்பனா. பொற்சிலைதான் பேசுதோ என மலைக்கிறான் அருண், வண்ண மலரில் பதிந்த வண்டுக் கண்கள் கொட்டாமலே. செப்பிடு வித்தை இது ஃபேர் அண்ட் லவ்லியின் ஒப்பில்லாக் கைவண்ணம். இரண்டே மாதங்களில் இதமாகப் பூத்தது இயல்பான சிகப்பழகு. நங்கையின் மேனியிலே நல்லொளி சுடர, பெற்ற நிறப் பொலிவை இவ் வண்ணமே பேணிக் காக்க— கல்பனா என்றும் வேளைதவறாமல் இட்டு வருகிறாள் ஃபேர் அண்ட் லவ்லி. இனி, இயற்கைக் காட்சிகள் அல்ல, எழிலரசி கல்பனா தான் ஓவியன் அருணுக்கு வண்ணக் கற்பனை உலகமே.


கல்பனாவைப் போலவே நீங்களும் கவனிக்கத்தக்க சிகப்பழகை அடைந்திடலாம்— ஃபேர் அண்ட் லவ்லி துணையோடு.

ஒரு முக்கிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பு...


ஃபேர் அண்ட் லவ்லி. இயல்பாக உங்களை சிகப்பழகியாக்க இதிலுள்ள ஒப்பற்ற ஃபார்முலா— இரு முக்கிய வழிகளில் வேலை செய்கிறது.



ஒன்று: சருமத்தின் அடியாழத்தில் செயல்பட்டு, உடல் கறுக்கும் உள்வினையைத் தடுக்கிறது—வேறெந்த க்ரீமுக்கும் இது இயலாத சாதனை. மற்றொன்று: இதிலுள்ள இரட்டை ஸன்ஸ்க்ரீன் ஆற்றல், உடல்கறுக்க வைக்கும் சூரிய ஒளியை உட்புகாதபடி தடுத்து நிறம் காத்திடுகிறது. ஆகவே 6 முதல் 8 வாரங்களில் புதிதாக மேலெழும்பும் கொழுந்துச் சருமப் படலங்களில் செவ்வையான சாயல் மிளிரும். அன்றாடம் இருமுறை ஃபேர் அண்ட் லவ்லி— நாள் தவறாமல் உபயோகித்து வந்தால், மென்மை கொஞ்சும் இயல்பான சிகப்பழகு உறுதியாக உமதாகி விடும்.



ஃபேர் அண்ட் லவ்லி துவங்குமுன்



ஃபேர் அண்ட் லவ்லி உபயோகிக்கும் நாட்களில்

உபயோக முறை:

கழுவிக் கொண்ட முகம், கழுத்து, கரங்கள் மீது ஃபேர் அண்ட் லவ்லி க்ரீமை பொட்டுப் பொட்டாக இட்ட பின், மேல் நோக்கித் தேய்க்க வேண்டும் மெதுவாக. ஃபேர் அண்ட் லவ்லி, செயல்படத் துவங்கும் போது சற்றே கூசும் உணர்வு ஏற்படுமானால் கவலை வேண்டாம், விரைவில் அது மறைந்துவிடும்.

எளிதில் உள் உறிஞ்சப்படும் குழைவு குணமோங்கி முன்னிலும் மென்மையாக வருகிறது ஃபேர் அண்ட் லவ்லி, ஒரே சீராகப் பரவுகிறது சருமத்தில் மேலும் எளிதில் உறிஞ்சப் படுகிறது. உடலார உணருவீர் இம் மாறுதலை...பிறகு காண்பீர் கண்ணார.

ஃபேர் அண்ட் லவ்லி பற்றி மேலும் கேட்டறிய விரும்பினீரானால் எழுதுங்கள் இம் முகவரிக்கு:
திருமதி கவிதா குமார், ஃபேர் அண்ட் லவ்லி ஆலோசகர், பி.ஓ. பாக்ஸ் 758,
பம்பாய்-400 021.

ஃபேர் அண்ட் லவ்லி
சிகப்பழகு க்ரீம்



கண்காணும் சிகப்பழகை உமதாக்கும்...இயற்கைக்கே உரிய இதமான வழியில்



அத்தியாயம் 31

''வேளை வந்துவிட்டது!''

சென்ற அத்தியாயத்தில் கூறிய நிகழ்ச்சிகளோடு இந்தக் கதையை முடித்துவிடக் கூடுமானால் எவ்வளவோ நன்றாயிருக்கும். நேயர்களில் சிலர் ஒருவேளை அவ்விதம் எதிர்பார்க்கவுங்கூடும். ஆனால் அது இயலாத காரியமாயிருக்கிறது. அதே தினத்தில் ஏறக்குறைய அதே நேரத்தில் கடம்பூர் சம்புவரையரின் மாளிகையில் நடந்த பயங்கர நிகழ்ச்சியைப் பற்றி நாம் இனிச் சொல்ல வேண்டியிருக்கிறது.

நந்தினி அவளுடைய அந்தப்புர அறையில் தனியாக அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தாள். அவளுடைய உள்ளத்தில் குடிகொண்டிருந்த பரபரப்பை அவளுடைய முகத் தோற்றம் காட்டியது. அவளுடைய கண்களில் ஓர் அபூர்வமான மின்னொளி சுடர் விட்டுத் தோன்றி மறைந்தது. அந்த அறைக்குள்ளே வருவதற்கு அமைந்திருந்த பல வழிகளையும் அவள் அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த வழிகளில் ஏதாவது காலடிச் சத்தம் கேட்கிறதா என்று அவளுடைய செவிகள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தன. ''வேளை நெருங்கி விட்டது!'' என்று அவளுடைய உதடுகள் அடிக்கடி முணுமுணுத்துக் கொண்டிருந்தன. சில சமயம் அவ்விதம் முணுமுணுத்த அவளுடைய உதடுகள் துடித்தன. இன்னும் சில சமயம் அவளுடைய கண்ணிமைகளும் புருவங்களும் துடித்தன. ஒவ்வொரு தடவை அவள் உடம்பு முழுதுமே ஆவேசக்காரனுடைய தேகம் துடிப்பதுபோல் பதறித் துடிதுடித்தது.

நந்தினி படுப்பதற்காக அமைத்திருந்த பஞ்சணை மெத்தை விரித்த கட்டிலில் நாலு பக்கமும் திரைச்சீலைகள் தொங்கின. அவை கட்டிலை அடியோடு மறைத்துக் கொண்டிருந்தன. நந்தினி ஒரு பக்கத்துத் திரைச் சீலையை மெதுவாகத் தூக்கினாள். படுக்கையில் நீளவாட்டில் வைத்திருந்த கொலை வாளைப் பார்த்தாள். கொல்லன் உலைக்களத்தில் ஜொலிக்கும் தீயினாலேயே செய்த வாளைப் போல் அது மின்னிட்டுத் திகழ்ந்தது. அத்தீயினால் மெத்தையும் கட்டிலும் திரைச்சீலைகளும் எரிந்து போகவில்லை என்பது ஆச்சரியத்துக்கிடமாயிருந்தது. இதை நினைத்துப் பார்த்துத்தான், அது செந்தழலினால் செய்த வாள் அல்லவென்றும், இரும்பினால் செய்த வாள்தான் என்றும் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது.

நந்தினி அந்த வாளைக் கையில் எடுத்தாள். தூக்கிப் பிடித்தாள். தீபத்தின்

ஒளியில் அதை இன்னும் நன்றாக மின்னிடும்படி செய்து பார்த்து உவந்தாள். பிறகு, அதைத் தன் மார்புடன் அணைத்துக் கொண்டாள். கன்னத்தோடு சேர்த்து வைத்துக் கொண்டு முத்தமிட்டாள். அந்த வாளுடன் உரையாடவும் செய்தாள். "தெய்வ வாளே! நீ உன்னுடைய வேலையைச் செய்ய வேண்டிய வேளை நெருங்கி விட்டது; என்னை நீ கைவிட மாட்டாய் அல்லவா? இல்லை, இல்லை! நீ என்னைக் கைவிட மாட்டாய்! என்னுடைய கைகளே தான் என்னைக் கைவிட்டால் விடும்!" என்று கூறினாள்.

பிறகு, தன் கரங்களைப் பார்த்து, "கரங்களே! நீங்கள் உறுதியாக இருப்பீர்களா? சீச்சீ! இப்போதே இப்படி நடுங்குகிறீர்களே? சமயம் வரும்போது என்ன செய்வீர்கள்? ஆம், ஆம்! உங்களை நம்புவதில் பயனில்லை. வேறு இரண்டு கரங்களைத்தான் இன்றைக்கு நான் சம்பாதித்துக் கொள்ள வேண்டும்!" என்றாள்.

திடீரென்று நந்தினியின் உடம்பு முழுதும் ஒரு தடவை சிலிர்த்தது. வெறிக் கனல் பாய்ந்த கண்களினால் மேல் நோக்காகப் பார்த்தாள். "ஆகா! நீ வந்து விட்டாயா? வா! வா! சரியான சமயத்திலேதான் வந்தாய்! என் அன்பே! என் அரசே! வா! வீர பாண்டியன் தலையே! ஏன் கூரை ஓரத்திலேயே இருக்கிறாய்? இறங்கி வா! இங்கே யாரும் இல்லை! உன் அடியாளைத் தவிர வேறு யாரும் இல்லை! ஏன் இப்படி விழித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்? வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொல்! 'இந்தக் கண்டத்துக்குத் தப்பி உயிர் பிழைத்தால் உன்னைப் பாண்டிய சிங்காதனத்தில் ஏற்றி வைப்பேன்!' என்று சொன்னாயே! அதை நான் மறக்கவில்லை. உனக்கு நான் கொடுத்த வாக்குறுதியையும் மறக்கவில்லை. அதை நிறைவேற்றும் வேளை நெருங்கிவிட்டது. அதற்காக நான் எத்தனை காலம் பொறுமையாகக் காத்திருந்தேன்? என்னென்ன வேஷங்கள் போட்டேன்? — எல்லாம் நீ பார்த்துக் கொண்டு தானிருந்தாய்! இப்போதும் பார்த்துக் கொண்டிரு! கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிரு. நீதான் கண் கொட்டுவதே கிடையாதே! நானும் கண்ணை மூடித் தூங்க முடியாமல் செய்து வருகிறாய்! இன்று இரவு உனக்குப் பழிவாங்கி விட்டேனானால், அப்புறமாவது என்னை விட்டுப் போவாய் அல்லவா? அப்புறமாவது என்னைத் தூங்க விடுவாய் அல்லவா?... மாட்டாயா? பாண்டிய சிங்காதனத்தில் நான் ஏறி அமர்வதைப் பார்த்த பிறகுதான் போவாயா? என்னுடைய வாக்குறுதியை நான் நிறைவேற்றினால், உன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றுவதாகச் சொல்கிறாயா?...... இல்லை, இல்லை! எனக்குச் சிங்காதனமும் வேண்டாம், மணி மகுடமும் வேண்டாம். உன் மகன் என்று யாரோ ஒரு சிறுவனைக் கொண்டு வந்தார்கள். அவனைச் சிங்காதனத்தில் ஏற்றி மணி மகுடமும் சூட்டியாயிற்று. உனக்குப் பழிக்குப் பழி வாங்கி விட்டேனானால், அதைக் கொண்டு நீ திருப்தி அடைவாய்! பின்னராவது, என்னை விட்டுச் செல்வாய்! போரில் இறந்தவர்கள் எல்லாரும் எந்த வீர சொர்க்கத்துக்குப் போகிறார்களோ, அந்த வீர சொர்க்கத்துக்கு நீயும் போவாய்! அங்கே என்னைப் போல் எத்தனையோ பெண்கள் இருப்பார்கள்! அவர்களில் ஒருத்தியை...... என்ன? மாட்டேன் என்கிறாயா? கடவுளே! நானும் உன்னோடு வர வேண்டும் என்கிறாயா?...... சரி, சரி! அதைப் பற்றிப் பிறகு பேசிக் கொள்வோம்! என் அன்பே! யாரோ வருகிறார்கள் போலிருக்கிறது. நீ மறைந்து விடு!...... நானும் இந்தப் பழி வாங்கும் வாளை மறைத்து வைக்கிறேன்......"

அச்சமயம் வாசற்படிக்கு அருகில் உண்மையாகவே காலடிச் சப்தம் கேட்டது. நந்தினி வாளைக் கட்டிலில் வைத்துக் கொண்டிருக்கும்போதே மணிமேகலை உள்ளே வந்தாள்.

சற்றுமுன் வெறிபிடித்துப் புலம்பிய நந்தினி ஒருகண நேரத்தில் முற்றும் மாறுதல் அடைந்தவளாய், "நீதானா, மணிமேகலை? வா! வா!" என்றாள். அவள் குரலில் அமைதி நிலவியது.

"அக்கா! இது என்ன? எப்போதும் வாளும் கையுமாகவே இருக்கிறீர்களே?" என்றாள் மணிமேகலை.

"பின், என்ன செய்வது? ஆண் பிள்ளைகள் இவ்வளவு தூர்த்தர்களாயிருந்தால், நாம் வாளைத் துணை கொள்ள வேண்டியதுதானே?"

"தேவி! நான் ஒருத்தி துணை இருக்கிறேனே? என்னிடம் தங்களுக்கு நம்பிக்கை இல்லையா?"

"உன்னிடம் நம்பிக்கை இல்லாமலா என்னுடைய அந்தரங்கத்தையெல்லாம் உன்னிடம் சொன்னேன். மணிமேகலை! இந்த



உலகிலேயே நான் நம்பிக்கை வைத்திருப்பவள் நீ ஒருத்திதான். ஆனாலும், உன் கூடப் பிறந்த சகோதரனுக்கு எதிராக உன்னால் ஒன்றும் செய்ய முடியாதல்லவா?''

''அக்கா! எனக்குக் கூடப் பிறந்த சகோதரன் இல்லை என்று முடிவு செய்து கொண்டு விட்டேன்...''

''ஏன் இவ்விதம் சொல்கிறாய்? எப்படியும் அவன் உன் சகோதரன்....''

''சகோதரனாவது? சகோதரியாவது? அந்த உறவெல்லாம் வெறும் பிரமை என்று தெரிந்து கொண்டேன். கந்தமாறன் என்னுடைய விருப்பத்துக்கு எதிராக, — தன்னுடைய சௌகரியத்துக்காக, — என்னை வற்புறுத்திக் கட்டிக் கொடுக்கப் பார்க்கிறான்! உண்மையான சகோதர பாசம் இருந்தால், இப்படிச் செய்வானா?.....''

''தங்காய்! உன்னுடைய நன்மைக்காகவே அவன் உன்னை இளவரசருக்கு மணம் செய்து கொடுக்க விரும்பலாம் அல்லவா?''

''ஆமாம்; என்னுடைய நன்மை தீமையை இவன் கண்டுவிட்டானாக்கும்! உண்மையில், என்னுடைய நன்மையை அவன் கருதவேயில்லை, அக்கா!''

''ஈழம் முதல் வட பெண்ணை வரையில் பரந்த சோழ ராஜ்யத்தின் சிங்காதனத்தில் நீ பட்ட மகிஷியாக வீற்றிருக்க வேண்டும் என்று உன் தமையன் விரும்புவது உன்னுடைய நன்மைக்கு அல்லவா?''

''இல்லவே இல்லை! நான் தஞ்சாவூர் ராணியானால், இவன் முதன் மந்திரியாகலாம் அல்லது பெரிய பழுவேட்டரையரைப் போல் தனாதிகாரியாகலாம் என்ற ஆசைதான் காரணம்! அக்கா! அக்கா...!'' என்று மணிமேகலை மேலே சொல்லத் தயங்கினாள்.

''சொல், மணிமேகலை! உன் மனத்தில் உள்ளது எதுவானாலும் தாராளமாய்ச் சொல்லலாம். என்னிடம் உனக்குள்ள அன்பைக் குறித்து நீ சொன்னதெல்லாம் உண்மைதானே!''

''அக்கா! அதைப் பற்றிச் சந்தேகிக்க வேண்டாம். இந்த உலகத்திலேயே நான் அன்பு வைத்திருப்பது இரண்டு பேரிடந்தான். ஒருவர் தாங்கள்....''

''இன்னொருவர் யார்?''

''உங்கள் மனத்துக்கு அது தெரியும். என்னை ஏன் கேட்கிறீர்கள்....?''

''தங்காய்! உனக்கு அது சந்தோஷமாயிருக்கும் என்று நினைத்தேன். கதைகளும் காவியங்களும் நீ கேட்டதில்லையா? ஒரு பெண்ணின் உள்ளத்தில் காதல் உதயமானால் அதைப் பற்றி அவள் யாரிடமாவது பேச விரும்புவது இயல்பு அல்லவா? அந்தரங்கத் தோழி என்பது பின் எதற்காக.....?''

''அது உண்மைதான், அக்கா! என் அந்தரங்கத்தையும், தங்களிடம் தெரியப்படுத்தியிருக்கிறேன். ஆனால் இப்போது நான் தங்களிடம் அவசரமாக வந்தது வேறு ஒரு செய்தி சொல்வதற்காக. மிக்க கவலை தரும் செய்தி, அக்கா!''

நந்தினி திடுக்கிட்டு, ''என்ன? என்ன?'' என்று கேட்டாள். எத்தனையோ காலமாகத் திட்டமிட்டுக் கொண்டிருந்து இன்று நிறைவேற்றலாம் என்று எண்ணியிருந்த காரியத்துக்கு ஏதாவது தடங்கல் ஏற்படுமோ என்ற பீதி அவள் மனத்தில் குடி கொண்டது. அதன் அறிகுறி அவள் முகத்திலும் தோன்றியது.

''அக்கா! தனாதிகாரி பழுவேட்டரையர் இன்னும் தஞ்சாவூருக்குப் போய்ச் சேரவில்லையாம். வழியில்.....''

''வழியில் என்ன நேர்ந்தது? ஒருவேளை மனத்தை மாற்றிக்கொண்டு திரும்பி விட்டாரா?'' என்று நந்தினி கேட்ட கேள்வியில் பீதி குறைந்திருக்கவில்லை.

''அப்படி அவர் திரும்பியிருந்தால் நன்றாயிருக்கும், அக்கா! அன்றைக்கு நாம் ஏரித் தீவில் இருந்தபோது புயல் அடித்ததல்லவா? அந்தப் புயல் கொள்ளிடத்திலும் அப்பாலும் ரொம்பக் கடுமையாக அடித்ததாம். பழுவேட்டரையர் கொள்ளிடத்தில் படகில் சென்றபோது புயல் பலமாக இருந்ததாம்...''

''அப்புறம்?'' என்று நந்தினி பரபரப்புடனேதான் கேட்டாள். ஆயினும் கவலைத் தொனி சிறிது குறைந்திருந்தது.

''அக்கரை சேரும் சமயத்தில் படகு கவிழ்ந்து விட்டதாம்!''

''ஐயோ!''

''தப்பிக் கரை ஏறியவர்கள் கொள்ளிடக் கரையில் எங்கும் தேடிப் பார்த்தார்கள். தங்கள் கணவர் மட்டும் அகப்படவில்லை!'' என்றாள் மணிமேகலை.

இந்தச் செய்தியைக் கேட்டதும் நந்தினி விம்மி அழுவாள் என்று மணிமேகலை எதிர்பார்த்து, அவளுக்கு ஆறுதல் சொல்லத் தயாராயிருந்தாள். ஆனால் நந்தினியோ அப்படியொன்றும் செய்ய



வில்லை. சிறிதும் படபடப்புக் காட்டாமல், அவநம்பிக்கை தொனித்த குரலில், "இந்தச் செய்தி உனக்கு எப்படித் தெரிந்தது?" என்றாள்.

"பழுவேட்டரையரோடு போன ஆட்களில் ஒருவன் திரும்பி வந்திருக்கிறான். அவன் என் தமையனிடம் சொல்லிக் கொண்டிருந்தான். நானே என் காதினால் கேட்டேன், அக்கா! தங்களிடம் இந்தச் செய்தியை எப்படித் தெரிவிப்பது என்று என் தமையன் தயங்கி, இளவரசரிடம் யோசனை கேட்டுக் கொண்டிருந்தான். நான் எப்படியாவது தங்களிடம் சொல்லி விடுவது என்று ஓடிவந்தேன்....."

இவ்விதம் கூறிய மணிமேகலை துயரம் தாங்காமல் விம்மத் தொடங்கினாள்.

நந்தினி அவளைக் கட்டி அணைத்துக் கொண்டு, "என் கண்ணே! என்னிடம் நீ எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாய் என்று தெரிந்து கொண்டேன். ஆனால், நீ வருத்தப்பட வேண்டாம்!" என்றாள்.

மணிமேகலை சிறிது வியப்புடனேயே நந்தினியை நிமிர்ந்து பார்த்தாள். 'இவளுடைய நெஞ்சு எவ்வளவு கல் நெஞ்சு?' என்று அவள் மனத்தில் தோன்றிய எண்ணத்தை நந்தினி தெரிந்து கொண்டாள்.

"தங்காய்! துக்கச் செய்தியைக் கூறி எனக்கு ஆறுதல் சொல்லுவதற்காக நீ ஓடி வந்தாய். ஆனால் உனக்கு நான் தேறுதல் கூறவேண்டியிருக்கிறது. நீ வருத்தப்பட வேண்டாம். என் கணவருடைய உயிருக்கு ஆபத்து ஒன்றும் வரவில்லை என்பது நிச்சயம். அப்படி ஏதாவது நேர்ந்திருந்தால் என் நெஞ்சே எனக்கு உணர்த்தியிருக்கும். அதனாலே தான் நான் கவலைப்படவில்லை. ஆனால் நீ கேள்விப்பட்டதை இன்னும் விவரமாய்ச் சொல்! என் மனத்தில் வேறொரு சந்தேகம் உதித்திருக்கிறது..."

"என்ன சந்தேகம், அக்கா!"

"உன் தமையனும் அந்தப் பல்லவ பார்த்திபேந்திரனும் சேர்ந்து என் கணவருக்கு ஏதேனும் கெடுதல் செய்யத் திட்டமிட்டிருக்கிறார்களோ என்று எண்ணுகிறேன். அதற்கு, முன் ஜாக்கிரதையாக இம்மாதிரி ஒரு செய்தியை அவர்களே தயாரித்திருக்கலாமல்லவா?"

"எனக்கு விளங்க வில்லை, அக்கா! அவர்கள் ஏன் பழுவேட்டரையருக்குத் தீங்கு செய்ய வேண்டும்?"

"நீ பச்சைக்குழந்தையாகவே இருக்கிறாய், மணிமேகலை! உன் தமையனும் பார்த்திபேந்திரனும் என் மீது துர் எண்ணம் கொண்டிருக்கிறார்கள் என்று நான் சொல்ல வில்லையா? அதற்காகத்தான் இந்த வாளை எப்போதும் அருகிலேயே வைத்துக் கொண்டிருக்கிறேன் என்றும் சொல்லவில்லையா?.."

"சொன்னீர்கள்! அதனால் கந்தமாறனை இனிமேல் என் தமையன் என்று சொல்ல வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டேன். அந்தப் பாதகனை என் உடன் பிறந்தவனாக நான் இனிக் கருத மாட்டேன். இருந்தாலும்..... அவர்கள் பழுவேட்டரையருக்கு ஏன் தீங்கு செய்ய வேண்டும்?"

"தங்காய்! இது கூடவா நீ தெரிந்து கொள்ள முடியவில்லை? கிழவரைக் கலியாணம் செய்து கொண்டு தவிக்கும் நான், அவர் போய் விட்டால் மனத்திற்குள் சந்தோஷப்படுவேன், பிறகு அவர்களுடைய துர் நோக்கத்துக்கும் இணங்குவேன் என்று தான். உன் தமையன் இப்படிப்பட்டவன் என்று தெரிந்திருந்தால் அவனை என் வீட்டில் வைத்திருந்து சகோதரனைப் போல் கருதிப் பணிவிடை செய்திருக்க மாட்டேன். யம லோகத்தின் வாசல் வரை சென்றவனைக் காப்பாற்றியிருக்க மாட்டேன்..."

"அக்கா! இனி நான் தங்களை விட்டு ஒரு கணமும் பிரிய மாட்டேன். அந்த இருவரில் ஒருவர் இங்கு வந்தால், என்னுடைய கையாலேயே அவர்களைக் கொன்று விடுவேன்!"

"மணிமேகலை! அந்தக் கவலை உனக்கு வேண்டாம். என்னை நானே காப்பாற்றிக் கொள்வேன். கந்தமாறனும் பார்த்திபேந்திரனும் என் அருகில் நெருங்கினால், என்றும் மறக்காதபடி அவர்களுக்குப் புத்தி கற்பித்து அனுப்புவேன். அவர்களிடம் எனக்குச் சிறிதும் பயமில்லை. முரட்டு இளவரசரைப் பற்றி மட்டுந்தான் கொஞ்சம் பயம் இருந்தது. நல்லவேளையாக அந்த அபாயத்தினின்று என்னை நீயே காப்பாற்றி விட்டாய்!"

"நான் தங்களைக் காப்பாற்றினேனா? அது எப்படி?"

"இளவரசரின் உள்ளத்தை நீ கவர்ந்து விட்டாய் என்பதை அறியவில்லையா, மணிமேகலை! வாணர் குலத்து வீரரைக் கையைப் பிடித்து இழுத்து அப்பால் தள்ளிவிட்டு உன்னை அவர் ஏரித் தண்ணீரிலிருந்து எடுத்துக் காப்பாற்றியதன் காரணம் என்ன? அதற்குப் பிறகும் அவரை நான் கவனித்துக் கொண்டுதான் வருகிறேன். உன் மனத்திற்கு அது தெரியவில்லையா, மணிமேகலை?"

"தெரியாமல் என்ன? தெரிந்துதானிருக்கிறது. இளவரசரை நினைத்தாலே எனக்குப் பயமாயிருக்கிறது. அவர் அருகில் வந்தால் என் உடம்பு நடுங்குகிறது. என் தமையன் என்று சொல்லிக் கொள்ளும் கிராதகன் இருக்கிறான் அல்லவா? அவன் வேறு

ஓயாமல் என் பிராணனை வாங்கிக் கொண்டிருக்கிறான்......''

''இளவரசரை நீ மணந்து கொள்ள வேண்டும் என்று தானே?''

''ஆம்; தனியாக என்னை ஒரு கணம் பார்த்தால் போதும்! உடனே எனக்கு அவன் உபதேசம் செய்ய ஆரம்பித்து விடுகிறான். அவனுடைய தொந்தரவுக்காகவே....''

''அவனுடைய தொந்தரவுக்காக இளவரசரை மணந்து கொண்டு விடலாம் என்று முடிவு செய்து விட்டாயா?''

''தாங்கள் கூட இவ்விதம் சொல்லுகிறீர்களே?'' என்று மணிமேகலை விம்மி அழத் தொடங்கினாள். அவளுடைய கண்களில் கண்ணீர் அருவி பெருகிற்று.

நந்தினி அவளைச் சமாதானப் படுத்தினாள். ''ஏதோ விளையாட்டுக்காகச் சொன்னேன். அதற்காக இப்படி அழ ஆரம்பித்து விட்டாயே?'' என்று சொல்லிக் கண்ணீரைத் துடைத்தாள்.

மணிமேகலை சிறிது சமாதானம் அடைந்ததும் ''என் கண்ணே! உன் மனத்தை நன்றாகச் சோதித்துப் பார்த்துப் பதில் சொல். உண்மையாகவே, நீ இளவரசர் கரிகாலரை விரும்பவில்லையா? அவரை மணந்து கொண்டு சோழ சாம்ராஜ்யத்தின் பட்டமகிஷியாக இருக்க ஆசைப் படவில்லையா?'' என்றாள் நந்தினி.

''ஒரு தடவை கேட்டாலும் நூறு தடவை கேட்டாலும் என் பதில் ஒன்றுதான், அக்கா! அந்த ஆசை எனக்குக் கிடையவே கிடையாது.''

''வாணர் குலத்து வந்தியத் தேவரிடம் உன் மனத்தைப் பறி கொடுத்திருக்கிறாய் என்பதும் உண்மைதானே?''

''ஆம், அக்கா! ஆனால் அவருடைய மனது எப்படியிருக்கிறதோ?''

''அவருடைய மனது எப்படியிருந்தால் என்ன? அவர் உயிரோடிருந்தால் அல்லவா அவர் மனத்தைப் பற்றிக் கேட்க வேண்டும்?''

மணிமேகலை திடுக்கிட்டு, ''என்ன சொல்கிறீர்கள், அக்கா!'' என்றாள்.

''மணிமேகலை! நீ இன்னும் உண்மையைத் தெரிந்து கொள்ளவில்லை. உன்னுடைய நிலைமையையும் உன் அன்புக்குரியவனுடைய நிலைமையையும் உணரவில்லை. என்னைப்பற்றி நீ கவலைப்படுகிறாய்; என் கணவரைப் பற்றிக் கவலைப் படுகிறாய். எங்களைப் பற்றி உண்மையில் கவலைப்பட வேண்டியதேயில்லை. என் கணவர் எப்பேர்ப்பட்டவர் என்பது உனக்



அருள்வாக்கு

ஸங்கமாகச் சேர்ந்து தொண்டு செய்கிறவர்களுக்கு அத்தியாவசியமாயிருக்க வேண்டிய யோக்யதாம்சங்கள்: அவர்களுக்குக் கட்டுப்பாடு (நியமம்) ரொம்பவும் தேவை. எடுத்துக் கொண்ட வேலையில் கொஞ்சம் கூடப் பொறுப்புக் குறையக் கூடாது. ஸத்தியமும் அந்தரங்க சுத்தமும் இதே போலத் தேவை. அன்போடு மதுரமாகப் பேசவும், பழகவும் வேண்டும். பணத்தைக் கையாளுவதில் அப்பழுக்கில்லாதவர்கள் என்ற நம்பிக்கையை உண்டு பண்ணக் கூடியவர்களாக இருக்கணும். நியாயமாக ஸந்தேஹப்படுகிறவர்களிடம் பொறுப்பில்லாமலோ, பொறுமையிழந்தோ பதில் சொல்லக் கூடாது. அதே ஸமயத்தில் அநேக ஸந்தேஹப் பிராணிகள் ஏதாவது 'ரூமர்' கிளப்பிக் கொண்டிருக்கிறார்களே என்பதற்காக ''நமக்கென்னத்துக்கு ஊரான் பாடு'' என்று பொதுத் தொண்டை விட்டு விடவும் கூடாது. அதாவது மான அவமானங்களைப் பாராட்டிக் கொண்டிராத மனப்பான்மை வேண்டும். நகரமானால் ஒரு பேட்டையிலிருப்பவர்களெல்லாம்சேர்ந்து செய்யலாம். கிராமமானால் நாலு கிராமத்து ஜனங்கள் ஒன்றுகூடிப் பண்ணலாம்.

''நஹி ஜ்ஞானபதம் து:கம் ஏக: சோசிதும் அர்ஹதி'' என்று ஒரு வசனம் இருக்கிறது. 'ஊர்க் கஷ்டத்தைப் பற்றி ஒருத்தன் விசாரப்பட்டுப் பிரயோஜனமில்லை' என்று இதற்கு அர்த்தம் பண்ணிக் கொண்டு நம் மதத்தில் ஸமூஹ சேவா உணர்ச்சியே இல்லை என்று சொல்கிறார்கள். இது ஸரியில்லை. வாஸ்தவத்தில் இதன் அர்த்தம் இப்படியில்லை. ''ஏக: ஒருத்தன்'' என்ற வார்த்தைதான் இங்கு முக்கியமானது. தனி ஒருத்தனாக இருந்து கொண்டு ஊர்க் கஷ்டத்தைப் பார்த்து விட்டு இவனும் அவர்களோடு சேர்ந்து அழுவதில் ப்ரயோஜனம் இல்லை. பல பேராகச் சேர்ந்து அந்தக் கஷ்டத்தை நிவ்ருத்தி பண்ணக் கார்ய ரூபத்தில் முயற்சி செய்ய வேண்டும் என்பதே இதன் அர்த்தம். ஒன்று வெறுமே விசாரம் மட்டும் படக் கூடாது; கார்யத்தில் இறங்க வேண்டும். இரண்டாவது தனியாகப் பண்ணினால் எடுபடாது. பலர் ஸங்கமாகச் சேர வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

குத் தெரியும். அவர் வாயசைத்தால் இந்த நாடே அசையும். சுந்தர சோழ சக்கரவர்த்தி அவர் இட்ட கோட்டைத் தாண்ட மாட்டார். என் கணவர் வார்த்தைக்கு மாறாக முதன் மந்திரி வார்த்தையையும் கேட்க மாட்டார். அவருடைய சொந்தப் பெண்டு பிள்ளைகளின் பேச்சுக்கும் செவி கொடுக்க மாட்டார். பழுவேட்டரையரை வயதான கிழவர் என்று உன் தமையனைப் போன்ற மூடர்கள் எண்ணிப் பரிகாசமும் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர் ஒரு மூச்சு விட்டால், உன் தமையனையும் பார்த்திபேந்திரனையும் போன்ற நூறு வாலிபர்கள் மல்லாந்து விழுவார்கள். ஆகையால் பழுவேட்டரையருக்கு யாரும் தீங்கு செய்துவிட முடியாது. என் கண்ணே! என்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் எனக்குத் தெரியும். இதைக் காட்டிலும் எத்தனையோ இக்கட்டான நிலைமைகளில் என்னை நான் காப்பாற்றிக் கொண்டிருக்கிறேன். உண்மையாகவே இப்போது நான் கவலைப்படுவதெல்லாம் உன்னைப் பற்றித்தான். 'இந்தப் பெண் நம்மிடம் இவ்வளவு அன்பு வைத்திருக்கிறாளே? இவளுக்கு ஒன்றும் நேராமலிருக்க வேண்டுமே?' என்று கவலைப் படுகிறேன். நீ இந்த அறைக்குள் சற்று முன் வந்தபோதுகூட உன்னைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தேன்...."

"தாங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லை, அக்கா! எனக்கு அப்படி என்ன அபாயம் வந்து விடும்?"

"பேதைப் பெண்ணே! வேண்டாத புருஷனுக்கு வாழ்க்கைப் படுவதைக் காட்டிலும் பெண்களுக்கு நேரக் கூடிய அபாயம் வேறு என்ன இருக்க முடியும்?"

"அது ஒரு நாளும் நடவாத காரியம்."

"உன் தமையன் உன்னை இளவரசருக்கு மணம் செய்விப்பது என்று தீர்மானம் செய்து விட்டான்; உன் தந்தையும் சம்மதித்து விட்டார்."

"அவர்களுடைய தீர்மானமும் சம்மதமும் என்னை என்ன செய்யும்? நான் சம்மதித்தால்தானே?"

"இப்படிக் குழந்தை போல் பேசுகிறாயே? சிற்றரசர் குலத்துப் பெண்களைக் கலியாணம் செய்து கொடுப்பது, அந்தப் பெண்களின் சம்மதத்தைக் கேட்டுக் கொண்டு தான் உலகத்தில் நடைபெறுகிறதா? அதிலும், மூவுலகையும் ஆளும் சக்கரவர்த்தியின் மூத்த குமாரர், — பட்டத்து இளவரசர், — உன்னை மணந்து கொள்ள விரும்பினால், அதற்கு யார் தடை சொல்ல முடியும்?"

"ஏன்? என்னால் முடியும். இளவரசரிடம் நேரே சொல்லி விடுவேன்."

"என்ன சொல்லுவாய்?"

"அவரை மணந்து கொள்ள எனக்கு இஷ்டம் இல்லை என்று சொல்வேன்...."

"காரணம் கேட்டால்?"

"உண்மையான காரணத்தைத்தான் சொல்வேன். என் மனம் அருடைய சிநேகிதர் வல்லவரையரிடம் ஈடுபட்டு விட்டது என்று சொல்வேன்..."

"பேதைப் பெண்ணே! இதை நீ சொல்லவே வேண்டாம். அவர்களுக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கிறது."

"தெரிந்திருந்தால் என்னை ஏன் வற்புறுத்துகிறார்கள்? அப்படி அதிகமாக வற்புறுத்தினால், இதோ நானும் ஒரு கத்தி வைத்திருக்கிறேன், அக்கா!" என்று சொல்லி மணிமேகலை தன் இடுப்பில் செருகியிருந்த சிறிய கத்தி ஒன்றை எடுத்துக் காட்டினாள்.

"என் அருமைத் தங்கையே! உன் அறியாமையைக் கண்டு ஒரு பக்கம் எனக்கு அழுகை வருகிறது; இன்னொரு பக்கம் சிரிப்பும் வருகிறது."

"அப்படி என்ன நான் உளறி விட்டேன், அக்கா!"

"உன்னை யாரோ வற்புறுத்தப் போவதாக எண்ணியிருக்கிறாய். உன்னுடைய சம்மதத்தைக் கேட்பார்கள் என்றும் நினைத்திருக்கிறாய். அவ்விதம் ஒன்றும் அவர்கள் செய்யப் போவதில்லை. நீ இளவரசரை மணந்து கொள்ளத் தடையாயிருக்கும் காரணத்தை நீக்கி விடப் போகிறார்கள்!"

"என்ன சொல்கிறீர்கள், அக்கா!"

"நீ யாரிடம் உன் மனத்தைப் பறி கொடுத்திருக்கிறாயோ, அவருடைய உயிருக்கு அபாயம் நெருங்கியிருக்கிறது என்று சொல்லுகிறேன்...."

"ஐயையோ!"

"உன் தமையன் ஏற்கெனவே அவனுடைய பழைய சிநேகிதன் மீது துவேஷம் கொண்டிருக்கிறான். இந்த அரண்மனையில் சில மாதங்களுக்கு முன்னால் சிற்றரசர்கள் கூடிச் செய்த சதியாலோசனையைப் பற்றி இளவரசனிடம் சொல்லிக் கொடுத்து விட்டான் என்று அவனுக்குக் கோபம். தன் முதுகிலே குத்திக் கொல்ல முயற்சி செய்ததாக வேறு குற்றம் சாட்டிக் கொண்டிருக்கிறான். வேறொரு காரணத்தினால் பார்த்திபேந்திரனுக்கும் உன் காதலன் பேரில் அளவில்லாத கோபம்...."

"இவர்களுடைய கோபம் அவரை என்ன செய்து விடும், அக்கா! அவர் சுத்த வீரர் அல்லவா!"

"சுத்த வீரராயிருந்தால் என்ன? இருவர் சூழ்ந்து கொள்ளும் பல கொலைகாரர்களுக்கு மத்தியில் கையில் ஆயுதம்


"மல்லிகை நறுமணத்தில் குளித்தெழுங்கள்"
கூறுபவர் ராமாயணம் புகழ் தீபிகா
இந்தியாவின் மிக நவீன மயமாக்கப்பட்ட தொழிற்சாலையிலிருந்து, இத்தாலியின் தொழில் நுட்பத்துடன், மல்லிகை நகரத்திலிருந்து இந்த சோப் தயார் செய்யப்படுகிறது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தும் தரமான சோப்புகளை தயாரிப்பதில் சரித்திரம் படைத்தவர்கள் இதையே பின் தொடர்கிறார்கள்.
மல்லிகையின் நறுமணத்தில் குளித்தெழுங்கள்.
மைசூர் ஜாஸ்மின்
கர்நாடக சோப்ஸ் அண்டு டிடர்ஜெண்ட்ஸ் லிமிடெட் பெங்களூர்-560 055.
MYS
JASMIN
SO
PINK
JASMINE
MAX. PR
Rs. 3.
LT. EXT
Net Weight: 100



பால் நலம்.
சுவை வளம்.
NUTRINE
மில்க் பிஸ்கெட்ஸ்
இப்போது
புதிய, கண்கவர் பேக்கிலே!
nutrine
Milk Biscuits

ஒன்றும் இல்லாத ஒரு சுத்த வீரன் என்ன செய்ய முடியும்?...."

"ஐயோ! அவரைக் கொன்று விடுவார்கள் என்றா சொல்லுகிறீர்கள்?"

"கொல்லமாட்டார்கள்; கண்டதுண்டமாக வெட்டி நரிகளுக்கும் நாய்களுக்கும் போட்டு விடுவார்கள்...."

"ஐயோ! என்ன கர்ண கடூரம்?"

"கேட்பதற்கே உனக்குக் கர்ண கடூரமாயிருக்கிறதே?, உண்மையில் நடந்து விட்டால், என்ன பாடு படுவாய்?"

"அக்கா! இப்போதே என் உயிரும் உள்ளமும் துடிக்கின்றன: நிஜமாக, அப்படியும் செய்து விடுவார்களா? அவர் இளவரசருடைய அத்தியந்த சிநேகிதர் ஆயிற்றே?"

"அத்தியந்த சிநேகிதர்கள் கொடிய பகைவர்களாக மாறுவதைப் பற்றி நீ கேட்டதில்லையா, தங்காய்! உன் தமையனும் பார்த்திபேந்திரனும் அப்படியெல்லாம் இளவரசரிடம் தூபம் போட்டு விட்டிருக்கிறார்கள்....."

"சண்டாளர்கள்! இதெல்லாம் நங்களுக்கு....."

"எனக்கு எப்படித் தெரிந்தது என்றுதானே கேட்கிறாய்? இன்று பகலில், பார்த்திபேந்திரன் என்னிடம் விடை பெற்றுச் செல்லும் வியாஜத்தை வைத்துக் கொண்டு வந்திருந்தான்....."

"அந்தப் பாதகன் எங்கே போகிறான்?"

"அதிக தூரம் போகவில்லை. திருக்கோவலூர்க் கிழவன் மலையமான் ஒரு பெரிய சைன்யத்தைத் திரட்டிக் கொண்டு இந்த ஊரை நோக்கி வந்து கொண்டிருக்கிறான் என்று நீ கேள்விப்பட்டாய் அல்லவா?"

"கேள்விப் பட்டேன். அது என்னத்திற்காக என்று ஆச்சரியப்பட்டேன்."

"அதுவும் உன் நிமித்தமாகத்தானாம்! இன்று மத்தியானம் இளவரசர் அதைப் பற்றிப் பிரஸ்தாபித்தாராம். 'மணிமேகலையை எனக்கு மணம் செய்து கொடுக்காவிட்டால், மலையமான் சைன்யம் வந்தவுடன் இந்தக் கோட்டை — அரண்மனை எல்லாவற்றையும் தகர்த்துத் தரைமட்டமாக்கி விடப் போகிறேன்!' என்றாராம். அப்போதுதான் உன் தமையன் 'அதற்குத் தடையாயிருப்பது நாங்கள் அல்ல; உங்கள் சிநேகிதன் வந்தியத் தேவன்தான்' என்றானாம். 'அந்தத் தடையை நீக்க உங்களால் முடியாதா?' என்று இளவரசர் கேட்டாராம். 'கட்டளை அளித்தால் முடியும்' என்றானாம் உன் அண்ணன். என் அருமைச் சகோதரி! பார்த்திபேந்திரனிடம் மேலும் பேச்சுக் கொடுத்துச் சில விவரங்களை அறிந்தேன். உன் ஆருயிர்க் காதலனுடைய உயிருக்கு



"உங்க பிள்ளையாண்டான் கல்யாணமே வேண்டாம்கிறான்னு சொன்னீங்களே — அவன் வரதட்சணைதானே வேண்டாம்னு சொல்றானாம்...?"

"என்னைப் பொறுத்தவரை ரெண்டுக்கும் அர்த்தம் ஒண்ணுதான்...!"

— பெ. கலாசாமி.

ஆபத்து நெருங்கியிருப்பது நிச்சயம். நீ உடனே முயற்சி எடுக்கா விட்டால், கலியாணம் ஆவதற்கு முன்பே கணவனை இழந்து விடுவாய்!" என்றாள் நந்தினி.

இதைக் கேட்ட மணிமேகலையின் உடலும் உள்ளமும் துடிதுடித்ததில் வியப்பு ஒன்றும் இல்லை அல்லவா?

"ஐயோ! அவருக்கு எப்படியாவது உடனே எச்சரிக்கை செய்ய வேண்டுமே!" என்று தட்டுத் தடுமாறிக் கொண்டே கூறினாள்.

"எச்சரிக்கை செய்யலாம். ஆனால், உன் காதலன் சுத்தவீரன் என்று நீ தானே சற்று முன் கூறினாய்? அவனுடைய உயிருக்கு அபாயம் என்று கேட்டுப் பயந்து ஓடி விடுவானா? மாட்டான்! இன்னும் அவனுடைய பிடிவாதம் அதிகமாகும்" என்றாள் நந்தினி.

"தாங்கள் தான் யோசனை சொல்ல வேண்டும். என் தலை சுற்றுகிறது. என்ன செய்கிறது என்று தெரியவில்லை" என்றாள் மணிமேகலை.

"நீ இங்கே வரும்போது அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். எனக்கும் ஒன்றும் புரியவில்லை. நல்ல வேளையாக நீ ஒரு செய்தி கொண்டு வந்தாய். அதிலிருந்து, வல்லவரையரைக் காப்பாற்ற ஒரு யோசனை தோன்றியது."

"நான் கொண்டு வந்த செய்தியிலிருந்தா? அது என்ன செய்தி?"

"பழுவேட்டரையருடைய படகு கவிழ்ந்ததென்றும் பிறகு அவரைப் பற்றித் தகவல் தெரியவில்லை என்றும் சொன்னாய் அல்லவா?"

"ஆமாம்!"

"வந்தியத் தேவரிடம் நான் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். எனக்காக அவர் போய் என் கணவரைப் பற்றிய உண்மை தெரிந்து வரவேண்டும் என்று வேண்டிக்



காதல்

- இது
  என் மானுடத்தின்
  சாபல்யம்!

- எனக்குத் தெரியாமல்
  என்னுள் நிகழ்ந்த
  பிரளயம்!

- வனத்துள் நுழைந்த
  வாலைக் குமரிமேல்
  சோலைக் குயிலொன்று
  சொக்கி விழுந்தகதை!

- மௌனத்தில் ஆழ்ந்திருந்த
  என் யௌவனம்
  சங்கீதம் பாடிய சரித்திரம்!

- எனது
  உறவு விருக்ஷம்
  புஷ்பித்த பிறகு

  நான்
  கொய்யப் போகிற
  பாரிஜாதம்!

— நச்சினார்க்கினியன்.

கொள்கிறேன். நீயும் எனக்காகப் பரிந்து பேசு. இரண்டு பேதைப் பெண்களின் வேண்டுகோளை அந்த வீரர் புறக்கணிக்க மாட்டார். அவரை உடனே இந்த இடத்தி லிருந்து வெளியே அனுப்புவதுதான் அவர் உயிரைக் காப்பாற்றும் வழி. வேறு உபாயம் ஒன்றுமில்லை. அவர் போன பிறகு நீ உன் தமையனாரிடமும் தந்தையிடமும் இளவர சரிடமும் தைரியமாக உன் மனத்தை வெளியிட்டுப் பேசலாம். நானும் உனக் காகப் பேசுகிறேன். 'இஷ்டமில்லாத பெண்ணை வற்புறுத்துவது சோழ குலத்தில் பிறந்தவர்களுக்கு அழகு அல்ல' என்று சொல்லுகிறேன்.''

''தங்கள் பேச்சையும் அவர்கள் கேட்கா விட்டால், என் கையில் கத்தி இருக்கிறது!''

''சரி, சரி! இப்போது முதலில் உன் காத லரை வெளியேற்றிக் காப்பாற்ற முயல் வோம். அவர் இருக்குமிடம் உனக்குத் தெரி யும் அல்லவா? நீ நேரில் அவரைப் பார்க்க முடியாவிட்டால், உன் தோழி சந்திரமதியை அனுப்பு. இல்லாவிடில், இடும்பன் காரியை அனுப்பு. எப்படியாவது அவரை இங்கே அழைத்துக் கொண்டு வா!''

''அவர் போகச் சம்மதித்தாலும் இங்கே யிருந்து எப்படி வெளியில் போவார், அக்கா! என் அண்ணன் தடுத்து நிறுத்தி விட்டால்.....?''

''உன் அண்ணனுக்கு ஏன் தெரிய வேண் டும், மணிமேகலை! முதன் முதலில் அவர் இந்த அறைக்குள் வந்து உன்னைத் திடுக் கிடச் செய்தாரே? அந்தச் சுரங்க வழியி லேயே அனுப்பி விட்டால் போகிறது! சீக் கிரம் போ, தங்காய்! வந்தியத் தேவர் இனி இந்தக் கோட்டையில் இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் அவருடைய உயிருக்கு அபாயம் அதிகமாகும். உன் தமையன் ஏவும் கொலை காரர்கள் எப்போது அவரைத் தாக்கு வார்கள் என்று நமக்கு என்ன தெரியும்?''

''இதோ போகிறேன், அக்கா! எப்படி யாவது அவரை அழைத்துக்கொண்டு தான் திரும்பி வருவேன்'' என்று சொல்லி விட்டு மணிமேகலை சென்றாள்.

அவளுடைய காலடிச் சத்தம் மறைந்த தும், பக்கத்திலிருந்த வேட்டை மண்டபத் தின் இரகசியக் கதவை யாரோ தட்டுவது போன்ற சத்தம் கேட்டது.

நந்தினி இரகசியக் கதவின் அருகில் சென்று, அதன் உட்கதவைத் திறந்தாள். இருட்டில் ஒரு கோரமான முகம் இலேசாகத் தெரிந்தது.

''மந்திரவாதி! வந்து விட்டாயா?'' என் றாள் நந்தினி.

''வந்து விட்டேன், ராணி! வேளையும் வந்து விட்டது!'' என்றான் ரவிதாஸன்.

(தொடரும்)

ஆரோ:ஃபுட் அளிக்கிறது-
சுத்தமான,தரமான கோதுமை மாவு.
வசதியான பேக்கிலே!



கோதுமையைத் தேடி வாங்கி, சுத்தம் செய்து அரைக்கும் தொல்லை இனி இல்லை. இப்போது வந்து விட்டது ஆரோஃபுட் கோதுமை மாவு. உயர்ந்த தரமானது; மிகவும் சுத்தமானது — ஆரோஃபுட் நிறுவனத்தின் மற்ற தயாரிப்புகளான ட்ரு பிஸ்கட், சேமியா போன்றே!

உங்கள் குடும்பத்தினருக்கு ஆரோஃபுட் கோதுமை மாவால் பூரி, சப்பாத்தி செய்து கொடுங்கள். அதன் அருமையான ருசி அவர்களைக் கவர்ந்துவிடும்.

- தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாப் கோதுமையில் தயாரிக்கப்படுவது.
- மெஷின்களால் சுத்தம் செய்யப்பட்டு அரைக்கப்படுவது.
- விட்டமின்களும் சத்துகளும் பாதுகாப்பாக உள்ள வகையில் பேக் செய்யப்படுவது.

ஆரோ:ஃபுட் கோதுமை மாவு

தரத்தையும் வசதியையும் நாடும் இல்லத்தரசிகளுக்காக!

ஒரு ட்ரு தயாரிப்பு. சிறந்த பொருட்களைக் கொண்டு, அன்புடனும் அக்கறையுடனும் தயாரிக்கப்படுவது.

HTA 7222 TM

இந்த வெளிச்சங்கள் யாருக்காக?

அழைப்பு மணி ஒலித்ததும் இவள் எழுந்து கதவைத் திறந்தாள்.

கதவருகில் ஒரு பெண் நின்றிருந்தாள். இவளைப் பார்த்ததும் தோழமையுடன் சிரித்தாள்.

"இந்த 'நுரைகள்' சோப்புத்தூள் விற்பனைக்காக வரேன்... இரண்டு பாக்கெட் வாங்கினால் ஒரு பிளாஸ்டிக் 'மக்' இனாம்..."

பையிலிருந்து ஒரு சோப்புத்தூள் பாக்கெட்டை எடுத்துக் காட்டினாள். "இது புதிதாக மார்க்கெட்டுக்கு வந்திருக்கு. விலை ரொம்பக் குறைச்சல். உங்கள் துணிகளைத் தோய்ச்சுக் காட்டறேன்... பார்த்துட்டு..."

உள்ளே நுழைந்து விட்டாள். சுற்றிலும் நோட்டம் விட்டாள். பாத்ரூமைக் கண்டு பிடித்து, பக்கெட்டில் சோப்புத் தூளைப் போட்டு நுரைக்கவிட்டு...

'இந்தப் பெண்ணிற்கு என்ன வயது இருக்கும்? முப்பது இருக்கலாம். நல்ல கறு கறுப்பு. கைத்தறிப் புடைவையையும் பிளாஸ்டிக் வளையலையும் பார்த்தால்... கஷ்ட ஜீவனமாக... பாவம்...'

"உன் பெயர் என்ன?"

"ஷோபா."

"இதில் என்ன வருமானம் கிடைக்கும்?"

"ஒரு பாக்கெட் விற்றால் அம்பது காசு..."

"கல்யாணம் ஆயிடுத்தா?"

கேள்விக்குப் பதில் இல்லை. பேசாமலிருந்தாள். 'இல்லை' என்கிற மாதிரி தலையை ஆட்டினாள்.

அதற்கு மேல் இவள் கவனிக்கவில்லை. பேசவில்லை. யோசனையிலிருந்தாள். மாதர் சங்கம் மீட்டிங் பற்றிய யோசனை... வருடாந்திர மீட்டிங்!

பிரசிடெண்ட் பதவிக்குப் போட்டி இருக்கும். இருக்கிறது! இந்த முறை தவிர்க்க முடியாது. ராஜி ரங்கநாதன் விடமாட்டாள். தீர்மானமாக இருக்கிறாள். இவளை அசைத்துக் காட்டுகிறேன் என்று சவால் விட்டிருக்கிறாள். வழக்கம்போல், நவராத்திரிக்கு ரவிக்கைத் துண்டு கொடுத்தோம், கோலப் போட்டி வைத்தோம். மகளிர் தினம் கொண்டாடினோம் என்றால் வோட்டுக் கிடைக்காது. மெம்பர்களுக்குப் பிடித்த மாதிரி, உற்சாகம் அடைகிற மாதிரி, ஏதாவது செய்தாக வேண்டும்... புதிதாக... புதுமையாக... என்ன செய்யலாம்? என்ன செய்யலாம்...?

சட்டென்று அந்தப் பெண்ணின் மேல் பார்வை படிந்தது. என்ன சொன்னாள்? கல்யாணம் ஆகவில்லை; ஆகவில்லை...

இந்த ஏழைப் பெண்ணுக்கு ஒரு கல்யாணம் பண்ணி வைத்தால் என்ன...?

'பெயருக்குப் பெயர்...! இன்னும் இரண்டு வருடங்களுக்கு ராஜி ரங்கநாதனைத் தலையெடுக்க விடாமல் அடித்துவிடலாம்...!'

"உன் அப்பா என்ன செய்கிறார்?"

"இல்லே... அம்மா மட்டும்தான்."

"வீடு எங்கே சொன்னே... மயிலாப்பூரா?"

"திருவல்லிக்கேணி."

அட்ரஸைக் குறித்துக் கொண்டாள்.

அந்த யோசனையைக் கைதட்டல்களுடன் அவர்கள் வரவேற்றார்கள். "ஆஹா... கல்யாணம்! இந்த மாதிரி ஐடியா நமது பிரசிடெண்டுக்குத்தான் வரும்!"

இவள் எழுந்தாள்.

"நம்மைப் போல் ஒருத்தி. ஒரு பெண். முப்பது வயது முடிந்த பெண். ஏழைப் பெண். தன் வாழ்வில் இனி வசந்தமே வராதா...? கெட்டிமேளச் சப்தம் கேட்காதா என்று இரவுகளில் கண்ணீர் விடுகிற அபலை. அவளுக்கு ஒரு வாழ்வு தர வேண்டாமா? தருவது உங்கள் கைகளில் இருக்கிறது. உங்கள் காருக்கு நீங்கள் ஒரு நாளைக்குச் செலவழிக்கிற பெட்ரோல். ஒரு புடைவையில் போடுகிற பணம். கொடுங்கள்... உதவுங்கள்! இந்தக் கல்யாணம் நடந்துவிடும். உங்களிடம் கெஞ்சிக் கேட்டுக் கொள்..."

இவள் குரல் கம்மியது. ஒரு கணம் மௌனமாக இருந்தாள். கண்களைத் துடைத்துக் கொண்டாள். எல்லோரும் பார்க்கிறார்களா என்று கவனித்தாள். நிதானமாக

ஜி. நாராயணன்

'செக்' புத்தகத்தை எடுத்தாள். ஆயிரத்து ஒரு ரூபாய்க்குச் செக் எழுதி மேஜையில் வைத்தாள்.

ராஜி ரங்கநாதன் அத்தனையும் நடிப்பு என்று பல்லைக் கடித்தாள். இருந்தும், 'இவளை விட நான் ஒன்றும் மட்டமில்லை' என்கிற மாதிரி அதே தொகைக்கு எழுத, மளமளவென்று 'செக்'குகளாகக் குவிந்தன.

திருவல்லிக்கேணி சந்தில் அத்தனை குப்பை கூளங்களையும் தாண்டி, அந்த வீட்டைக் கண்டுபிடித்தார்கள்.

இத்தனை பட்டும், பனாரஸும், நகைகளையும், பார்த்து அந்த அம்மாள் ஆடிப் போனாள். வழிதவறி இங்கே வந்து விட்டார்களோ என்று சந்தேகப்பட்டாள்.

இவர்கள் நேராகவே விஷயத்துக்கு வந்து விட்டார்கள்.

"நாங்கள் எங்கள் மாதர் சங்கத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். அதன்படி ஏழைப் பெண் ஒருத்திக்கு ஆகிற கல்யாணச் செலவுகளைச் சங்கம் ஏற்றுக் கொள்ளும். உங்கள் மகள் ஷோபாவைக் கொஞ்ச நாள் முன்...."

"பிள்ளை பார்க்க வேண்டாமா? அவனுக்குப் பெண்ணைப் பிடிக்க வேண்டாமா? கல்யாணம்னா இன்னும் என்னென்னவோ..."

"இவர் ஆபிஸ் காண்டீன்லே ஒரு பையன் இருக்கான்... முப்பத்தைஞ்சு வயசாகிறது... சொன்னால் தட்ட மாட்டான்..."

"வந்து..."

"இன்னும் என்ன? வந்து போயி... நீங்க கல்யாணத்துக்கு வந்து சேருங்கோ..."


இத்தனை ஆர்ப்பாட்டங்களுக்கு முன் அந்த அம்மாள் அடங்கிப் போனாள்.

"மாதர் சங்கம் முதன் முதலாக நடத்தப் போகிற கல்யாணம் இது. ரொம்ப கிராண்டாச் செய்யணும். தடபுடலா... அமர்க்களப்படுத்திடணும்! மொதல்லே வசதியா பெரிய சத்திரம். ராஜேஸ்வரி... ஹேமமாலினி...?"

"புடைவை செலக்ஷனை என்கிட்டே விடு. காஞ்சிபுரத்தில் எனக்குத் தெரிஞ்ச சொஸைட்டி இருக்கு. நேரே போய் நல்ல அகலமான சரிகை போட்ட புடைவை எடுத்துடலாம்."

"மாப்பிள்ளைக்கு 'விமல்'லே ஒரு 'சபாரி' வாங்கணும்..."





"ஆனைதாண்டபுரம் வெங்கிட்டுதான் சமைக்கணும்...."

"மொத்தக் கல்யாணத்தையும் அப்படியே வீடியோவில் எடுத்துடணும்..."

எங்கும் பணம்... பணம்... பணம்... தண்ணீருக்குப் பதில் செலவழித்தார்கள்.

பெண்ணுக்குச் சொந்தக்காரர்கள் என்று எண்ணிப் பத்தே பேர் கல்யாணத்திற்கு வந்தார்கள்.

மாப்பிள்ளை பக்கத்திலும் கூட்டம் இல்லை. மூன்று ஆட்டோ ரிக்ஷாவில் எல்லாரும் வந்து விட்டார்கள்.

இவர்கள் கார்கள்தான் தெருவை அடைத்துக் கொண்டன. உள்ளே மண்டபத்திலும் இவர்கள்தான் நிரம்பியிருந்தார்கள்.

பெண்ணின் அம்மா, இவர்கள் காலில் விழாத குறைதான். 'என் பெண்ணிற்கு இத்தனை அதிர்ஷ்டமா... இத்தனை அதிர்ஷ்டமா...' என்று வாய்க்கு வாய் சொல்லி மாய்ந்து போனாள்.

இரண்டு நாள் கூத்து முடிந்தது. போட்டோ வீடியோவெல்லாம் ஓய்ந்தது.

பத்திரிகைகளில் இந்தக் கல்யாணத்தைப் பற்றி விவரமாக வந்திருந்தது. மாதர் இதழ்கள் 'இந்தச் சங்கம் ஒரு வழிகாட்டி' என்று குறிப்பிட்டு போட்டோக்களைப் பிரசுரித்திருந்தன.

எல்லாம் முடிந்து 'அப்பாடா' என்று இவள் உட்கார்ந்தாள். நாட்கள் நகர்ந்தன.

அழைப்பு மணி ஒலித்ததும் இவள் எழுந்து கதவைத் திறந்தாள்.

கதவருகில் அந்தப் பெண் நின்றிருந்தாள். பக்கத்தில் ஒரு பையில் சோப்புத்தூள் பாக்கெட்டுகள்!

"ஷோபா...! நீயா? இன்னும் இதை விடல்லே? உன்னைத்தான் கேட்கிறேன். கல்யாணம் ஆயிடுத்து. இன்னும் எதற்கு இப்படி அலையணும்?"

"அவருக்கு உடம்பு சரியில்லே. லீவில் இருக்கிறார். சம்பளம் இல்லாத லீவு. சமாளிக்க முடியல்லே. போதாததுக்கு இப்ப இது வேற..." அடிவயிற்றைத் தொட்டுக் காட்டினாள்.

"முந்தி இரண்டு வயிற்றைப் பற்றித்தான் கவலை. இப்ப நாலு வயிறாயிடுத்து. இன்னும் கூடுதல் பொறுப்பு, கஷ்டம்."

"உன் ஹஸ்பெண்ட் வேற எதுவும் செய்யக் கூடாதா?"

"சின்னதா ஒரு கடை வைக்கலாம்னு தோணித்து. ஆனால்...? எல்லாத்துக்கும் பணம் வேணும். முதல் போடணும். ஒரு நாலாயிரம் இருந்தால் கூட..."

'எத்தனை பணம்..! புடைவையிலும், வீடியோவிலும், சத்திரத்திலும் கொண்டு போய்க் கொட்டினீர்களே...! சாப்பாட்டுக்கே திண்டாடுகிற ஒரு ஏழைப் பெண் கல்யாணத்திற்கு இத்தனை ஆர்ப்பாட்டம் தேவையா? சிம்பிளாகக் கல்யாணத்தை முடித்து, பாக்கிப் பணத்தில் ஒரு தொழில் ஆரம்பிக்க உதவியிருந்தால்... இப்படித் தெருத் தெருவாக திண்டாடமாட்டேனே... இன்னும் எத்தனையோ சொல்ல நினைத்தாள். ஆனால் எல்லாம் நெஞ்சுக்குள்ளேயே நின்று விட்டது.

"இரண்டாயிரம், மூவாயிரம்னு செலவழிச்சுப் பட்டுப் புடைவை வாங்கிக் கொடுத்திருக்கிறோம். இன்னும் அந்தப் பழம் புடைவையை விடாமல் கட்டிண்டு..."

"அதைக் கட்டிண்டு சோப்பு விற்க முடியுமா?"

'இந்தப் பெண்ணிற்கு ஏன் இத்தனை கோபம் வருகிறது? எத்தனை செய்தாலும் ஏன் இவர்கள் திருப்தியில்லாமல் இருக்கிறார்கள்...?' என்று இவள் மனத்திற்குள்ளாகவே மறுகினாள்!


"லஞ்ச விஷயத்துல நாடு ரொம்ப முன்னேறிடுச்சு!"

"எப்படிச் சொல்றே?"

"முந்நூறு ரூபாய் லஞ்சம் அனுப்பியுள்ளேன்னு நேற்று ஒருத்தன் எனக்கு மணி ஆர்டர் பண்ணி இருக்கான்னா, பார்த்துக்கோங்களேன்!"

— குத்தாலம் ராஜா.





"நேற்று ராத்திரி எங்க வீட்டுக்குத் திருடன் வந்து விட்டான்!"

"ஐயையோ! அப்புறம்?"

"நான்தான் இரவு தாமதமாக வர்றதா நினைச்சு, என் பெண்டாட்டி திட்டின திட்டிலே அவன் திரும்பிப் பார்க்காமல் ஓடிவிட்டான்!"

— எம். ரவிச்சந்திரன்.



இப்போது!
இரட்டைப் புத்துணர்ச்சி
ஸின்த்தால் + லைம்
புதிய ஸின்த்தால் லைம் சோப்பிலே டிசிசி உள்ளது. இது உடல் துர்நாற்றத்திற்குக் காரணமான பாக்டீரியாக்களை ஒழிக்கிறது. மற்றும் எலுமிச்சை கூடுதல் புத்துணர்ச்சியை வழங்குகிறது.
ஸின்த்தால்
உங்களுக்கு உடல் தன்னம்பிக்கை தரும் சோப்.
Godrej
CINTHOL
THE LIME - FRESH DEODORANT SOAP
LIME
CINTHOL
MADISON-C-59-TM

"அத்தைமடி மெத்தையடி"

கொடைக்கானலிலே கண்டெடுத்த குழந்தையை இளவரசி (ராதா) மடியிலே போட்டு வளர்க்கிறார். அவர் மடி மெத்தையாய் இருக்கக்கூடும். அதனாலேயே அவர் அத்தையாகி விடுவாரா?

தலைப்பிலே அந்தக் கொடேஷனை ரொம்ப அர்த்தத்தோடுதான் போட்டிருக்கிறார்கள். தலைப்புக்கும் கதைக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை.

வாயில்லா ஜீவன்களிடத்து வரம்பு மீறிய கருணை காட்டி வளர்க்கும் அந்தக் குமரி, வாயுள்ள ஜீவனான அந்தக் குழந்தையைத் தானே வளர்க்க ஆசைப்படுகிறார். அந்தக் குழந்தை, கல்யாணமாகாமலே அவருக்குப் பிறந்ததுதான் என்ற பழி வந்து சேர்கிறது. அந்தக் குழந்தையைப் பெற்றவர் யார்? சிக்கல். அது தீர்வது ஒரு கதை. இத்துடன் இன்னொரு குடும்பக் கதையைக் கன்னா பின்னாவென்று இணைத்து, கதை எங்கே ஆரம்பித்து, எந்தத் திசையில் எங்கே போய் எப்படி முடியப் போகிறது என்று குழம்பி... சரி, கதையை விடுங்கள்.

கதாநாயகப் புதுமுகம் கே. எஸ். ஜி. வெங்கடேஷ் எப்படி? ஒரு பாடல் வழியே, 'நான் சிவாஜி போல, ரஜினி போல, கமல் போல் எல்லாம் நடிப்பேனாக்கும்!' என்று சொல்லி சாம்பிளும் காட்டுகிறார். அவரது தன்னம்பிக்கை வாழ்க! காதல் கொஞ்சல்களில் துள்ளலும் அப்பாவித்தனமான கெட்டிக்காரக் கட்டங்களில் சுறுசுறுப்பான வேகமும் கிட்டி வருகிறது.

இளவரசியின் முதல் இரண்டு எழுத்தை எடுத்து விடலாம் போல நடிப்பிலே முதிர்ச்சி தெரிகிறது. நாய் பூனைக் குட்டிகளை வாரியணைத்துக் கொண்டு அவர் பாசம் கொட்டும் போதும், முறை மாமனைப் பிரிய நேரும் போது முகத்தில் காட்டும் வேதனையிலும், அவரே தன் மேல் அபாண்டமாய்ப் பழி சுமத்தும் போது பொங்கும் ஆத்திரம் கலந்த துக்கத்திலும் அனுபவ முத்திரை பளிச்சிடுகிறது.

பல்லவி — அந்தச் சவுக்கடி சந்திரகாந்தா எங்கிருந்து எப்படி ஏன் வந்தார், எந்த வல்லமையில் குதிரைச் சவாரி செய்து வந்து குண்டர்களை ஓட ஓட விரட்டிச் சவுக்கால் விளாசினார் — இதெல்லாம் மின்னல் கொடி காலப் பழசாய்த் தெரிகிறது. பாதிப் படத்துக்கு மேல் அவர் அம்பேல்.

'ஒரு தொண்டிப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட தியாகியாக்கும் நான்,' என்று எஸ். எஸ். சந்திரனைச் சொல்ல வைத்து, இதையும் ஒரு காமிக் ரகத்தில் சேர்த்திருக்கும் பெரியவர் கே. எஸ். ஜி.யை நினைத்து ஆத்திரப்படுவதா, வருத்தப்படுவதா, இல்லை, பரிதாபப்படுவதா?

ஆரம்ப காலத்திலிருந்து குறை சொல்லும் அந்த மைல் நீள உரையாடலில் மாற்றமில்லை என்றாலும், மற்ற சாதனைகளை நினைவு கூரும் போது —

கே.எஸ்.ஜி. சார், மன்னிக்கணும். தியாகப் பிரும்மம் தெம்மாங்கு பாட வந்தாற் போல் இருக்கிறது.

— பி. எஸ். எஸ்.





கல்கி தீபாவளி மலர்'89

விமரிசையான
வண்ண மடல்களின் வரிசை

- **விக்னம் தீர்க்கும் விநாயகர்:**
காஞ்சி முனிவரின் அருள்வாக்குகளுக்கு ஓவியங்கள்: விஜு.

- **ஆப்பிரிக்கக் கானகத்தின் அதிசயங்கள்!**
கட்டுரை, வண்ணப்படங்கள்: கோபுலு.

- **ஸ்ரீசைலம்:**
திருத்தலத்தின் அற்புதமான காட்சிகள்; மல்லிகார்ஜுனர் பிரமராம்பா ஓவியங்கள்: தனுசு.

- **இலக்கியத்தில் கடல்:**
கட்டுரை: மீ. ப. சோமு; சித்திரங்கள்: ம. செ.; மாருதி.

- **கலை வளர்க்கும் கரங்கள்:**
தந்தம், மரம், கல், சந்தன மரம் ஆகியவற்றில் அரிய அழகிய சிற்பங்களும் அவற்றை உருவாக்கும் சிற்பிகளும். கட்டுரை: சுப்ரபாலன்; படங்கள்: யோகா.

- **இந்திய நடனக் கலைகள்:**
கட்டுரை: டி. எஸ். பார்த்தசாரதி. பல்வேறு வகை இந்திய நடனங்களின் கண்கவர் தோற்றங்கள்.

- **உலா வரும் இறைவன்**
பக்தர்கள் இறைவனைத் தேடிச் செல்வது மட்டுமா? இறைவனும்தான் நம்மை நாடி வருகிறார்! பரவசத்தில் ஆழ்த்தும் வண்ணப்படங்கள்: தம்பையா.

- **விண்வெளியில் வாயேஜர்:**
பிரமிக்க வைக்கும் வண்ண ஓவியம்; விஞ்ஞானத் தகவல்கள்.

- **நச்சுப் பொய்கை:**
ராஜாஜியின் மகாபாரதக் கதைக்கு வண்ண ஓவியம்: வேதா.

- **கவிதை மடல்:**
வைரமுத்து; இளங்கம்பன்; நா. சி. வரதராஜன். நிர்மலா சுரேஷ் — கண்ணைப் பறிக்கும் வண்ண ஓவியங்களுடன்.

- **கங்கா ஸ்நானம் ஆச்சா?**
எள்ளுச் செடி, பூவில் தொடங்கி தீபாவளியன்று எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட்டு விளக்கேற்று வது வரை 'கேமிரா கட்டுரை': ஸ்ரீஹரி.

- **செங்கமலச் செந்திரு:**
திருமகளின் பல்வேறு தோற்றங்களை வண்ண மடலாக்கித் தருபவர் ஓவியர் எஸ். ராஜம்.

- **குரு பரம்பரை:**
காஞ்சி முனிவர், பீடாதிபதி, இளவல் தவிர, ஸ்ரீரங்கம் ஸ்ரீ ஆண்டவன் சுவாமிகளின் திருவுருவங்கள்.

- **மற்றும்:**
கோகுலம் பக்கங்கள்; மங்கையர் மலர்; ஏராளமான சிறுகதைகள், கட்டுரைகள், புகைப்படங்கள், நகைச்சுவை அம்சங்கள், குறுநாவல்.

உங்கள் பிரதிக்கு உடனே உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்து செய்து கொள்ளுங்கள். அல்லது கல்கி காரியாலயத்துக்கு எழுதுங்கள்.

விலை ரூ. 30/-

பதிவுத் தபாலில் பெற ரூ. 7/- சேர்த்து அனுப்ப வேண்டும்.

மானேஜர், கல்கி, சென்னை — 600 032.

வட்டமேஜை

“பூச்சுற்ற வேண்டாம்!”

* ‘ஜெட் வேகத்தில் தமிழ் வளர, ஆங்கிலச் சொற்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்’ என்கிற டி.கே.சி. ராஜாஜி, பாரதியார் ஆகியோரின் கருத்தைத் தலையங்கம் மூலம் தெளிவாக, நடுநிலையோடு விளக்கி விட்டீர்கள்.

கடலூர், புனிதவல்லி இளங்கோ.

* ஷேக்ஸ்பியர் என்பதை செகப்பிரியர் என்றும், ஜேக்கப் என்பதை யாக்கோபு என்றும் அனாவசியமாக மொழிபெயர்ப்பவர்கள் இருக்கும் வரை, தமிழ் மொழி வளர்ச்சி தடைப்படத்தான் செய்யும். தலையங்கத்தில் கூறியுள்ளபடி, தமிழின் தூய்மை காக்கிறோம் என்று கூறித் தமிழர்களாகிய நாம்தான் தமிழை வளரவிடுவதில்லை

திருச்சி — 2. என். சம்பத்.

* கல்கிக்கு அளித்த பேட்டியின் மூலம், சிலர் பரப்பி வரும் அவதூறுக் குற்றச்சாட்டுக்கள், பொய் பிரசாரம் போன்றவற்றைத் தூள் தூளாக்கி விட்டார், மு. க. ஸ்டாலின். பொறுமையாகவும், சாதுர்யமாகவும், குழப்பாமலும் அவர் அளித்த பதில்கள் திருப்தியாக இருந்தன.

வேலூர் — 13. கே. ஆர். தேவேந்திரன்.

* கலைஞரைப் போலவே ஸ்டாலினும் பேட்டியளிப்பதில் படு சமர்த்தராகியிருக்கிறார். கேட்ட கேள்விகளுக்குச் சற்றும் விளக்கெண்ணெய்த் தனமில்லாமல், பதில்கள் நேராகவும், அளவுடனும் இருந்தன.

குடியாத்தம், கே. வி. எஸ். மணியன்.

* கலைஞருக்கு மகன் என்பதால் கட்சிப் பணி தப்பா என்கிற ஸ்டாலின், சரித்திரம் அறியாதவரல்லர். ‘காந்தி தேசாய்’ காரணமாய் மொரார்ஜி பட்ட பாடு — சஞ்சய் காந்தியினால் இந்திரா காந்தி பட்ட எதிர்ப்பு — இதெல்லாம் அண்மைக் காலச் சரித்திரம். அதனால் கலைஞர் தலைமை இருக்கும் வரை ஸ்டாலின் கொஞ்சம் ஒதுங்கி இருப்பதே கலைஞர் கரம் வலுப்பெற உதவும்.

கம்பரசம்பேட்டை, என். பாலு

* மு. க. ஸ்டாலின் பேட்டியில் அடுத்தடுத்து வரிசையாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கும் படங்கள் அவரே நேரில் பேசுவது போல ஒரு பிரமையை ஏற்படுத்தி விட்டன.

முடிகண்டநல்லூர், க. ராஜேந்திரன்.

* ஒட்டப்பந்தயத்தில் பதக்கங்களைக் குவிப்பதற்கு நம் பாரதத்தில் எந்த ஆண் மகனும் முயற்சி செய்யவில்லையா என்ற மனக் குறையினைப் போக்கி விட்டது பகதூர் பிரசாத்தின் பேட்டி. வருகின்ற நவம்பர் 89ல் புது தில்லியில் நிகழவிருக்கும் விளையாட்டுப் போட்டிகளில் பிரசாத் புதிய சாதனைகளைப் படைக்க கல்கி வாசகர்களின் சார்பில் நல்வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

திருச்சி — 5. தமிழ்தாசன்.

* ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தால் வரும் நிர்வாகம் குறித்த கேள்விக்கு அளிக்கப்பட்டிருந்த நராசாரின் பதில் அவரின் தனித் தன்மையையும், தனிப்பட்ட முறையில் யாரையும் எதிர்க்கும் மனநிலை இல்லை என்பதையும் தென்னத் தெளிவாக்கியது.

சோளிங்கர். ஆ. மாதவராமன்.

* பிரபா அவர்களின் ‘பெண்மை’ சிறுகதை மிகவும் பாதித்தது. ஏனெனில் இந்த பத்மா நிஜம். அவளது வலியும் வேதனையும் நிஜம்.

திருச்சி — 4. தாயு. செந்தில் குமார்.

* சமுதாயத்தைக் கட்டிக் காக்க வேண்டிய காவல்காரர்களின் முறைகேடான நடத்தையையும், ஒரு நிரபராதியின் உள்ளக் குமுறலையும், உணர்ச்சிகளையும் துல்லியமாக படம் பிடித்துக் காட்டியிருக்கும், கா. க. வே. ரோகிணியின் சீட்டாட்டம் வெகு அருமை.

பாப்பம்பட்டி, பாப்பம்பட்டி பைந்தமிழன்.

* பாபநாசம் சிவன் பற்றிய அவர் மகளின் பேட்டி, ஒரு நிறைவான மனிதருடன் நெருங்கிப் பழகிய உணர்வை ஏற்படுத்தியது.

கும்பகோணம், ஆர். ராகவன்.

* ஹரிதாஸ் 1943ல் வெளியானது. எனவே, இப்போது எழுபத்தாறு வயது நிறைந்த திரு. சுந்தரராஜனுக்கு அப்பொழுது முப்பது வயது இருந்திருக்க வேண்டும். அந்த வயதில் அம்மாவிடம் முறுக்கும், அப்பாவிடம் மிட்டாயும் வாங்கிச் சாப்பிட்டிருக்க முடியாது. தயவு செய்து வாசகர்களின் காதுகளில் பூச் சுற்றாதீர்கள்.

சென்னை — 35. ஆர். சுப்பிரமணியன்.

* கல்கி 17.9.89 இதழில் “கற்பனை டெல்லியில்; கலை வடிவம் காஞ்சியில்!” என்ற கட்டுரையில் தில்லையாடி வள்ளியம்மை “கடும் நோய்வாய்ப்பட்டுச் சிறையிலேயே இறந்தார்” என்று குறிப்பிடப்பட்டிருப்பது தவறு. சிறைச்சாலையில் வள்ளியம்மைக்கு உடல்நலம் கெட்டது உண்மை. ஆனால் காந்தியடிகளுக்கும் ‘ஸ்மட்ஸ்’ துரைக்கும் ஏற்பட்ட தாற்காலிக ஒப்பந்தத்தின் காரணமாகத் தண்டனைக் காலம் முடிவதற்கு முன்பே விடுதலை செய்யப்பட்டார்.

உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த அவரை நோக்கி, காந்தியடிகள், “வள்ளியம்மா! நீ சிறை சென்றதற்கு வருந்துகிறாயா?” என்று கேட்டார். “வருந்தமா! இப்போது கூட இன்னொரு தடவை கைது செய்யப்பட்டால், நான் சிறைக்குச் செல்லத் தயார்” என்றார் அந்த தியாகச் சுடர். இவ்வுரையாடல் நிகழ்ந்த சில நாட்களுக்குப் பின்னரே வள்ளியம்மை இறந்தார்.

...ஊர், சொ. மு. முத்து.



என் உயிர்த் தோழன்

பாரதிராஜா

அத்தியாயம் 25

தருமனின் சபதம்!

கட்சித் தலைவருடன் காரில் புறப்பட்ட தென்னவன், சென்னை மாநகரில் நுழைந்த அதே நேரத்தில் தருமன் தனது பனியனுள் சுருட்டிச் செருகிய கட்சிச் செய்தித்தாளுடன் வேக வேகமாகத் தனது குடிசைக்குள் பிரவேசித்தான்.

''இந்தாம்மே சிட்டு... விசயம் தெரியுமா உனக்கு? நம்ம் தலைவர் கீறாரே அவர் இல்லாடி கணக்கா ஒரு ஆளைப் புடிச்சு நம்ம கட்சி இளைஞர் அணித் தலைவராப் போட்டுக்கிறாரும்மே. கட்சிலே அந்தப் போஸ்டுக்கு இன்னா டவுரு தெரியுமா...? அஆம்... சொம்மா கெடையாது! அந்த எடத்தை எப்படியாச்சும் புடிக்கனும்னு நம்ம கட்சியிலேயே எம்மாம்பேரு ட்ரை பண்ணியிருப்பாங்க...? அல்லாத்தையும் வுட்டுட்டு, தலைவரு அந்தாளைப் போட்டுக்கறாருன்னா சொம்மாவா? இன்னா... இல்லாடிதான். இன்னா... நான் சொல்றது எப்படி கரீக்டா இருக்க முடியும்னு பாக்கறியா? இந்தாம்மே நான் வலிக்கறது ரிக்ஷாதான். ஆனாலும் பாலிடிக்ஸ்னு வந்துச்சின்னா நம்ம கட்சியைப் பொறுத்தவரைக்கும் நமக்கு எல்லா மேட்டரும் அத்துப்படிம்மே!''

தருமன் மூச்சு விடாது இவ்வளவு பேசியதற்கும் சிட்டு தலையைக் கூட ஆட்டாது, மௌனமாகவே நின்றிருந்தாள். ஆனால் இதெல்லாம் தருமனுக்குப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தவில்லை. அவனுக்குத் தனக்கிருக்கும் அரசியல் ஞானத்தைச் சிட்டுவிடம் தெளிவாக்க வேண்டும் என்பதே குறிக்கோளாய் இருந்தது. அவன் மேலும் தொடர்ந்தான்.

''அட இவ்ளோ எதுக்கும்மே... கரீக்டா ஒன் மன்த்துக்கு மின்னயே நான் சொன்னேன் பங்கியாண்ட... டேய் நம்ம கட்சில இப்பல்லாம் ஒருத்தரு மீட்டிங் பேசிக்கினுகீறாரே ஆதவன்னு... அவரு பாரு பெரிய ஆளா வருவாருன்னிட்டு. நான் நெனச்சா மாதிரியே தலைவரு அவரை எம்மாம் பெரிய லெவல்லே ஒக்கார வெச்சிட்டாரு பாரு... எப்பவும் இளைஞர் அணித் தலைவரு பதவிக்கு எலெக்ஷன் வெச்சி, அப்பாலேதான் தேர்ந்தெடுப்பாங்க. ஆனா தலைவரு சேலத்துலே நடந்த கூட்டத்துலேயே இவருதான் தலைவருன்னு இஸ்டெயிட்டாச் சொல்லிட்டாரு...

''அவரு இந்நேரத்துக்கெல்லாம் மெட்ராஸுக்கு வந்துருப்பாரு. நான் போய் ஆளு எப்படிக்கீறாருன்னு கண்டுக்கினு வந்துர்றேன். வரட்டாம்மே...?''

சொல்லியவன் அவள் பதிலுக்கும் காத்திராமல் அங்கிருந்து அகன்றான்.

சிட்டு சிந்தனையிலாழ்ந்தாள். அரசியல் போன்ற விஷயங்களெல்லாம் அவளது வட்டத்துக்கு அப்பாற்பட்டது என்றாலும், தருமன் அவ்வப்போது பேசும் விஷயங்கள் மூலம் சிறந்த பேச்சாளர்களெல்லாம் அரசியலில் ஒரு செல்வாக்கோடு விளங்குவார்கள் என்று அவள் புரிந்து வைத்திருந்தாள். ஆனால் அந்த விஷயத்தையே சிட்டுவால் ஜீரணிக்க முடியவில்லை. அழகாகப் பேசிய ஓர் அயோக்கியனின் வார்த்தை ஜாலத்தில் சிக்கித்தான் சிட்டு சீரழியவிருந்தாள். இப்போது தனக்குத் தாலி கட்டியவனும் இது போன்ற பேச்சாளிகளை நம்பி அவர்கள் நடத்தும் அரசியலில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பதை அவளால் கற்பனையில் கூட ஒத்துப் போக முடியவில்லை. அவள், மொத்தத்தில் அழகாகவும், மனத்தைக் கவரும் வகையிலும் பேசுபவர் யாராயிருந்தாலும் அடியோடு வெறுத்தாள்.

தானும் முடிந்தவரை பேசாமலேயே இருந்தாள். அழகாகப் பேசக் கூடிய அனைவருமே அயோக்கியர்களாகத்தான் இருக்க முடியும் என்பதில் அசைக்க முடியாத ஒரு நம்பிக்கை வைத்திருந்தாள். இப்படியிருக்க, தருமன் தனது கட்சித் தலைவர், பேச்சு சாதுர்யத்துக்காகவே ஒருவனைப் பொறுப்பான ஒரு பதவியில் நியமித்து விட்டார் என்று சொன்னது, அவளுக்கு அவளையும் அறியாமலேயே அந்த ஆதவன் மீது அடக்க முடியாத ஆத்திரத்தையும், எரிச்சலையும் உண்டாக்கியது.

சரியான சந்தர்ப்பம் அமையுமானால் எப்பாடு பட்டாவது அவள் தருமனிடத்தில் குடிகொண்டிருக்கும் அரசியல் வெறியை அடியோடு வேரறுக்க வேண்டும் என்று முடிவு செய்தாள். பாவம், தருமனும், அரசியலும் என்பது கர்ணனும், கவச


குண்டலமும் என்பதை அவள் அறிந்திருக்க வில்லை.

சுவரில் தொங்கும் காலண்டர்கள் மட்டும் யார் எக்கேடு கெட்டாலும் தங்கள் தேதிகளை இழந்து அவசரமாக இளைத்து வந்ததின் விளைவு, வெகு சீக்கிரத்தில் தமிழகம் மீண்டும் ஒரு தேர்தலைச் சந்திக்க வேண்டிய கட்டத்தை நெருங்கி, ஓர் அவசர அரசியல் போர்க்களமாய் மாறத் தன்னைத் தயார் படுத்திக் கொண்டது.

தருமனை அரசியல் ஈடுபாட்டிலிருந்து திசை திருப்பி, எப்படியாவது அவனை அரசியல் போதையிலிருந்து மீட்க வேண்டும் என்று சிட்டு உத்தேசித்திருந்த அதே சமயத்தில், தருமன் துள்ளிக் குதித்துக் கொண்டு உற்சாகத்தின் உச்சியை எட்டிக் கொண்டிருந்தான்.

தருமனின் துள்ளலுக்குக் காரணம் அன்று காலை செய்தித்தாளில் தேர்தல் நடத்தப்படவிருக்கும் தேதி அறிவிக்கப்பட்டிருந்ததை பங்கி அவனிடம் படித்துக் காட்டியதே! தருமன் அதிசுறுசுறுப்பாகியிருந்தான். அவனுக்கு விஷயத்தை உடனே சிட்டுவிடம் சொல்லிவிட வேண்டும் என்ற தவிப்பிருந்தது. நேரே குடிசைக்கு வந்தான்.

''சிட்டு... விஷயம் தெரியுமா உனக்கு? எலெக்ஷனுக்குத் தேதி குறிச்சாச்சுமே. கரீக்டா அடுத்த மாசம் 30 — ஆம் தேதி எலெக்ஷனு. எண்ணி நாப்பது நாள்கீதுமே. தோ பாருமே சிட்டு... நீதான் வாயிலே நொளையாத பேருல்லாம் பெரிய பெரிய சாமி கும்பிடுறியே கொஞ்சம் பக்தியா வேண்டிக்கமே... இந்தத் தபா நம்ம கட்சி தான் கெலிக்கணும். அதும்... போன வாட்டியே கெலிக்க வேண்டியது. இப்ப அத்தப் பத்திப் பேசி இன்னா... ஆவப் போவுது? அட... அப்பாலே சிட்டு... இன்னொரு முக்கியமான விசயம் உங்கிட்டே சொல்லணும்... எலெக்ஷனு வேலைன்னு ஆரம்பிச்சுட்டா அப்பாலே நமக்கு டூட்டியெல்லாம் டைட் ஆயிடும். நைட்லேயெல்லாம் நேரத்துக்கு ஊட்டாண்ட வர முடியாது. நீதாம்மே பாத்து அட்ஜெஸ்டு பண்ணிக்கணும். அது பாரும்மே நாம சொம்மா வோட்டைப் போட்டுட்டு ஊட்டுலே குந்திக்கினுகிறவனா இருந்தா நமக்கு அன்னிக்கு மட்டும்தான் வேலை. நாம அப்பிடிக் கெடையாதே. நமக்கு கட்சிலே வேலையெல்லாம் இதே...''



14 — ஆம் பக்க விடை:

கல்லறை என்பதே சரி. முழுக்க முழுக்க பாலிஷ் செய்யப்பட்ட பளபளப்பான கருங்கல் பாளங்களினால் ஆனது. அமெரிக்காவில் ஏக கிராக்கி இதற்கு! தனித் தனியாகப் பிரித்துக் கப்பலேற்றினால் அங்கு போய் இணைத்துக் கொள்ளலாம். மதிப்பு ஐந்து லட்ச ரூபாய்! வருடத்தில் பத்துக் கோடி ரூபாய்க்கு இம் மாதிரி கல்லறைகள் தயாரித்து ஏற்றுமதி செய்ய முடியும் என்கிறார் ஜெம்கிரானைட்ஸ் நிறுவனத் தலைவர் வீரமணி. ஆனால் இந்தப் பளபளப்புக் கற்கள் தயாரித்து ஏற்றுமதி செய்யும் தொழிலில் ஏகப்பட்ட பிரச்னைகளாம். அவற்றுக்குச் சமாதி கட்டினால், அந்நியச் செலாவணியில் இந்தியா சக்கைப் போடு போட முடியும் என்கிறார்!

— வீ.

தருமன் பேசிக் கொண்டே போக, அதற்கு ஈடுகொடுத்துச் சிட்டுவின் கோபம் ஏறிக் கொண்டே போனது. அவள் மௌனத்தைப் பாஷையாக்கித் தன் கண்களால் தனக்கு இதிலெல்லாம் அக்கறையில்லை என்பதை விளக்கிக் கொண்டிருந்தாள். ஆனால் தருமனின் புத்திக்கு அவளது 'மௌனம்' சம்மதத்துக்கான அறிகுறியாகத் தான் எட்டியது.

"மறக்காம வேண்டிக்கம்மே... நம்ம கட்சி தான் ஜெலிக்கணும். நான் வரட்டா..." என்று சொல்லி முடித்தவன் கட்சித் தலைமை அலுவலகத்தில் இருந்தான்.

அங்கிருந்த ஒரு பெரியவரை அணுகி, "அண்ணே, நம்ம 82 — வது வட்டத்துலே இன்னிலேர்ந்தே வேலையெல்லாம் ஆரம்பிச்சுடலாம்னுகிறேன்."

பெரியவர் வாயிலிருந்து வெற்றிலைக் குதப்பலை வெளியேற்றிவிட்டு, "தருமா இன்னம் எந்தத் தொகுதிலே யார் நிக்கப் போறான்றதே தெரியாது. இனிதான் யார் யாருக்கு டிக்கெட் கெடைக்கும்கற சமாசாரமே முடிவாகப் போவுது. அதுக்குள்ள நீ பறக்கறியே..."

"அட நீங்க இன்னாண்ணே? எல்லாப் பேமானிங்க மாதிரியா நாம கட்சி நடத்துறோம்? யாரு எங்க நின்னா நமக்கு இன்னா...? நிக்கப் போறது நம்ம கட்சிச் சின்னத்துலேதானே... அத்தாலேதான் இப்பப் புடிச்சே நம்ம சின்னம் வரையறதுக்கு எடம் புடிச்சிட்டேன்னு வை... அப்பாலே நம்ம எடத்துலே வேறே எவனும் வந்து அவன் கட்சிச் சின்னத்தை வரையறது கொள்றதெல்லாம் வெச்சிக்க மாட்டானுங்க. இன்னா நான் சொல்றது... அது மட்டுமில்லேண்ணே... இந்தத் தபா சிட்டியிலே எங்க பார்த்தாலும் நம்ம சின்னம் தான் கண்ணுக்குத் தெரியணும். அடுத்த கட்சிக்காரன் பேரெழுத எடம் கெடைக்காம பேஜாராவணும். அப்படிப் பண்ணிட்டம்னு வை... அப்பாலே நமக்குப் பெரிசா பிரச்னையே கெடையாது..."

"தருமா நான் சொன்னாலும் நீ கேட்கப் போறதில்லே... நீ உன் போக்குலதான் போவே... உனக்குச் சரின்னு தோன்றதையே நீ செய்யி... ஒரு வகையிலே பார்த்தா நீ சொல்றதுகூடச் சரின்னுதான் படுது."

"அண்ணே அதுமட்டுமில்லே. இந்தத் தபா நம்ப தொகுதியிலே யார் நின்னாலும் சரி, அவுங்களுக்காக நம்ம குப்பத்துலேர்ந்து ஆளாளுகிட்டே துட்டு வசூல் செஞ்சு, ஒரு தொகை வெச்சிகினுகிறேன். அத்த வைச்சி நானே பிட் நோட்டீசு, போஸ்டருன்னு ஒரு லெவலுக்குச் சமாளிச்சிடறேன். மத்த படி இந்தக் கொடித் துணியெல்லாம் கண்ட கஸ்மாலங்க கைல குடுக்க வாணாம்... இவுனுங்க அத்த ப்ளாக்குல வித்துத் துன்னுடுவானுங்க... பொறுக்கிங்க... அத்தாலே நீங்க அத்தையெல்லாம் வெவரமான பார்ட்டிங்களாண்ட குடுங்க."

"அட உன் ஏரியா சமாசாரம் மொத்தமும் நீதான் தருமா எப்பவுமே கவனிச்சுக்குவே. அப்புறம் இப்ப என்ன புதுசா இதையெல்லாம் கேட்டுக்கிட்டு...? முக்கால் வாசி இடங்கள்லே நம்ம பார்ட்டி டெபாசிட்டே போனப்ப கூட உன் தொகுதி எம். எல். ஏ. மட்டும் வீடிங் மெஜாரிட்டிலே ஜெயிச்சாரே அது என்ன சாதாரண விஷயமா? அத்தாலயே உன் ஏரியாவுல நிக்கறதுக்கு ஏகப்பட்ட போட்டி தருமா. நீ எதுவும் கேக்கவே வேணா... எல்லாம் ஆட்டோமாடிக்கா நடக்கும். இந்த வாரத்துக்குள்ளே யாராரு நிக்கறது எந்தெந்தத் தொகுதின்னு எல்லா விஷயமுமே தெரிஞ்சுடும். அதுக்கப்புறந்தான் இதெல்லாத்தையும் நாம்ப கவனிக்கச் செய்ய முடியும். இந்தத் தொகுதி விவகாரமெல்லாம் முடிஞ்சதும் நானே எல்லா விஷயத்தையும் உன் கைலே ஒப்படைச்சிடறேன்."

"சரிதாண்ணே, அப்ப எல்லாத்தையும் நீ கவனிக்கச் செஞ்சிடு. இன்னொரு முக்கியமான விஷயம்... 'இந்தத் தேர்தல்ல நாம ஆட்சியைப் புடிக்கக் கோட்டைல குந்துறோம். அப்டி இல்ல... இந்தத் தருமனை உசிரோட பார்க்க முடியாது.' இத்த ஒரு சவாலா ஏத்துக்கினுகிறேன். நான் வர்றேண்ணே..." என்ற தருமன் ஒரு தீர்மானத்தோடு அவ்விடத்தை விட்டு அகன்றான்.

அதே நேரம் கட்சித் தலைவர் தனது கட்சியின் பொதுச் செயலாளர், மற்றும் இதர பெருந்தலைகளுடன் அமர்ந்து வரப் போகும் தேர்தலில் தங்கள் கட்சியிலிருந்து யார் யாரை எந்தெந்தத் தொகுதியில் நிற்க வைக்கலாம் என்பதை அலசி ஆராய்ந்து ஒரு தீர்மானத்திற்கு வந்திருந்தார். தேர்தலில் போட்டியிடுவதற்கான 'டிக்கெட்டுக்கு' விண்ணப்பித்திருந்தவர்களில் இளைஞர் அணியின் தலைவர் 'அக்னி ஆதவன்' எனும் தென்னவனும் ஒருவன்!

(தொடரும்)


அழகுமிகு கோ-ஆப்டெக்ஸ்.
அதை அணிந்திருப்பது யாரென்று பாருங்கள்!
அழகான நிறங்கள், நயமான நெசவு, நேர்த்தியான கோபுர பார்டர். பொலிவுடன் கூடிய உங்கள் புதிய தோற்றத்தில் நீங்கள் பெருமிதம் கொண்டு மகிழ்வீர்கள் — தமிழ்நாடு கைத்தறித் துணிகளில்...
பருத்தி, பாலியெஸ்டர், பட்டுப்புடவைகள் / சர்ட்டிங் / சூட்டிங் / திரைச்சீலைத் துணிகள் / படுக்கை விரிப்புகள் / துவாலைகள் / வேட்டிகள் / லுங்கிகள்.
100% தூய பட்டு, அசல் சரிகை.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனைக் கைத்தறி வகைகள்
DIPR 1089/MS/89/HTA

கையில் இருந்த சீட்டுக் கட்டை அப்படியே போட்டு விட்டு எழுந்து விட்டார் சுந்தரவரதன். அவருடைய பரபரப்பையும் அவசரத்தையும் கண்டு, கூடவே எழுந்து விட்டனர் கோபாலன், ராமனாதன், சங்கரன், அண்ணாஜி ராவ் ஆகியோர்.

''என்னடா ஆச்சு? இருக்கானா, போயிட்டானா?'' என்று கேட்டார் சுந்தரவரதன்.

மேல் மூச்சு வாங்க, வியர்வை ஆறாகப் பெருக, கண்கள் நீரை அருவியாகக் கொட்ட வந்து நின்ற சிறுவனின் கையில், ஒரு கடிதம் எந்த நிமிடமும் காற்றில் பறக்கத் துடித்துக் கொண்டிருந்தது.

''கேட்டால் சொல்லேண்டா. மக்கு மாதிரி நிக்கறியே. 'பிச்சை' இருக்கானா போயிட்டானா?''

''போய்க்கொண்டே இருக்கார் மாமா,'' என்று கூறிய பொழுது அந்தச் சிறுவனின் தொண்டையிலிருந்து துக்கம் அழுகையாக வெடித்தது.

''அடடே, இன்னும் போகலையா?''

''நீ ஓடி வந்த வேகத்தைப் பார்த்து அவன் போயிட்டான்னு நினைச்சோமே நாங்கள்.''

''நினைவு இருக்கா, போயிடுத்தாடா?''

''ஏதாவது ஏற்பாடு செய்து வைத்திருக்கானா?''

தலைக்கு ஒரு கேள்வியாகக் கேட்ட ஒவ்வொருவரையும் வெறுப்புடன் நோக்கினான் சிறுவன். ஏதேதோ கேள்விகளை யெல்லாம் கேட்கத் தெரிந்த அந்த வயதான மனிதர்களில் ஒருவருக்குக் கூட சம்பந்தமுள்ள ஒரே ஒரு கேள்வியை மட்டும் கேட்கத் தோன்றவில்லையே என்று அங்கலாய்த்து விட்டான் சிறுவன். அவன் கையில் உள்ள கடிதம் ஒருவர் கண்ணில் கூடவா படவில்லை?

ஒவ்வொருவரும் அந்தக் கடிதத்தைப் பெற்றுக்கொள்ளத் தயங்கினார்கள். அந்தக்

பிச்சை மாமாவின் கடிதம்



சுஜன்

கடிதத்தில் அவர் என்ன எழுதியிருப்பார் என்று அனைவருமே ஊகித்திருந்தனர்.

''நான் இறந்த பிறகு நீங்களாவது எனக்குக் கொள்ளி போட்டுக் கரையேற்ற வேண்டும். தயவுசெய்து என்னை அனாதையாகச் சாக விடாதீர்கள்'' என்றுதான் எழுதியிருப்பார். இப்போ இருக்கிற விலைவாசியில் இதை வேறு இழுத்துப் போட்டுக் கொண்டால் 'என் பாடு அவ்வளவுதான்' என்று எண்ணி அனைவருமே தயங்கினார்கள்.

''யாராவது வாங்கிக்கோங்க மாமா...''

சுந்தரவரதன் மௌனமாக இருந்தார். பிச்சை இவருடைய குடும்பத்திற்காகத் தன் உடம்பை ஓடாய்த் தேய்த்திருக்கிறார். அவருடைய மனைவி ஆண்டாள் இரண்டு மாதங்கள் ஆஸ்பத்திரியில் படுத்திருந்த பொழுது ஆஸ்பத்திரிக்கும் வீட்டிற்கும் எவ்வளவு நடை நடந்திருக்கிறார் பிச்சை.

சுந்தரவரதனிடம் பணம் இல்லாமல் இல்லை. அவர் நினைத்தால், இன்னும் ஐந்து நிமிடத்திலோ, பத்து நிமிடத்திலோ இந்த உலகத்தை விட்டுப் பிரிந்து போகும் 'பிச்சை' என்ற பரோபகாரிக்கு ஈமக் கடன்களை நல்லபடியாக முடிக்கலாம். ஆனால் மனிதருக்கு மனம் வரவில்லையே!

இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒருநாள் அவருடைய மாப்பிள்ளை ஸ்ரீராமனுக்குக் கண் பார்வை திடீரென்று போய் விட்டது. செய்தி வந்த அன்று சுந்தரவரதனும், அவருடைய மனைவியும் கூட நிர்க்கதியாகி விட்ட மகளைப் பற்றி அவ்வளவு அழுது புலம்பவில்லை. ஆனால், பிச்சையோ பக்கத்தில் உள்ள கோயிலின் த்வஜஸ்தம்பத்தில் முட்டிக் கொண்டு, 'கடவுளே, உனக்குக் கண் இல்லையா? என் குழந்தைக்கா இந்தக் கதி வர வேண்டும்?'' என்று கதறியழுதார். அப்படிப்பட்ட மனிதருக்கு, சுந்தரவரதன் இன்று மிகவும் நன்றாகவே நன்றியைக் காட்டி விட்டார்!

''யாராவது மாமா... ப்ளீஸ்...'' — சிறுவன்.

''அண்ணாஜி ராவ்! கையில் வாங்கிக் கொண்டால் பாவம் ஒட்டிக் கொள்ளாதுங்காணும். என்னதான் பிச்சை எழுதியிருக்கான்னு வாசியுங்களேன்...'' — என்றார் சுந்தரவரதன்.

''சீட்டுக்கட்டில் தான் உமக்குச் சாமர்த்தியம் இல்லை. மனுஷ்யாளைப் புரிஞ்சுக்கிறதிலே கூடக் கொஞ்சமும் சாமர்த்தியம் இல்லையே! எனக்குத்தான் நாற்பது வயசு முடியறதுக்குள்ளேயே கண் பார்வை மங்கிப் போயிடுச்சே!''

உண்மைதான் அது என்றாலும், நாற்றுக்கு நூறு சதவிகிதம் கொஞ்சங் கூட அப்பழுக்கில்லாமல் செய்நன்றியைக் கொன்று விட்டார் அண்ணாஜி ராவ். பார்வைக் குறைவு காரணமாக, ஒரு நாள் மாலையில் வயல் வெளியில் வந்து கொண்டிருந்த போது, ஒரு கிணற்றில் தவறி விழுந்து விட்டார் அவர். அப்பொழுது, தெய்வம் போல எங்கிருந்தோ வந்து, அந்தக் கிணற்றில் குதித்து நீச்சல் தெரியாத அவரைக் காப்பாற்றினார் பிச்சை. அன்று அவர் உயிரைக் காப்பாற்றியவர் இன்று தன் உயிர் போகத் துடிக்கிறார். ஹூம்...! அண்ணாஜி ராவ் நகரவே இல்லை!

''சங்கரா!'' — என்றார் சுந்தரவரதன்.

''மாதக் கடைசி மாமா, கையில் செப்பால் அடித்த காசு கூடக் கிடையாது மாமா.''

ஒருவராவது அந்தக் கடிதத்தை வாங்கி, அதில் பிச்சை என்னதான் எழுதியிருக்கிறார் என்று பார்க்கக் கூட விரும்பவில்லை.

அவரால் அந்தக் கிராமத்தில் பலன் அடையாதவரே இல்லை. ஒவ்வொரு வீட்டிலும் அவர் வாழ்ந்து வந்தார்.


''மாமா'' — என்று மறுபடியும் குரல் கொடுத்தான் சிறுவன்.

சுந்தரவரதன் எழுந்து வீட்டினுள் போய் விடலாமா என்று எண்ணினார். அந்த நேரம் பார்த்துத் தம் மனைவி ஆண்டாள் வந்து கதவிடுக்கில் தலையை நீட்டிக் 'கொஞ்சம் உள்ளே வரீங்களா' — என்று கூப்பிட மாட்டாளா என்று கூடத் தவித்துப் போனார்.

''நேரமாகிறது மாமா'' — பரபரத்தான் சிறுவன்.

''என்னடா அப்படிக் கொள்ளை போகிறது? ஏன், எங்கேயாவது டி.வி., சினிமா பார்க்கணுமோ?''

''சினிமாவா? ஐயோ, மாமா நீங்களா இப்படிப் பேசறீங்க? அங்கே பிச்சை மாமா உயிருக்குப் போராடிண்டிருக்கார். எனக்கு ஸ்கூல் ஃபீஸ் கட்டறதிலேருந்து, அவர் செய்



●● செய்து காட்டுபவர்கள்தான் குழந்தைக்குத் தேவை; குறை காண்பவர்கள் அல்ல.

●● முதல் நாள் விருந்தாளி, இரண்டாம் நாள் பாரம்; மூன்றாம் நாள் அட்டை!

— லேபோலேயி.

— எம். ரவிச்சந்திரன்.

திருக்கிற உதவிக்கு... உங்களைப் போல நன்றி கெட்டவனாக இருக்க விரும்பலே... சே!' — என்று அடிவயிற்றிலிருந்து அலறிய அந்த நன்றி மறவாத சிறுவன், சமயம் பார்த்து உள்ளே நுழையச் சென்ற சுந்தரவரதனின் கைகளில் 'பட்'டென்று அந்தக் கடிதத்தைத் திணித்து விட்டான்.

''பிச்சை மாமா சாகறப்போ அவருக்கு என் கையாலேதான் இரண்டு சொட்டுத் தண்ணீர் விடணும். அதுதான் நான் அவருக்குக் காட்டக் கூடிய நன்றி. மாமா, நீங்கள் யாரும் சிரமப்பட்டு அங்கே வர வேண்டாம். எல்லோரும் இங்கேயே சீட்டாடிண்டிருங்கோ. பிச்சை மாமாவின் கடைசிப் பயணம் இந்த வழியாத்தான் போகும். உங்களுக்கு நேரம் இருந்தா, ஒரு நிமிஷம் சீட்டைக் கீழே போட்டுட்டு வேடிக்கை பாருங்க'' — என்று சொல்லி அழுது கொண்டே திரும்பிச் சென்றான்.

சுந்தரவரதனின் கைகளில் அந்தக் கடிதம் அடைக்கலமானதும், மற்றவர் முகங்களில் திடீரென்று அசாதாரண அமைதி வந்து குடி புகுந்தது.

''படியுங்கள் ஸ்வாமி'' — என்றார் அண்ணாஜிராவ்.

எல்லோரையும் முறைத்துப் பார்த்தார் சுந்தரவரதன்.

'பாவிகளா! எனக்கு ஒரு பெரிய செலவை வைத்து விட்டு, வேடிக்கையா பார்க்கிறீர்கள்' — என்று கொதித்தது அவர் மனம்.

வாசல் கதவு படீரென்று பாதி திறந்தது. சுந்தரவரதனின் வீட்டுக் கதவிடுக்கு வழியாக முகத்தை நீட்டிய அவர் மனைவி, ''என்னங்க அது கடுதாசி? பட்டணத்திலேருந்து மக எழுதியிருக்காளா? மாப்பிள்ளைக்குக் கண் பார்வை சீக்கிரமே வந்திடும்னு நேற்று ஆஞ்சநேயர் உபாசகர் சொன்னாரே' — என்றதும் அவர் மனக் கொதிப்பு இன்னும் அதிகமாகியது.

''ஆமாம்... அது ஒண்ணுதான் கொறைச்சல்'' என்று நொந்து கொண்டே சொன்னவரின் கைகளிலிருந்து கடிதம் நழுவிக் கீழே விழுந்தது.

சில மணி நேரம் சென்ற பிறகு, அந்தச் சிறுவன் திரும்பி வந்து தேம்பித் தேம்பி அழுது கொண்டே, ''மாமா! நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். பிச்சை மாமா போய் விட்டார். உங்ககிட்டே கடிதத்தைக் கொடுத்து விட்டு நான் அங்கே போன போதுதான் சொன்னாங்க... உங்களைக் கையோட கூட்டி வரலையான்னு கேட்ட போது எனக்குப் புரியவில்லை. அப்புறம் தான் சொன்னாங்க, தான் இறந்த உடனே, தன் கண்களை எடுத்து உங்க மாப்பிள்ளைக்குப் பொருத்த ஏற்பாடு செய்யணும்னு பிச்சை மாமா இந்த லெட்டர்லே எழுதியிருக்காராம். பிச்சை மாமாவைப் போல ஒரு மாமாவை இனிமே நாங்க எப்போ பார்க்கப் போறோம்'' — என்று சொல்லி அழுது புலம்பினான்.

அப்போதுதான் கீழே கிடந்த கடிதத்தை எடுத்துப் படித்துப் பார்த்தார் சுந்தரவரதன். என்ன செய்வது? தாமதமாகி விட்டதால் இனி பிச்சையின் கண்கள் உபயோகப் படாதே!



வழுக்கைத் தலையர்: எனக்கு இருக்கிற முடியே ரொம்பக் குறைவு. அதனால் முடி வெட்டக் குறைவாகக் கூலி வாங்கிக் கொள்ள வேண்டும்!

முடி திருத்துபவர்: தேடித் தேடி முடி வெட்ட வேண்டியிருக்கிறது! அதனால் நீங்கள் அதிகக் கூலி தரவேண்டும்!

— குறும்பன்.

டாக்டர் ராம் மனோகர் லோஹியா தேர்தல் கூட்டம் ஒன்றில் பேசி முடித்து அமர்ந்தார்.

கூட்டத்தில் ஒருவர்: ''தங்கள் கட்சியின் தேர்தல் அறிக்கைக்கும், காங்கிரஸ் கட்சியின் அறிக்கைக்கும் அதிக வித்தியாசமில்லையே! அது ஆட்சியிலிருந்து அனுபவப்பட்ட கட்சி. அதற்கே வோட்டுப் போடுவதுதானே புத்திசாலித்தனம்?''

லோஹியா: ''இல்லை. வீட்டில் உங்கள் தாயார் ரொட்டி சுடுகிறார்கள். அதை உண்ணத் தக்க வகையில் புரட்டிப் புரட்டிப் போடுகிறார்கள். ஒரே பக்கத்தில் போட்டால் அது காந்திக் கருகி வாய்க்கு வழங்காமல் போய் விடும். அதுபோலத்தான் ஒரே கட்சி தொடர்ந்து பதவியில் இருப்பதும்.''

— ரா. வி.



கல்கி 29.10.'89 தீபாவளி சிறப்பிதழில்...

ஏழாவது இரவு

மர்மச் சித்திரத் தொடர்
கதை: அபர்ணா நாயுடு
படம்: ராமு



வல்லமை தாராயோ?

பட்டுக்கோட்டை பிரபாகர்

எழுதும்



சுறுகத் தொடர் கதை ஆரம்பம்!



இளமைச் சுறுசுறுப்புடன் ஒரு மூதறிஞர்

இச்செயல் ரொம்ப நல்ல காரியம். என்னால் இதை என்றுமே சாதிக்க முடிந்ததில்லை. இன்றையகாங்கிரஸ் காரருக்கும்கம்யூனிஸ்ட் டுக்கும் இடையில் நான் ஒரு வித்தியாசமும்

வயதான காலத்தில் ஒருவருக்கு எவ்வளவுக்கெவ்வளவு மகிழ்ச்சிகள் ஏற்படுமோ அவ்வளவுக்கு வேதனைகளும் உண்டாகின்றன. ஸி. ஆரின் மகன் ஸி. ஆர். கிருஷ்ணசாமி ஹிந்து பத்திரிகையிலிருந்து ஓய்வு பெற்றபின் இப்போது ஹைதராபாத்தில் டெக்கான் கிரானிகலின் ஆசிரியராக இருந்து வந்தார். அவருக்கு ஏற்பட்ட மாரடைப்பு அவரைப் படுக்கையில் தள்ளியது. அதன் பிறகு அவர் உடல்நிலை தேறி வழக்கம் போல் நடமாடினார் என்று கூறுவதற்கேயில்லை. இந்தத் துயரைத் தாங்கிக் கொள்ள ஸி. ஆருக்கு ஓரளவு உதவியது, அவரது கொள்ளுப் பேரக் குழந்தைகள் அவருடைய ஆசிகளைப் பெற, அவ்வப்போது வந்து போனதுதான். அநேகமாக அவர்கள் அனைவருக்கும் பெயர் சூட்டியது அவர்தான். பேத்தி தாராவுக்கு ஒரு குழந்தை பிறந்திருக்கிறது என்று தெரிய வந்ததுமே அவர், ''விநாயக்கை வரவேற்கிறேன்'' என்று தந்தி கொடுத்தார். குழந்தை ''விநாயக்'' என்ற பெயருடனேயே வளர்ந்தான். பேரன் ராமச்சந்திரா, மனைவி இந்துவுடன் அப்போது ஆக்ஸ்ஃபோர்டில் வசித்து வந்தார். அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த குழந்தை இந்திய மண்ணில் பிறக்க வேண்டுமா, அந்நிய மண்ணிலா என்ற விவாதம் அவர்களிடையே எழுந்தது அறிந்து ஸி. ஆர்., ''ஏன், எனக்கு ஆக்ஸ்ஃபோர்டில் பிறந்த ஒரு கொள்ளுப் பேரனோ பேத்தியோ இருக்கக் கூடாதா என்ன?'' என்று கேட்டு எழுதினார். இந்திய அரசுக்கு எவ்வளவு தெளிவாக அறிவுரைகள் வழங்கி வந்தாரோ அதேபோல பேரன் பேத்திகளுக்கும் அளித்து வந்தார்! கோபால் (கோபால கிருஷ்ண காந்தி) வீணை வாசிக்கக் கற்றுக் கொள்கிறார் என்று கேள்விப்பட்டதும் பின்வருமாறு பேரனுக்கு எழுதினார்:

''உனது விரல்களையும் செவிகளையும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகிற காணவில்லை என்பது போலவே 'ஸ' வேறு 'ப' வேறு என்று என்னால் சுவரங்களைப் பிரித்து உணர முடிந்ததில்லை! ஆனால் ஒன்று: வீணை வாசிப்பதுடன் நில்லாது நீ அதனுடன் சேர்ந்து பாடவும் வேண்டும். உன் குரலைப் பற்றி நீ கூச்சப்பட்டுக் கொண்டிருந்தால் வீணையின் நாதம் உன் இதய நாதமாக ஒலிக்காது!''

ஸி. ஆர். ஆங்கிலத்தைக் கையாளும் சிறப்பினைப் பாராட்டி மவுண்ட் பேட்டன் — முதன் முறையாக அல்ல, மீண்டும் ஒரு முறை — அவருக்கு எழுதினார். ஸி. ஆரின் பதில்:

''என்னை வெகுவாகப் புகழ்ந்திருக்கிறீர்கள். ஆங்கிலத்தை நான் கையாள்வதில் சிறப்புக்கள் இருக்குமானால் அவற்றுக்குக் காரணம் இரண்டு நூல்களே. ஒன்று கோல்ட்ஸ்மித்தின் எல்லா எழுத்துக்களையும் உள்ளடக்கிய புத்தகம். 'குனோப்' பிரசுரம். மற்றொன்று அடிஸன், ஸ்டீல் மற்றும் அவரது தோழர்கள் ஸ்பெக்டேட்டர் இதழில் எழுதிய எல்லாக் கட்டுரைகளின் தொகுப்பு. இந்த இரு புத்தகங்களையும் நான் எனது பதினாறாவது வயதில் பேராசையுடன் படித்து ரசித்து மகிழ்ந்தேன்.'' (3.12.66)

* மவுண்ட்பேட்டன்:
''வெகுவான புகழ்ச்சி''



* செஸ்டர் பௌல்ஸ்:
''பதவி பறிபோய் விடும்!''





● கோபாலகிருஷ்ண காந்தி: ''இந்த தாத்தா ஒளிக்கட்டும்!''

ஸி. ஆருக்கு வயதுதான் கூடிக் கொண்டிருந்ததே தவிர அவர் கிழவராக மறுத்துக் கொண்டிருந்தார்! நிகழ்கால அரசியல், சமுதாயப் பிரச்னைகளில் அக்கறை எடுத்துக் கொண்டதுடன் அவை பற்றி சுவாரஸ்யமாகப் பேசவும் எழுதவும் செய்தார். எதுவுமே அவருக்கு ஒதுக்க வேண்டிய சிறிய விஷயமாகவும் தோன்ற வில்லை; எதையுமே தமது ஆற்றலுக்கு அப்பாற்பட்ட பெரிய விஷயமாகவும், அவர் கருதவில்லை:

வால்மீகி, வியாசர் போன்றவர்களைப் பற்றி எழுதச் சொல்லிவிட்டு அந்தப் புத்த கத்துக்கு ''இந்தியக் கவிஞர்கள்'' என்று சாகித்திய அகாதமி பெயர் சூட்டுவது தவறு என்று எடுத்துக்காட்டினார். அவர்கள் கவிஞர்கள் மட்டுமல்ல; அந்தச் சொல் மிகவும் பலவீனமாக ஒலிக்கிறது என்பது அவர் வாதம்.

'காந்தி ஸ்மாரக் நிதி' தன்னிடம் உள்ள பணத்தை எப்படி முதலீடு செய்யலாம் என்பதற்கு அதற்குக் கிடைத்துள்ள சட்ட ஆலோசனை முற்றிலும் தவறானது என்று எச்சரித்தார்.

பனாரஸ் ஹிந்து பல்கலைக் கழகத்தின் பெயரிலிருந்து 'ஹிந்து' என்ற சொல்லை நீக்கி விடுவது தவறானது என்றும் கருத்துத் தெரிவித்தார். 'அந்த நிறுவனத்தின் பெயர் என்னவாக இருப்பினும் அது ஒரு தேசிய அமைப்பே. 'ஹிந்து' என்ற நாளிதழ் ஒரு தேசியப் பத்திரிகைதான். அதன் பெயரை மாற்றி விடவா முடியும்? ஒரு பிரதிபலனும் இல்லாமல் பெயர்களை மாற்றிக் கொண் டிருப்பது சரித்திரத்தை அவமதிப்பதா கும்.'

சென்னை மாநகராட்சி, இடுகாட்டில் உடல்களை எரிக்க மின்சாரத்தால் இயங்கும் உபகரணத்தை நிறுவ வேண்டும் என்று வற்புறுத்தினார் ஸி. ஆர்.

சில சமயம் அவர் அபத்தமான யோச னைகளை உள்ளடக்கிய கடிதங்களுக்குக் கூட பதிலளித்தார்! ஆனால் அந்தப் பதில்கள் மிக சுவாரஸ்யமாக அமைந்து மின்னலெனப் பளிச்சிட்டன:

இந்தியாவுக்கு எதிராகச் சீனாவும் பாகிஸ் தானும் மிகவும் நெருங்கி வந்து கொண் டிருந்த காலகட்டத்தில், பம்பாயிலிருந்த ஒருவர், அன்றைய மத்திய அரசு ஓர் அனைத்துக் கட்சி ஆட்சிக்கு வழிவிட்டு ஒதுங்க வேண்டும் என்றும், அந்தத் தேசிய அரசுக்கு ஸி. ஆரே தலைமை தாங்க வேண் டும் என்றும், இதற்கு அமெரிக்கா தார்மீக ஆதரவு தரவேண்டுமென்றும், இதை யொட்டி தாம் அமெரிக்க தூதர் செஸ்டர் பௌல்ஸைச் சந்தித்துப் பேசத் தயாராக இருப்பதாகவும் கடிதம் எழுதினார்!

ஸி. ஆரின் பதில்: ''செஸ்டர் பௌல்ஸ் ஓர் அந்நிய மனிதர். அவர் இப்போதுள்ள மத்திய அரசை வெளியேற்ற உங்களுக்கோ எனக்கோ உதவ முடியாது. ஒருவேளை அவர் புத்தி பிசகிப் போய் இந்த முயற்சியில் ஈடுபட்டாரானால், நமது மத்திய அரசின் பதவி நீக்கத்துக்குப் பதில், செஸ்டர் பௌல் ஸின் பதவி நீக்கமே நிகழும்!''

ஒரு வங்காள பிராமணர், ஸி. ஆரின் மகள் லக்ஷ்மிக்குப் பிறந்த குழந்தைகள் பிராமணர்கள்தானா என்று கேட்டு எழுதி யிருந்தார். ஸி. ஆரின் பதில்:

''நமது பண்டை நாள் சட்டத்தின் அடிப் படையில் உங்களுக்கு நான் பதிலளிக்கி றேன்... என் மகளின் மகன் ராமு பிராமணன் அல்ல. என் மகளின் பிராம ணியம் அவள் மகனுக்கு தேவதாஸ் காந்தி மூலமாகப் போய்ச் சேராது. ஆனால் ராமு வேறு எந்தப் பிராமணனையும் விட உயர்ந் தவன்.''

வாதத்திறனுடன் கிண்டலையும் கேலியை யும் குழைத்துத் தரும் ஆற்றல் ஸி. ஆருக்கு இருந்தது. அதே சமயம் தவறுகளை உணர்ந்து, எந்தவிதமான சால்ஜாப்பும் இல்லாமல் ஒப்புக் கொண்டு, மன்னிப்புக் கேட்கிற நேர்மையும் நெஞ்சுறுதியும் ராஜா ஜிக்கு உண்டு. இதையும் அவரது சில கடி தங்கள் நிரூபிக்கின்றன.

(தொடரும்)

நீதிபதி: நீ ஏன் சாமி சிலையைக் கடத் தினாய்?''

கைதி: சாமிக்கு அமெரிக்காவைச் சுற் றிக் காட்டறதா வேண்டிக்கிட் டேன்!

— சேதுராமன்.




TRADE MARK
வசந்தா
பனியன்கள் & ஜட்டிகள்
OUR QUALITIES
COMTEX
FINE
COMMANDER
INTERLOCK
COMFORT
PLAIN
CHALLENGE
FINE INTERLOCK
குழந்தைகள் முதல் பெரியவர் வரை அணிய சுகமானது.
'வசந்தா' பனியன்கள்
வசந்தா நிட்டிங் பேக்டரி திருப்பூர்-638604


அமுதசுரபி ''தீபாவளி'' மலரை இலவசமாகப் பெறவேண்டுமா ?
மாதந்தோறும் ''அமுதசுரபி'' இதழை இலவசமாகப் பெறவேண்டுமா ?
ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அருளிய ''அமுதமொழி'' புத்தகமும், பரிசு பெற்ற (5 குறுநாவல்கள்) புத்தகமும் சிறப்பு அன்பளிப்புகளாகப் பெறவேண்டுமா ?
உடனே தாங்கள் செய்யவேண்டியது :
''ஸ்ரீராம் டிரஸ்ட் பெயரில் ரூ.500/- டிபாஸிட் செய்யுங்கள்.''
SHRIRAM GROUP COMPANIES
MADRAS
மற்றும் விவரங்களுக்கு :
ஸ்ரீராம் டிரஸ்ட்
தபால் பை எண். 5043, 145, லிங்கிச் செட்டி தெரு,
தொலைபேசி எண்: 528545, சென்னை 600 001.

கருணாநிதிக்கு ராஜராஜன் பரிசு வழங்கப்பட்டது பற்றி...?

* கு. நாகராஜன், குருசாமிபாளையம்.

? 'ஜெயலலிதாவின் சேலைக்குள்ளே தேசிய மயத்தைக் காண்கிறார் வாழப்பாடி' என அமைச்சர் பொன்முடி கூறியுள்ளாரே?

! தி.மு.க.வினரால் சேலை அரசியலை விட முடியாது போலிருக்கிறது! உங்களுக்கு வோட்டுப் போடுபவர்களில் பெண்களும் உண்டு — மறவாதீர்கள்!

* ஆ. பன்னீர் செல்வம், மாதனூர்.

? சில மாதங்களுக்கு முன் கலைஞரை 'திராவிடர்களின் தூண்' என்று கூறிய ஆர். எம். வீ. தற்போது 'கலைஞரை ஆட்சியை விட்டு இறக்கும் வரை ஓய மாட்டேன்' என்கிறாரே?

! அந்தத் தூண் மீது சாய்ந்து முதுகு சொறிந்து கொள்ளக் கூட வசதிப்படவில்லையே, என்ன செய்ய?

* எம். எம். கோபால், பம்பாய்.

? 'உத்தம புருஷன்' பார்த்து விட்டீர்களா?

! என் மனைவி பார்த்துக் கொண்டே இருக்கிறாள்!

* காசி தாசன், கீழ் கொவளவேடு.

? குழந்தையில் கழுதைப் பால் சாப்பிட்டால் பெரியவனானதும் கோபம் வருமாமே, உண்மையா?

! இதுபோன்ற கேள்விகளைக் கேட்டால் கழுதைப் பால் குடிக்காதபோதிலும் கோபம் வரும்!

* கே. ஆர். தேவேந்திரன், வேலூர்.

? ஒரு பெண் ஊழியரை மானபங்கப் படுத்த முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்ட கோவா சட்டப் பேரவைத் தலைவரின் ராஜினாமா பற்றி?

! எதிர்க்கட்சித் தலைவருக்கும், பத்திரிகைகளுக்கும் அதை விடச் சிறப்பாக கோவா மகளிருக்கும் கிடைத்த வெற்றி.

* பூவண்ணன், திருமயம்.

? அரிசி, பாமாயில் கேட்டு பிரதமருக்குக் கடிதம் எழுதச் சொன்ன முதல்வரின் யோசனையால் பலன் கிடைக்குமா?

! தபால் கார்டுகளில் மக்கள் எழுதியிருந்தால் தபால் துறைக்குக் கூட பலன் கிடையாது. ஒவ்வொரு தபால் கார்டும் நஷ்டத்தைத்தான் தேடித் தருகிறது.

* புனிதவல்லி இளங்கோ, கடலூர்.*

? ''எம்டன் வேலை'' என்றால் என்ன?

! முதல் உலக மகா யுத்தத்தின் போது ஒரு ஜெர்மானியக் கப்பல் சென்னைக்கருகே வந்து குண்டு போட்டது. எல்லாரும் பயந்து நடுங்கினார்கள். ஆனால் அந்த எம்டன் அதற்குப் பிறகு தொடர்ந்து தாக்காமல் நழுவி விட்டது. எனவே இன்று ஒரு பேர்





* விமானி சௌதாமினி * ஞானபீடப் பரிசு

வழி பெரிதாக ஒரு குண்டைத் தூக்கிப் போட்டால் மட்டும் எம்டனாகி விட மாட்டான்! அப்புறம் இருக்கிற இடம் தெரியாமல் சாது போல் அடங்கி விட்டால்தான் அவன் எம்டன்! ஒரு சமீபத்திய உதாரணம் வேண்டுமானால், அருண்சிங்கைக் குறிப்பிடலாம்!

* பி. சுபாகர், சேலம்.

? ஞானபீடப் பரிசு பெற்ற தெலுங்குக் கவிஞரைப் பற்றி...?

! சினிமா பாடல்களை ஒருவர் எழுதுவதாலேயே அவர் இலக்கியத் தரமற்றவர் என்று சிலர் முடிவு கட்டி விடுவது சரியில்லை என்று நிரூபிக்க வந்தவர்! தெலுங்கு பல்கலைக் கழகத் துணைவேந்தரான டாக்டர் நாராயண ரெட்டி, 3000 சினிமா பாடல்களை எழுதியவர். என். டி. ஆரின்

விசுவாமித்திரருக்கு ஆறு பாடல்கள் எழுதியுள்ளார். இவரது "விசுவம்பரா" காவியம் மூன்று பரிசுகளைப் பெற்றுள்ளது. "அநியாயத்துக்கும் பிற்போக்குத்தனத்துக்கும் எதிரான உணர்ச்சிகளைத் தூண்டவே கவிதைகள் எழுதுகிறேன்" என்கிறார்.

* எம். ராஜேந்திரன், லால்குடி.

? 'இனிமேல் நான் அரசியலுக்கு வர மாட்டேன். அரசியலில் ஈடுபட்டு உ. பி. முதல்வராகவோ அல்லது டெல்லி மந்திரியாகவோ வருவதைவிடச் சினிமாவில் நடிப்பதையே விரும்புகிறேன்' என்று அமிதாப் பச்சன் கூறியுள்ளாரே?

! ஓகோ! ராஜீவ் நட்பு காரணமாக, அரசியலுக்கு வந்த அவருக்கு, மத்திய மந்திரி பதவி, முதல் மந்திரி பதவி முதலியவற்றின் மீது ஒரு கண் இருந்திருக்கிறது என்பது இப்போதுதானே தெரிகிறது!

* **ரெஜினா, ஜோஸஃபின், திருபுவனம்.**

? திருச்சியில் புதிதாகத் துவங்கியுள்ள விவசாயக் கல்லூரிக்கு அன்பில் பெயரைச் சூட்டியிருக்கிறார்களே? 'உயிருள்ளவர்கள் பெயரை வைக்கக் கூடாது' என்ற கொள்கை உயிரிழந்து விட்டதா?


'ஓய மாட்டேன்!'


* சேலை அரசியல் -


* பெரிய துயரம்


* பதவி மீது கண்!


* ராஜராஜன் விருது

! அப்படியானால் சர்க்காரியா பெயரைச் சூட்டுவது இன்னும் பொருத்தமாக இருக்கும்!

* எஸ். பி. மருதாசலம், சானார்பாளையம்.

? திருநாவுக்கரசு ஓரம் கட்டப்பட்டு விட்டாரே?

! அதனாலென்ன. கம்பெனி கொடுக்க கே. கே. எஸ். எஸ். ஆர். இருக்கிறாரே!

* கே. பி. எஸ். மணியன், குடியாத்தம்.

? இந்தியன் ஏர்லைன்ஸ் பெண்களே நிர்வகிக்கும் விமான சர்வீஸைத் துவக்கியது பற்றி...?

! ஏற்கெனவே நிமிர்ந்த நன்னடை; நேர் கொண்ட பார்வை! இனி கால் தரையில் பாவாத நடை; உயரே நோக்கிய பார்வை!

* **மஞ்சுதேவன், கல்கத்தா.**

? டோர்னியர் விபத்து பற்றி...?

! அதை விடப் பெரிய துயரம் ராஜீவ் ஸ்பானிஷ் விமானம் வேண்டாம் என்று மறுத்து இவற்றை வாங்க ஆர்வம் காட்டினார் என்பதாக வெளிவந்துள்ள செய்தி!

* **டி. சீனிவாசன், சென்னை.**

? கருணாநிதிக்கு 'ராஜராஜன் பரிசு' வழங்கப்பட்டது பற்றி...?

! அவர் முதல்வராக வந்தவுடனேயே எதிர்பார்க்கப்பட்டதுதான். கொடுத்துவிட்டுப் போகட்டும். இதே விருது பெற்றுள்ள வேறு பலருக்கு அவர் எழுத்து ஒன்றும் தரத்தில் குறைந்து போய் விடவில்லை. ஆனால் விருதை அளித்த நடுவர்கள், பொன்னாடையும் பூமாலையும் தாங்கிக் கும்பலாக முதல்வர் வீடு சென்று அவருக்கு மரியாதை செய்து... சே! அசிங்கப்படுத்தி விட்டார்கள். இவர்கள், செல்வி ஜெயலலிதா ஏதாவது நாவல் எழுதி, புத்தகமாகப் பிரசுரமாகியிருக்கிறதா என்று இப்போதே தேடிப் பார்த்து வைத்துக் கொள்வது நல்லது!

* **பாக்கியமுத்து, திருச்சி.**


? தமிழ்நாட்டில் தமிழக அரசின் பரிசுச் சீட்டுக்கள் மட்டும்தான் விற்பனையாக வேண்டுமாமே?

! ஆமாம்! தமிழனைக் கெடுக்கத் தமிழக அரசுக்கு மட்டுமே உரிமை உண்டு!

*** ரூ. 20 பரிசு பெறுபவர்:**

புனிதவல்லி இளங்கோ,
1, பாலசுப்ரமணியர் காலனி,
புதுப்பாளையம், கடலூர் — 1.

சினிமா ஸ்ட்ரைக்: என்ன சிக்கல்?



தமிழ்ப்படவுலகமே ஸ்தம்பித்துப் போயிருக்கிறது. காரணம் இரண்டு மாதங்களாக இழுத்தடிக்கும் வேலை நிறுத்தம். சுமார் ஐம்பதிற்கும் அதிகமான படங்கள் பல்வேறு நிலைகளில் நின்று போயுள்ளன. செப்டம்பர் மூன்றாம் வாரம் வெளியாக வேண்டிய படம், தீபாவளிக்கு ரிலீஸாகுமா என்பது கூடச் சந்தேகமே. தினசரி ஐந்து கோடி ரூபாய் வரை பணப்புழக்கம் இருந்து வந்த சினிமா உலகம், இன்று வறுமையில் வாடுகிறது. ஆயிரக்கணக்கில் வட்டி ஏறிக் கொண்டிருக்கும் கொடுமை தயாரிப்பாளர்களுக்கு என்றால், அன்றாட வாழ்க்கையே பிரச்னையாகி விட்டது, சினிமாவையே முழுமையாய் நம்பியுள்ள சுமார் பதினைந்தாயிரம் குடும்பங்களுக்கு.

லைட் பாய்ஸ் (லைட் மேன் என்று இப்போது பெயர்) சங்கம்தான் ஸ்டிரைக்குக்குப் பிள்ளையார் சுழி போட்டது. அவுட்டோர் தொழிலாளர் சங்கமும் உடன் சேர்ந்து கொள்ள, தொடர்ந்து, அனைத்துத் தொழிலாளர் யூனியன்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட, பிரச்னை தீர்க்கப்படாமல் இன்னும் இழுபறியாய் இருக்கிறது. (செப்.26)

பதினெட்டு யூனியன்கள் விஷயத்தில் பேச்சு வார்த்தையில் சுமுகமான உடன்படிக்கை ஏற்பட்டு விட்டபோதிலும், இன்னும் ஆறு சங்கத்தினருடன் உடன்படிக்கை ஏற்படவில்லை. இந்த ஆறு சங்கங்களில் ஸ்டண்ட் கலைஞர் யூனியன், இசைக் கலைஞர்கள் யூனியன், நடனக் கலைஞர்கள் யூனியன் ஆகிய மூன்றுடன் பேச்சு வார்த்தை நடத்தித் தீர்வு காணத் தயாரிப்பாளர்கள் தயாராகவே இருக்கிறார்கள். ஆனால் சினிமா டிரைவர்கள் யூனியன், சமையல்காரர்கள் சங்கம், மகளிர் சங்கம் (ஷூட்டிங்கின் போது சாப்பாட்டுப் பாத்திரம் தேய்ப்பது போன்ற வேலைகளைச் செய்யும் பெண்களுக்கானது) ஆகிய மூன்று சங்கங்களையும், திரைப்படம் சம்பந்தப்பட்டவையாக ஏற்றுக் கொள்ளத் தயாரிப்பாளர்கள் தயாராக இல்லை.

"கார் டிரைவர், படப்பிடிப்புக்காக நேரம் காலம் பார்க்காமல் உழைக்கிறார்; சமையற்காரர்கள் இல்லாவிட்டால் ஷூட்டிங் ஏது? அதே போலத்தான் மகளிரின் வேலையும் முக்கியமானது" என்று இந்த யூனியன் தலைவர்கள் கூறுகின்றனர்.

இதற்கிடையில் ஜாதி சமாசாரம் இதிலும் புகுந்து கொண்டு, பிரச்னை திசை மாறிப் போக வழி செய்து விடும் போலிருக்கிறது.

தமிழக முதல்வர், இந்த ஸ்டிரைக் குறித்து வருத்தப்படுவதாகவும், தீர்வுக்குப் பெரிதும் முயற்சி செய்வதாகவும் தகவல்.

— ஜூலி.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: டி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.



விசேஷ பண்டிகைச் சலுகை!
விசேஷ பண்டிகைச் சலுகை!
விசேஷ பண்டிகைச் சலுகை!
விசேஷ பண்டிகைச் சலுகை!
ரூ.3 தள்ளுபடி
ரூ.2 தள்ளுபடி
POND'S Sandal Talc
Rs.3 OFF
POND'S Sandal Talc
POND'S Sandal Talc
Rs.2 OFF
POND'S Sandal Talc
பாண்ட்ஸ்
ஸாண்டல் டால்க்
அரிய நறுமணம். மதிப்பில் பொன்னைப் போன்றது.
சரக்கு உள்ளவரையே இச்சலுகை
(இச்சலுகை இல்லாமலும் இந்த பேக் கிடைக்கும்)
HTA 7364

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

"என் மனைவி எது செய்தாலும் அழகு மிளிரும்.
சமையலறையின் டைல்ஸ் நிறத்திலேயே
ரெஃப்ரிஜெரேட்டரும் வேண்டுமென்றாள். நான்
சிரித்துவிட்டேன். ஆனால், அவளோ,
நினைத்தபடி சாதித்து விட்டாள்."



காரணம் ஏதானாலும், விருப்பம் ஒன்றே — கோத்ரெஜ்

SPECTRUM



என்றுமில்லா **விசேஷ** வண்ணங்கள். டெஸர்ட் ஸாண்ட், டஸ்கி ப்ளூ, எலெக்ட்ரிக் ரெட், ஸ்பிரிங் க்ரீன், கல் ப்ளூ, க்ளாஸிக் ஒயிட், இம்பீரியல் ஐவரி, மிஸ்டி க்ரே. எல்லாமே, நீடித்திருக்கும், கவர்ச்சியான **எபொக்ஸி பவுடர் பூச்சுள்ள** ஃபினிஷ் கொண்டவை.

இன்னும் சில உன்னத சிறப்பியல்புகள்:

மெகாஃபோர்ஸ் — கட்டுறுதியான, சக்தித் திறனுள்ள கம்ப்ரெஸர்.

கூல்கார்டு — சர்வதேச தரத்தில் 100% பாலியூரத்தேன் இன்சுலேஷன்.

அல்ட்ராஸ்பேஸ் — திறமுடன் வடிவமைத்த உட்புறம் பொருள்களுக்கு ஏராள இடவசதி அளிக்கிறது.

விரைவான, நம்பகமான சேவைக்கென, பரவலான டீலர் குழு.

கோத்ரெஜ், பல ஆண்டுகளாக மக்களுக்கு நம்பகமான பெயர். இங்கு ஒவ்வொரு நாளும், தொழில் நுட்பத்தை மேம்படுத்தவே செலவிடப் படுகிறது. இன்று, எமது நவீன, தானியங்கி ஆலையிலே, நிஜமாகவே சர்வதேச தரத்திலான ரெஃப்ரிஜெரேட்டர் உருவாகிறது. ஏனெனில், உங்களுக்கு மிகச் சிறந்ததையே நாங்கள் தர விரும்புகிறோம்.

நம்பகம்...அதுவே— Godrej®

HTA 1666